சர்வார்த்த சிந்தாமணி

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 506

சர்வார்த்த சிந்தாமணி

(மூலமும் உரையும்)

சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் :

முனைவர் திருமதி **சத்தியபாமா காமேஸ்வரன்,**
எம்.ஏ, எம்ஃபில்., எம்.எட்., பி.எச்.டி.,
சுவடியியல் பட்டயம்,
சோதிடவியல் பட்டயம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2007]　　　　[விலை : ரூ. 80-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சர்வார்த்த சிந்தாமணி
பதிப்பாசிரியர்	: முனைவர் திருமதி கா. சத்தியபாமா
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	: 506
மொழி	: தமிழ்
பதிப்பு	: முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	: ஆகஸ்டு, 2007
தாள்	: TNPL 17.8 kgs.
நூல் அளவு	: 21 x 14 c.m.
பக்கங்கள்	: 200
படிகள்	: 1000
எழுத்து	: 12
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: சோதிடம்
விலை	: ரூ. 80-00

வெளியீட்டாளர் முகவுரை

ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்பர். அவற்றுள் சோதிடக்கலையும் ஒன்றாகும். இது காலத்தைப் பற்றி ஆராயும் கலையாக விளங்குகிறது. ஒருவன் பிறந்த நாள், கோள்களின் நிலைகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றால் மனித வாழ்வில் ஏற்படக் கூடிய இன்ப துன்பங்களைக் கணித்துக் கூறுவது. தொன்றுதொட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டு வந்துள்ள ஒரு கலை இதுவாகும். நம் முன்னோர்கள் தங்கள் எண்ணங்களை ஓலைச் சுவடிகளாகவும் பின்னாளில் அச்சு நூல்களாகவும் வழிவழியாகச் சோதிடக் குடும்பத்தினர் பெற்றுவரும் அனுபவங்களை பதிவு செய்தும் வந்துள்ளனர்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஓலைச் சுவடிகளில் உள்ள சோதிட நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு வருகிறது. அதிகமான சோதிடச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம் என்ற சிறப்பினை பெற்ற இந்நூலகம் தமிழ்மொழி அல்லாது வடமொழியில் உள்ள சோதிட நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவது மற்றுமோர் தனிச் சிறப்பாகும்.

இப்பதிப்பாசிரியரான முனைவர் திருமதி சத்தியபாமா அவர்கள் இந்நூலகத்தில் உள்ள சர்வார்த்த சிந்தாமணி என்ற தலைப்பில் மூன்று (சுவடி எண்கள் 850 F. 913b, 974) சுவடிகளையும் ஆய்ந்து அவற்றில் சுவடி எண். 850 Fல் அமைந்துள்ள மூல நூலை பதிப்பிக்கும் பணிக்கு எடுத்துக்கொண்டு இதர இரு (சுவடி எண். 913b, 974) சுவடிகளை ஒப்பீட்டிற்குப் பயன்படுத்தியுள்ளார்.

விக்கிரமாதித்ய சக்கரவர்த்தியின் அவையில் இருந்த நவமணிகளில் குறிப்பிடத்தக்கவராகிய வராகமிகிரர் மற்றும்

அவரைப்போன்ற பல்வேறு சோதிட வல்லுநர்களின் நூல்களிலிருந்து முக்கிய சாராம்சங்களை ஒன்று திரட்டி ஸ்ரீவெங்கடேச தெய்வக்ஞர் என்பார் சர்வார்த்த சிந்தாமணி என்ற நூலை வடமொழியில் இயற்றினார்.

இந்நூல் ஆயிரத்துஎண்ணூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட சூத்திரங்களினாலான பதினாறு பகுதிகளைக்கொண்டது. இந்நூல் தமிழில் **சர்வார்த்த சிந்தாமணி** என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நேரடியான மொழிபெயர்பாக அமையாமல் சாரத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. ஆகவே சர்வார்த்த சிந்தாமணியை மொழிபெயர்த்தவர் யார் என்பது தெரியவில்லை. இந்நூலின் பதிப்பாசிரியர் அரிதின் முயன்று நூலின் அமைப்பு, பெயர்க்காரணம், பாடுபொருள், பன்னிரு பாவங்களின் பலன்களைப் பற்றியும் மிகச்சிறந்த ஆய்வு செய்து இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். இந்நூல் சோதிட உலகில் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) சைவத் தமிழ்ப் புலவர் திரு. சாமி. சிவஞானம் எம். ஏ., அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
24-8-2007

பதிப்புரை

ஆயக்கலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்றாக விளங்கும் நுண்கலை, சோதிடக் கலையாகும். இது காலத்தைப் பற்றி ஆராயும் கலையாக விளங்குகிறது. ஒருவன் பிறந்த நாள், கோள்களின் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றால் மனித வாழ்வில் ஏற்படக் கூடிய இன்பதுன்பங்களைக் கணித்துக் கூறுவது. தொன்றுதொட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டு வந்துள்ள இக்கலைக்கு ஆதாரங்களாக விளங்குவன, முன்னோர்களின் எண்ணங்கள் பதித்து வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகளும், பல சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பட்ட அச்சு நூல்களும், வழிவழியாகச் சோதிடக் குடும்பத்தினர் பெற்றுவரும் அனுபவங்களுமாகும். சோதிடக் குடும்பத்தினர் அல்லாதவர்கள் கற்றுக் கொள்ளவும் ஆர்வலர்களும் ஆய்வாலர்களும் பயன்படுத்திக்கொள்ளவும் உதவுவனவாக ஓலைச்சுவடிகளும் அச்சுநூல்களும் விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று கணினி யுகமாக மாறிவிட்டபொழுதும், இக்கலை புதிய பரிமாண வளர்ச்சி பெற்றுக் கணினியின் உதவியோடு மேன்மேலும் வளர்ந்து வருகிறது.

பழந்தமிழ் சோதிட நூல்கள்

தமிழில் சோதிட நூல்கள் குறைந்த எண்ணிக்கையில் கிடைக்கின்றன. இன்று கால வெள்ளத்தால் அழிந்தவை போக எஞ்சிய நிலையில் அரிதாகவே கிடைக்கின்றன. மேலும் சுவடிகள் நூலகங்கள் பலவற்றில் பதிப்பிப்பார் இன்மையால் ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடக்கின்றன.

தமிழில் உள்ள பழைய சோதிட அச்சு நூல்கள் இன்று அரிதாகவே கிடைக்கின்றன. ஐயாசுவாமியம், கண்ணுசுவாமியம், குப்புசுவாமியம், சந்திரகாவியம், சந்திராபரணம், சாதகசிந்தாமணி, சாதகாலங்காரம், சினேந்திரமாலை, சாதக கணிதாமிர்தம் போன்றவை அவற்றுள் சில.

சோதிடக் கலையின் அருமையினையும் மக்களிடையே அக்கலைக்குக் கிடைக்கும் வரவேற்பையும் கருத்தில் கொண்டு பல நிறுவனங்களும் பதிப்பகங்களும் சோதிட நூல்கள் பலவற்றையும் அச்சிட்டு வெளியிட்டு வருகின்றன. அத்தகைய நூல்வெளியீட்டு நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஓலைச் சுவடிகளில் உள்ள சோதிட நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு வருகிறது. அதிகமான சோதிடச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம் என்ற சிறப்பினை உடைய இந்நூலகம், தமிழ்மொழி அல்லாது வடமொழியில் உள்ள சோதிட நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவது தனிச் சிறப்பாகும்.

இன்று இந்நூலகத்தில் வராகர் ஓராசாத்திரம், காலச் சக்கரம், சினேந்திர மாலை, சாதகாலங்காரம், சகாதேவர் நிமித்த சூடாமணி, நட்சத்திர சிந்தாமணி, பஞ்சபட்சி சாஸ்திரம் முதலான தமிழ் சோதிட நூல்களும் பூர்வபராசார்யம், காலப்பிரகாசிகா, சாதகசந்திரிகா முதலான வடமொழி-தமிழ் என இரு மொழிகளில் அமைந்த நூல்களும் ஓலைச் சுவடியில் இருந்து பதிப்பிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. மேலும், இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் ஓலைச் சுவடிகளில் சர்வார்த்த சிந்தாமணி என்ற சோதிட நூலும் காணப்படுகிறது.

சர்வார்த்த சிந்தாமணி சுவடிகள்

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 'சர்வார்த்த சிந்தாமணி' என்ற தலைப்பில் மூன்று சுவடிகள் (சுவடி

எண்கள் 850 F, 913 b, 974) உள்ளன. இச்சுவடிகளில் சுவடி எண் 850 Fல் அமைந்துள்ள மூல நூல் பதிப்பிக்கும் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மற்றும் உள்ள சுவடி எண் 913 b, 974 ஆகிய இரு சுவடிகளும் ஒப்பீட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

மூலநூல்

விக்கிரமாதித்திய சக்கரவர்த்தியின் அவையில் இருந்த நவமணிகளில் குறிப்பிடத்தக்கவராகிய வராகமிகிரர், மற்றும் அவரைப் போன்ற பல்வேறு சோதிட வல்லுநர்களின் நூல்களில் இருந்து முக்கிய சாராம்சங்களை ஒன்று திரட்டி ஸ்ரீ வெங்கடேச தெய்வக்ஞர் என்பார் சர்வார்த்த சிந்தாமணி என்ற நூலை வடமொழியில் இயற்றினார். வடமொழி நூலின் காப்புப் பாடலில், "அப்பய்யாரியரின் குமாரனும், சாஸ்திரங்களை நன்கு பயின்றவரும் வெங்கடேச தெய்வக்ஞனுமாகிய நான், சர்வார்த்த சிந்தாமணி என்னும் இந்தத் தோணியை ஜோதிட சாஸ்திரம் என்னும் பெருங்கடலைக் கடந்து கரையேறுவதற்காகவே தோற்றுவித்து அத்துறையில் ஈடுபடுவோர்க்கு இன்பமூட்டுவேனாகுக.[1]" குறிப்பிடுவதால் இவருடைய தந்தையைப் பற்றியும் இந்நூலின் நோக்கத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. இந்நூல், ஆயிரத்து எண்ணூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட சூத்திரங்களாலான பதினாறு பகுதிகளைக் கொண்டது.

இந்நூல் தமிழில் சர்வார்த்த சிந்தாமணி என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நேரடியான மொழிபெயர்ப்பாக அமையாமல் சாரத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

---

1. 'சிந்தாமணி' (தமிழாக்கம்), சர்வார்த்த சிந்தாமணி(முதல்பாகம்), ப.1.

இதனை,

"கூர்த்தகன் குருவு மென்னக் குறித்துணர் வெங்க டேச
மூர்த்தியே உரைத்தார் கல்லா மூடன்நான் விரிக்க நுற்றேன்"
(பாடல் எண். 25)

"தேடிய வெங்க டேச தேவனும் அருள்செய் தானே"
(பாடல் எண். 93)

"அஞ்சலாம் வெங்க டேசன் அருளினால் உதவ லாமே"
(பாடல் எண். 187)

"வியப்புடன் வெங்க டேச வேதிய சுவாமி சொன்னார்
நயப்புடன் ஊமன் கற்று நவில்வபோல் தமிழ்நான் சொன்னேன்"
(பாடல் எண். 213)

"தந்திரி வெங்க டேசர் தமிழினால் உரைத்தார் என்றே"
(பாடல் எண். 264)

என்ற பல்வேறு சான்றுகள் வழியும் உணர முடிகிறது.

மொழிபெயர்த்தோன்

தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக கணிப்பொறி வழி அனைத்துலக சுவடிகள் விவர அட்டவணையில், சங்கர கவி, சேஷாத்திரி ஆகியோர் சர்வார்த்த சிந்தாமணியைத் தமிழில் மொழிபெயர்த்து உள்ளதாகக் குறிப்பு காணப்படுகிறது. பதிப்பிக்கப்பட்டுள்ள சர்வார்த்த சிந்தாமணி நூலில் தமிழில் மொழிபெயர்த்தோனைப் பற்றிய எந்தச் சான்றாதாரமும் கிடைக்கவில்லை. ஆகவே, சர்வார்த்த சிந்தாமணியை மொழிபெயர்த்தவர் யார் என்பது தெரியவில்லை.

சர்வார்த்த சிந்தாமணி - பெயர்க் காரணம்

தமிழில், அனுபவ நட்ட சாதக சிந்தாமணி, சுந்தரானந்தர் கர்ப்ப சிந்தாமணி, கௌசிக சிந்தாமணி, சமர சிந்தாமணி, சர்வலோக தயாபர சிந்தாமணி, சோதிட கிரக சிந்தாமணி, சோதிட கோட்சார சிந்தாமணி, தசாபுத்தி சிந்தாமணி, நட்சத்திர சிந்தாமணி, நவக்கிரக சிந்தாமணி எனச்

'சிந்தாமணி' என்ற பெயரில் பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது சர்வார்த்த சிந்தாமணி. **'சர்வார்த்த சிந்தாமணி** என்பதற்கு யாவற்றையும் வழங்கும் அற்புதமணி என்பது பொருள். இங்குச் சோதிடம் குறித்து அறிய விரும்பும் யாவருக்கும் அனைத்துச் செய்திகளையும் வழங்கும் அற்புதமான நூலாகையால் இப்பெயர் பெற்றது போலும்'. நன்னூலில் "முதனூல்" என்னும் சூத்திரவுரையில், தன்மையாற்பெயர் பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின என்று மயிலைநாதர் எழுதியிருப்பது இங்கு எண்ணத்தக்கது.

நூலமைப்பு

சர்வார்த்த சிந்தாமணியில் முதலில் இரு காப்புச் செய்யுள்கள் காணப்படுகின்றன. நூலில் 333 அறுசீர் விருத்தங்கள் அமைந்துள்ளன. பன்னிரு பாவங்களின் பலன்களையும் கூறக்கூடிய நூலாக விளங்குவதால், ஒவ்வொரு பாவத்திற்கும் தனித்தனியான பலன்களைக் கூறும் பன்னிரு பகுப்புகளாக அமைந்துள்ளன. இப் பன்னிரு பகுப்புகளில், முதல் பாவத்தில் 24 பாடல்களும், இரண்டாம் பாவத்தில் 68 பாடல்களும், மூன்றாம் பாவத்தில் 17 பாடல்களும், நான்காம் பாவத்தில் 21 பாடல்களும், ஐந்தாம் பாவத்தில் 56 பாடல்களும், ஆறாம் பாவத்தில் 26 பாடல்களும், ஏழாம் பாவத்தில் 35 பாடல்களும், எட்டாம் பாவத்தில் 16 பாடல்களும், ஒன்பதாம் பாவத்தில் 25 பாடல்களும், பத்தாம் பாவத்தில் 18 பாடல்களும், பதினோராம் பாவத்தில் 9 பாடல்களும், பன்னிரண்டாம் பாவத்தில் 18 பாடல்களும் அமைந்துள்ளன. இவற்றுள் இரண்டாம் பாவத்தில் அதிக எண்ணிக்கையாக 68 பாடல்களும், பதினோராம் பாவத்தில் குறைந்த எண்ணிக்கையாக ஒன்பது பாடல்களும் காணப்படுகின்றன. அந்தம் ஆதித்து வரும் அந்தாதி யாப்பில் அமைந்துள்ள இந்நூல் மூலமும் உரையுமாக அமைந்துள்ளது.

நூலின் பாடுபொருள்

சர்வார்த்த சிந்தாமணி பன்னிரு பாவங்களிலும் கிரகங்களால் ஏற்படும் பலன்களைக் கூறுவதாகும்.

"முன்னுளோர் புகழும் வேத வாரியில் மொண்டு கொண்டு
அன்னம்முன் காகம் ஆடும் அடவதாய்த் தமிழை ஆய்ந்து
பன்னிரு கிரகக் கோளின் குணபலன் தனையே கூறக்
கன்னமும் பழகும் துய்க்கும் கற்பகக் கன்று காப்பாம்."

என்ற காப்புச் செய்யுளால் இதனை அறியலாம். இந்நூலின் மூல நூலின் சோதிடம் குறித்த பொது செய்திகள், பன்னிரு பாவங்களைக் குறித்த செய்திகள், திசாபுத்தி குறித்த செய்திகள் என பல்வேறு செய்திகள் அடங்கி இருக்க, பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சர்வார்த்த சிந்தாமணி பன்னிரு பாவப் பலன்களின் சாரத்தை எடுத்துரைக்கிறது. இதனை,

" மறுவத்த வடநூ லான வாரியை மேகம் வாங்கி
சருவத்த சிந்தா மமியைத் தமிழலங் காரம்ந டாத்த
கிறுபத்தை ஒளிந்து ஞானக் கிரிடியாம் புளிகீழ் மேவும்
பெருசித்தாம் நங்கை ஈன்ற பிள்ளைபொற் பாதம் காப்பே"

என்ற காப்புச் செய்யுளால் மூலநூலின் சாரத்தைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளதை அறியலாம்.

'சாதக சூடாமணி' என்ற சோதிட நூல், சர்வார்த்த சிந்தாமணி பன்னிரு பாவங்களின் பலன்களைக் கூறும் நூலாக இதே பாடல்களுடன் காணப்படுறது. ஆனால் நூலின் தொடக்கத்தில் 'பிரசூதி லட்சணம்' என்ற பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் 32 அறுசீர் விருத்தப் பாடல்கள் அமைந்துள்ளன. இதனையடுத்து, 'பாவப்பொது' என்ற பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் 27 அறுசீர் விருத்தப் பாடல்கள் அமைந்துள்ளன. பன்னிரு பாவப் பலன்களைக் கூறும் பகுதி அனைத்தும் அந்தாதி யாப்பில் அமைந்திருக்க, பிரசூதிலட்சணம், பாவப்பொது ஆகிய இரு பகுதிகளும் அங்ஙனம் அமையவில்லை என்பது சுட்டத்தக்கது.

இதனையன்றி, பழைய சாதக சூடாமணி நூல் பதிப்புகளில் சாதக சூடாமணி என்னும் நவக்கிரக சிந்தாமணி என்று நூலின் தலைப்பு அமைந்துள்ளது. இவற்றைக் கொண்டு பார்க்கும்பொழுது பிரசூதிலட்சணம், பொது, பன்னிரு பாவபலன்கள் அமைந்த நூல் சாதக சூடாமணி அல்லது நவக்கிரக சிந்தாமணி எனவும், அதே நூலின் பன்னிரு பாவங்கள் மட்டும் அமைந்த பகுதி சர்வார்த்த சிந்தாமணி எனவும், தலைப்பிடப்பட்டுக் காணப்படுகின்றன. என்பதை அறியலாம். மூலநூலின் பெயராலேயே இங்குப் பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சர்வார்த்த சிந்தாமணி எனப் பெயர் பெற்றுள்ளது என்பது சுட்டத்தக்க செய்தியாகும்.

சர்வார்த்த சிந்தாமணி பன்னிரு பாவங்களின் பலன்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சாதக முறைப்படி இலக்கனம் குறித்தவுடன் முதல்வீடு முதல் பாவம் எனவும், இரண்டாவது வீடு இரண்டாம் பாவம் எனவும், இவ்வாறாகப் பன்னிரண்டாம் வீடு பன்னிரண்டாம் பாவம் எனவும் குறிக்கப்படுகிறது. தனிப்பட்ட வீட்டின் குணநலன்களைக் கூறும்பொழுது, இராசி எனவும் அந்த வீட்டில் ஆட்சி செய்யும் கிரகம் இராசிநாதன் எனவும் குறிப்பிடப்படுகிறது. சந்திரன் நின்றவீடு சென்ம இராசி எனவும், அந்த வீட்டில் ஆட்சி பெறும் கிரகம் சென்ம இராசிநாதன் எனவும் குறிக்கப்படுகிறது. அதைப்போலவே, இலக்கனத்தில் ஆட்சிபெறும் கிரகம் இலக்கனாதிபதி என்று சொல்லப்படுகிறது. இவற்றிற்குப் பன்னிரு பாவங்களின் ஆதிபத்தியங்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. இராசி, ஸ்தானம், வீடு, பாவம் ஆகியவை ஒரே பொருளைத்தருவனவாகும்.

மேஷம் முதலான பன்னிரு இராசிகளில் நவக்கிரகங்கள் நின்ற பலனையும், சென்ன இலக்கனப்படி பன்னிரு வீடுகளில் நவக்கிரகங்கள் நின்ற பலனையும் இலக்கனப்படி பன்னிரு பாவங்களுக்கும் அதிபதிகள் பன்னிரு பாவங்களில் மாறி நின்ற சேர்க்கை பலனையும் நவக்கிரகங்களுக்கு இடையே உள்ள இயற்கை சுபாவ நட்பு பகை பலன்களையும்

கணக்கிட்டுக் கூறும் பலன் சர்வார்த்த சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது.

பன்னிரண்டு பாவங்களின் பலன்களை கூறும் இந்நூல், சோதிடத்தைக் கற்றுக்கொள்ள விரும்புவோர்க்கும் சோதிட ஆர்வலர்களுக்கும் சோதிட ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, சர்வார்த்த சிந்தாமணி எனும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப., அவர்களுக்கும் இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணை நின்ற சரசுவதி மகால் நூலக நிர்வாக அலுவலர் மற்றும் நூல் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் , எம். ஏ., அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலக கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. சத்தியபாமா,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

---- ❋ ---

பொருளடக்கம்

1. முதல் பாவம்

புகழுடையோன் 2
நோயாளி 3
சோரர் பயம் 4
விரைவாத நோயாளி 4
ஆயுதக் காயம் 5
மெலிந்த உடல் 6
பருமனான உடல் 6
நல்ல உடல் 7
உடல் பருமனும் மெலிவும் 7
பாக்கியவான் 8
மத்தியில் சௌக்கியம் 8
சுக வாழ்க்கை 9
அபகீர்த்தி அடைதல் 10
மத்திம பாக்கியவான் 11
புகழ், பாக்கியம் உடையவன் 11
செல்வம் உடையவன் 12
புகழ் உடையவன் 12
பாக்கியவான் 13

2. இரண்டாம் பாவம்

கண்குறைபாடு 14
ஆந்தைக் கண் 15
அரைக்கண் பார்வை 15
கண்ணில் காயம் 16
இரத்த, நல்ல கண் 16
பலரைக் காக்கும் யோகம் 17
கஷ்ட யோகம் 18
பலரைக் காப்பாற்றும் யோகம் 18
செல்வனும் ஏழையும் 19
செல்வன் 19
நிட்சேப யோகம் உடையவன் 20
அழகன் 21
கோபி, சாத்திரங்கள் கற்றவன் 21

செல்வன் 22
ஏழை 22
பரோபகாரி 23
சோதிடமேதை 23
வேதாந்தி 24
ஆறு சாத்திரங்களில் வல்லவன் 26
செல்வன் 26
நிதிநிட்சேப யோகம் உடையவன் 28
செல்வன் 28
சகோதரர் வழி செல்வம் 29
பிள்ளைகள் வழி செல்வம் 30
மனைவியின் செல்வம் 31
தந்தையின் வழி செல்வம் 31
செல்வத்தை இழத்தல் 32
பெண்வழி செல்வம் இழத்தல் 34
செல்வன் 35
பிச்சைக்காரன் 37
பைத்தியக்காரன் 37
தாயின் மரணம் 38
காயமடைதல் 38
பற்களை இழத்தல் 40
போசன சௌக்கியம் 41
உணவில்லாதவன் 41
வெள்ளிப் பாத்திரத்தில் உணவு உண்பவன் 42
ஓட்டில் உணவு உண்பவன் 42
உயர்ந்த உணவு 43
சிரார்த்த உணவு உண்ணுபவன் 44
பெரியோரைப் பழிப்பவன் 45
தீயவைப் பேசுபவன் 45
பாம்பு பயம் 46

3. மூன்றாம் பாவம்

சகோதரர் அழிவு 47
சகோதரர் இன்மை 48

சகோதரர் அழிவு 48
சகோதர இலாபம் 49
தைரியசாலி 50
தைரியமும் வீரமும் 50
போர்வீரன் 51
திறமைசாலி, கலகம் செய்பவன் 52
கழுத்து நோய் உள்ளவன் 52
செவி ஆபரணம் அணிபவன் 53
கழுத்து நோய் உள்ளவன் 54
நீலக்கல் செவி ஆபரணம் அணிபவன் 54
புராணங்களைக் கேட்பவன் 55

4. நான்காம் பாவம்

பிறன்மனை விரும்புவன் 56
பிற பெண்கள் சேர்க்கை 57
விபச்சாரம் செய்பவன் 57
பிற பெண்களை விரும்புபவன் 58
பிற ஆடவரால் பிள்ளைப்பெறுபவள் 58
கர்ப்ப மனைவி மரணம் 59
நடத்தைக் கெட்டவன் 60
மனைவி விஷத்தால் மரணம் 60
களத்திர எண்ணிக்கை 61
இருதாரம் உடையவன் 61
மூன்று தாரம், முப்பது வயதில் தாரம் 62
வாகன யோகம் 62
அரசாளும் யோகம் 64
சக்கரவர்த்தி 64
அதிக இடங்கள், அதிக வீடுகளுக்கு சொந்தக்காரன் 65
அதிக வீடுகளுக்குச் சொந்தக்காரன் 65

5. ஐந்தாம் பாவம்

தத்துப் புத்திரன் 67
வெகுபுத்திர யோகம் 68
வயோதிகத்தில் தத்துபுத்திரன் 68
புத்திரர் இன்மை 69

தத்துபுத்திரன், கணவன், குழந்தை இன்மை	69
பகசும்பனம்	70
நான்கு களத்திரங்கள்	70
ஐந்து களத்திரங்கள்	71
குள்ள மனைவி, அனுகூல மனைவி	71
மூன்று களத்திரம் உடையவன்	72
அற்பாயுள் உடையவன்	72
தீர்க்காயுளும் இராசவல்லமையும் உடையவன்	73
தீர்க்காயுள் உடையவன்	73
தோசம் தீர்தல்	74
சாமரயோகம்	74
ஆற்றல் உடைவன்	75
தீர்க்காயுள் உடையவன்	75
தீர்க்காயுள், வாகன யோகம் உடையவன்	76
சர்ப்ப பீதியும் களரோகமும் கொண்டவன்	76
நீர்கண்டம், மிருக கண்டம் உடையவன்	77
நல்லவீடு உடையவன்	77
நல்லவீடும் செல்வமும் உடையவன்	78
உறவினர்களால் போற்றப்படுபவன்	79
இடிந்த வீட்டில் இருப்பவன்	79
சுற்றத்தாரிடம் பகை உடையவன்	80
தாய் போன்றவருடன் உறவு கொள்பவன்	80
சத்திரிய தந்தை	82
மாற்றான் பிள்ளை	82
வாகனத்தால் கேடு	83
வீடு, வாகன யோகம்	83
மூன்று வாகனங்கள்	84
தீய நடத்தை உடையவன்	84
கீழான பெண்களுடன் உறவு கொள்பவன்	85
நடத்தைக் கெட்ட களத்திரம் உடையவன்	85
மாற்றான் பிள்ளை	86
கர்பத்துடன் மனைவி மரணம்	86
மூன்று தாரங்கள் உடையவன்	87
நல்ல மனைவி உடையவன்	87
அதிக பெண்களுடன் தொடர்பு கொள்பவன்	88

அதிக பிள்ளைகளைப் பெறுபவன்	88
தத்துப் புத்திரன்	89
மாற்றான் பிள்ளை	89
புத்திரர் அழிவு	90
தத்தெடுப்பவன்	90
புத்திரர் முகம் அறியாதவன்	91
தீவிரபுத்தி உடையவன்	91
புத்திரர் அழிவு	92
பைத்தியக்காரன்	92
ஞானி	93
பெண் குழந்தைகள் அதிகம் உள்ளவன்	93
6. ஆறாம் பாவம்	
சத்தி குன்மம்	94
குட்டரோகம், இரத்த சோகை	95
வாத சூலை	96
வெட்டுக் காயத்தால் மரணம்	96
விஷத்தால் மரணம்	97
மரத்திலிருந்து விழுந்து மரணம்	97
பெண்ணால் மரணம்	98
மரத்திலிருந்து விழுந்து மரணம்	98
பெண்ணால் மரணம்	99
தூக்கிலிடப்பட்டு மரணம்	99
ஆயுதத்தால் மரணம்	100
சயரோகம்	101
தீராத நோய்	101
சயரோகம்	102
மூத்திரக்கிரிச்சனம், பீனிசநோய்	102
சத்திகுன்மம்	103
எதிரிகளால் மரணம்	103
தீயினால் மரணம்	104
தாயாதிகள் வெற்றி	105
தீயினால் மரணம்	105
இனிப்புப் பண்டங்களில் விருப்பம்	106
7. ஏழாம் பாவம்	
களத்திரம் மரணம்	107

பல பெண்களுடன் தொடர்பு 108
அதிக களத்திரம் 108
பொல்லாத மனைவி 109
நல்ல மனைவி 109
கடமை, பக்தியுடைய மனைவி 110
தர்ம குணம் கொண்ட மனைவி 110
நல்ல மனைவி 111
குழந்தைகளைப் பெறுபவர் 111
அன்னிய மனைவி 112
மனைவியால் அவமானம் 112
நல்ல மனைவி 113
இளமையில் திருமணம் 113
பாக்கியமும் தாரமும் இல்லாதவன் 114
தூரதேசத்தில் திருமணம் 114
நடத்தை கெட்ட மனைவி 115
நீர்நிலையின் கரையில் நடத்தை கெடுபவள் 115
மாற்றான் பிள்ளை யோகம் 116
விதவை மாதவிலக்குள்ள பெண்களுடன் உறவு 116
கர்ப்பிணிப் பெண்களுடன் உறவு 117
குள்ளப்பெண், ஆலயத்தில் உறவு 117
மிருகம் போல் உறவு 118
கொங்கை இலம்பகம் 119
தளர்ந்த கொங்கை 120
வறண்ட மறைவிடம் 120
வறண்ட சலக்கட்டுள்ள மறைவிடங்கள் 121
நல்ல உணவு உண்பவன் 121
நல்ல உணவு கிடைக்காதவன் 122
உயர்தர பாணம் பருகுதல் 122
மூத்திரக் கிரிச்சனம் 123

8. எட்டாம் பாவம்

தீர்க்காயுள் 124
அற்பாயுள் 126
மத்திம, தீர்க்காயுள் 127
பிறந்தவுடன் மரணம் 127

அன்னிய தேச மரணம் 128
பெண்ணால் மரணம் 128
தன் பிள்ளையைக் கொல்பவள் 129
மறைவிட நோயினால் மரணம் 130
மரணம் நேருமிடம் 131

9. ஒன்பதாம் பாவம்

மூத்த பெண்ணுடன் தொடர்பு 132
தர்மவான் 133
சிறிது தர்மம், சிறிது பாவம் செய்பவன் 133
கோயில் சொத்தை எடுப்பவன் 134
தந்தையின் தீர்க்காயுளும் நலமும் 134
தந்தையால் நன்மை 135
தந்தை மரணம் 135
தந்தைக்குக் கர்மம் செய்பவன் 136
தனக்குக் கர்மம் செய்யும் தந்தையை உடையவன் 136
தந்தைக்கு உதவாமல் தூரதேசம் செல்பவன் 137
அநேக பாக்கியம் உடையவன் 138
சகோதரத்தால் செல்வம் பெறுபவன் 138
பாக்கியமற்றவன் 139
பாக்கியமற்றவனும் பாக்கியவானும் 140
பாக்கிய்மற்றவன் 140
மிகுந்த பாக்கியம் 140
தானம் செய்பவன் 141
தானம்பெறுபவன் 143

10. பத்தாம் பாவம்

வேள்வி செய்பவன் 144
கங்கையில் குளிப்பவனும் வேள்வி செய்பவனும் 145
புண்ணியவான் 145
திருப்பணி செய்பவன் 146
குளம், தடாகம் திருப்பணி செய்பவன் 146
வேள்வி புரிபவன் 147
ஆக்கினைப் படுபவன் 147
தூரதேசத்தில் ஆக்கினைப் படுபவன் 148
புகழ் உடையவன் 149

அபகீர்த்தி அடைபவன் 150
குரூர ஆக்கினை அடைபவன் 150
சன்னியாசி யோகம் 151
முனீந்திர யோகம் 151
தேவேந்திர யோகம் 152
முனீந்திர யோகம் 152

11. பதினோராம் பாவம்

தன இலாபம் 153
பொருள் இழப்பு 155
பொருள் செலவு 155
புண்ணியவான் 156
தன இலாபம், தன நஷ்டம் 156
இலாபம் இல்லாதவன் 157

12. பன்னிரண்டாம் பாவம்

தனச்செலவு 158
தீர்க்காயுளும் செல்வமும் 159
தன இலாபம் 160
பொருள் அழிவு 160
உடல் குறைபாடு 161
நரகில் வீழ்பவன் 162
நரகில் வீழ்பவனும் சுவர்க்கம் சேர்பவனும் 162
சொர்க்கம் அடைபவன் 163
நல்ல கண்களும் பொருள் அழிவும் 164
அமரபூபதி யோகம் 164
அரசயோகம் 165
கேமசரி யோகம் 166

பாடல் முதல் குறிப்பு அகராதி 167

பின்னிணைப்பு -1

பாவங்களினால் அறியக்கூடிய பலன்கள் 172

பின்னிணைப்பு - 2

பத்துவித வர்க்கங்கள் 176

துணைநூற் பட்டியல் 180

சர்வார்த்த சிந்தாமணி

காப்பு

மறுவத்த வடநூ லான
வாரியை மேகம் வாங்கித்
சறுவத்த சிந்தா மணித்தமிழ்
அலங்கா ரம்ந டாத்த
கிறுபத்தை ஒளித்து ஞானக்
கிரீடியாம் புளிக்கீழ் மேவும்
பெறுசித்தா நங்கை ஈன்ற
பிள்ளைபொற் பாதம் காப்போம்.[1] 1

அவையடக்கம்

முன்னுளோர் புகழும் வேத
வாரியில் மொண்டு கொண்டு
அன்னமுன் காகம் ஆடும்
அடவதாய்த் தமிழை ஆய்ந்து
பன்னிரு கிரகம் கோளின்
குணபலன் தனையே கூற
கன்னலும் பழமும் துய்க்கும்
கற்பகக் கன்று காப்போம்.[2] 2

---

1. *சுவடி எண். 974-ல் இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடல், இந்நூலின் மூலநூல் வடமொழியில் எழுதப்பட்டது என்பதை உணர்த்துகிறது.*

2. *சுவடி எண். 850 Fல் இப்பாடல் அமைந்துள்ளது. அவையடக்கப் பாடலாகவும், நூல் நுதலிய பொருளை எடுத்துக்கூறும் பாடலாகவும் இது அமைந்துள்ளது.*

1. இலக்கின பாவம்

சீரெனும் இலக்க னேசன்
மித்திராங் கிசமதனில் சேரச்
சார்வதாய் சுபக்கோள் பார்க்கில்
சௌக்கியம் இலக்க னேசன்
ஆரவே பலத்துக் கேந்திர
கோணத்தில் அமைய நல்லோர்
பார்வையே பெற்றால் ஆயுள்
பாக்கியம் உள்ள தாமே. 1

என்றது,

இலக்கனேசன்[1] சொட்சசேத்திர மித்திராங்கிசம் ஏற, சுபக்கிரகம் பார்க்க, தேக சௌக்கியம். இலக்கனேசன் பலமாக இருக்க, கேந்திர கோணத்தில் இருந்து சுபர் பார்க்க, பாவிகள் பாராது இருக்க, தேகசௌக்கியம் என்பது.

புகழுடையவன்

உள்ளதோர் இரவி தேவ
லோகாங்கிச முறவும் ஏற
விள்ளரும் இலக்க னாதி
பலக்கவும் பாக்கி யாதி
மெள்ளவே சொட்ச உச்சம்
அங்கிசம் விரும்பி ஏற
பிள்ளையும் யோக வானாய்ப்
பலமுடன் இருப்பர் தாமே. 2

என்றது.

சூரியன் தேவலோகாங்கிசம் ஏற, இலக்கனேசன் பலமாக இருக்க, பாக்கியேசன் சொட்ச அங்கிசம் ஏற, வெகு பாக்கியவனாய்க் கீர்த்திமானாய் இருப்பான் என்பது.

---

1. இலக்கனேசன் பலமாக இருக்க, கேந்திர கோணத்தில் இருக்க.

இருப்பதோர் இலக்க னேசன்
பலசுபர் வர்க்கம் ஏற
விருப்புடன் சொட்ச மாகி
கர்மஇலா பத்தான் பார்க்க
பொருந்திய தீர்க்க ஆயுள்
புகழுடன் செல்வ முண்டாய்த்
தருத்தனை நிகர்க்கும் கீர்த்தி
மானெனத் தழைத்து வாழ்வான். 3

இலக்கனாதிபதி 10-ல் பலவானாக இருக்க, சுகவர்க்கம் ஏற சொட்சசேத்திரத்தில் இருக்க, கர்மாதிபதியாலே, பாக்கியாதிபதியாலே பார்க்கப்பட, தீர்க்காயுளும் தனலாபமும் கீர்த்தியும் உண்டென்பது.

நோயாளி

வானனும் இலக்க னேசன்
பாவியர் உடனே வாழ
ஈனமாம் சுபக்கோள் பார்க்கில்
தேசமே இலக்க னேசன்[1]
தானமாம் பலமே யாகி
அங்கிசங் கோணந் தன்னில்
தானெனப் பாவி பார்க்கில்
எந்நாளும் ரோக னாமே.[2] 4

இலக்கனேசன் குரூரருடனே கூட, தேக சௌக்கியம் இல்லை. சுபக்கிரகம் பார்க்கில் பலன் உண்டு. இலக்கினேசன் பலவீனனாக இருக்க, கேந்திர திரிகோணத்தில் பாவிகள் இருக்க, எந்நேரமும் ரோகம் உண்டு என்பது.

---

1. *யாதொரு தோசம் இல்லை.*
2. *எந்நேரமும் ரோக னாமே, நாளுமே ரோகி யாவான்.*

சோர பயம்

ஆமெனும் இலக்க னத்தில்
பாவியாய்க் குளிகன் ஆளச்
சோமனாம் குளிகன் பார்க்கப்
பாவியும் இராகும் கூட
தானவன் இரவி பார்க்க
பில்லிசூனிய மரணம் அப்பால்[1]
மானமாம் சனியும் பாம்பும்
இலக்கனமப் படித்தான் பாரே.[2] 5

இலக்கனத்தில் பாவி இருக்க, குளிகன் திரிகோணத்தில் இருக்க அல்லது இலக்கனாதிபதி உடனே கூட, இலக்கனேசுவரனுடனே பாவிகள் கூட, இராகு உதயமாக இருக்க, சூனியத்தினால் மரணம், சனியுடனே இராகு கூடி, இலக்கனத்தில் இருக்க, வஞ்சனை, சோரபீடையுண்டாம்.

விரைவாத நோயாளி

தானவன் இலக்க னத்தில்
இராகுவாய்ச் சனிசேய் கூட
ஈனமாம் பிரசுர பீசம்
எட்டிலே இலக்க னேசன்
ஊனமாம் இராகும் கூடில்
அப்படி உரைத்து நின்றால்[3]
பானலம் கொண்ட கோதாய
பார்த்திவை ஆய்தல் நன்றே. 6

இலக்கனத்தில் சனியும் செவ்வாயும் இராகுவும் கூடி இருக்க, பிரகாசனம். இலக்கனேசுரன் இலக்கனாதிபதி அட்டமத்திலே இராகுவுடனே கூடியிருக்க பிரசுரபீசம்.

1. பில்லிசூ னியத்தால் மாய்வன்
2. வஞ்சனை யாலே மாய்வன்
3. இப்படி உரைத்தல் கூடும்

நன்றெனும் இலக்க னேசன்
இருந்திடும் இராசி நாதன்
பொன்றியாம் இராகு மாந்தி
கூடிடில் பிரசுர பீசம்
அன்றியும் அட்ட மேசன்
ஏறுமங் கிசத்து நாதன்
துன்றிய இராகு கூடில்[1]
அப்படிச் சொல்ல லாமே. 7

இலக்கனேசன் இருந்த இராசிக்கு உடையவன் இராகு, செவ்வாய், மாந்தியுடனே கூடியிருக்க முன்சொன்ன பலன் என்பது. அட்டமாதிபதி அந்த அங்கிசாதிபதி கரையேறினால் அந்த அங்கிசாபதி இராகுவுடனே கூட முன்சொன்ன பலன் என்பது.

ஆயுதக்காயம்

சொல்லிய இலக்க னேசன்
சேயென அவைது ரக்கப்
பல்லவர் பாவி கூட
அன்றியும் பார்க்கு மாகில்
வில்லினால் கல்லே தன்றி
வசூரியால் விரணம் உண்டாம்
அல்லது சனியவ் வண்ணம்
ஆகில் அக்கினியா லாமே. 8

இலக்கனேசன் செவ்வாயாக இருக்க, அவன் இலக்கனத்திலும் இருக்க, பாவிகளுடனே கூடப்பட அல்லது பார்க்கப்படில் தலையிலே கல்லினால் விரணம் அல்லது வைசூரினால் விரணம். சனி அப்படி இருந்தால் வாத அக்கினி, சத்திரம் இவற்றால் விரணம் உண்டு என்பது.

---

1. நின்றிடில் அரவும் கூடில், பொன்றிய அரவும் கூடில்

மெலிந்த உடல்

ஆயதோர் இலக்க னாதி
　　அங்கிசத் தானே பொல்லாத்
தீயவர் சுடர்கள் கூட
　　தேகமாஞ் சுடர்கள் வீட்டில்[1]
நாயகன் இலக்க னாதி
　　இருக்கவும் அட்ட மத்தில்
மாயவன் சுடர்கோ னாகில்
　　சுட்கமம் மதிப்பாய் இலக்காய்.[2] 9

இலக்கனேசுவரன் குரூரக் கிரகத்துடனே கூட, சுடர்ச்சரீரம், சுடர்க்கிரகங்கள் வீட்டில் இலக்கனாதிபதி இருக்க அல்லது அட்டமத்தில் இருக்க சுடர்ச்சரீரம்.

பருமனான உடல்

இலக்கினன் அங்கி சாதி
　　இருந்திடச் சுடர்கள் வீடாய்ச்
சொலத்தான் சுட்க மாகும்
　　சுக்கிரன் இலக்க னத்தாய்
நலப்படு சுடர்கள் பார்க்கில்
　　தூலமாம் இலக்க னாதி
சலகிரக மாக நல்லோர்
　　திருட்டியேல் தூல மாமே. 10

இலக்கனாதிபதி கரையேறின அங்கிசாதிபதி சுடர்க்கிரகத்தில் இருக்க, சுடர்த்தேகம். சுக்கிரன் இலக்கனத்தில் இருக்க, சுபக்கிரகங்கள் பார்க்க, கூடியிருக்க, தூலமாக இருக்கிற சரீரம் என்று சொல்வது. இலக்கனாதிபதி சலகிரகமாக இருக்க பலவானாக இருக்க, சுபகிரகங்கள் கூடியிருக்கத் தூலகாயமாக இருக்கிற சரீரம் எனச் சொல்வது.

---

1. சுட்கமாம் சுபர்கள் வீட்டில், சுஷ்கமாம் சுடர்தன் வீட்டில்.
2. நவில்வர் மாதோ.

நல்ல உடல்

தூலமாம் இலக்க னாதி
சலத்திலே தோன்ற அந்த
பாலனைச் சுபக்கோள் கூட
பார்ப்பதும் சிலமால் தூலம்
வாலனாம் இலக்க னாதி
வாழ்வது சுபர்வீ டாக
சீலனங் கிசத்தி லாதல்
சலத்துற நல்ல தேகம். 11

இலக்கனாதிபன் சலராசியில் இருக்க, சுபக் கிரகத்துடனே கூடியிருக்க, சலகிரகம் பார்க்க, தூலகாயம். இலக்கனம், சுபர்கள் சேத்திரமாக இருக்க அல்லது இலக்கனாதிபதி கரையேறின அங்கிசாதிபதி சலராசியில் இருக்க நல்ல சரீரம்.

உடல் பருமனும் மெலிவும்

நல்லதாம் இலக்க னத்தில்
குருநிற்க அன்றி பார்க்க
சொல்லலாம் இலக்க னம்தான்
சலமெனில் தூல காயம்
புல்லிய சனியும் இராகும்
இலக்கனம் வரில்பி சாசால்
இல்லையேல் இரவி செவ்வாய்
இருந்திடல் சுட்சுத் தேகம். 12

இலக்கனத்தில் குரு இருக்க அல்லது குருவாலே பார்க்கப்பட, இலக்கனம் சல இராசியாக இருக்க தூலகாயம். இலக்கனத்தில் சனியும் இராகுவும் இருக்க, பிசாசுகளாலே மரணம். இலக்கனத்தில் ஆதித்தனும் செவ்வாயும் இருக்க, சுட்கத்தேகம் என்பது.

பாக்கியவான்

சுகமெனும் இலக்க னத்துக்
குடையவன் அதிலே தோன்றி
அகமென வாழ்ந்து ஏறும்
மாங்கிசம் தன்வீ டுச்சம்
நிகரில்லாத் திரேகா ணத்துச்
சுகமது ஏற நீண்ட
புகர்குரு மதிமால் பார்க்க
புகழுடன் வாழ்வான் தீர்க்கம். 13

என்பது,

இலக்கனாதிபதி, இலக்கனத்தில் இருந்து சொட்சேத்திரனாகி, சொட்சேத்திரம் கரையேறி சுபதிரேகாணம் கரையேற, சுபர் திருட்டி உண்டாக , செனன முதல் மரண பரியந்தம் வரைக்கும் பாக்கியமுடையவன் என்பது.

மத்தியில் சௌக்கியம்

தீர்க்கமாம் இலக்க னாதி
இலாபமே சேர நல்லோர்
பார்க்கவே அன்றி கேந்திரத்
தின்வீடு உச்ச மாக
ஏற்கவே சிங்க னாங்கிசம்
ஏறவே பொன்ன வன்தான்[1]
கூர்க்கில்மத் தியிலே வாழ்ந்து
குணமுடன் இருப்பர் தாமே. 14

என்பது,

இலக்கனாதிபதி இலாபம் கரை ஏற, சுபக்கிரகம் பார்க்க அல்லது கேந்திரத்திலே சொட்ச உச்சனாக இருக்க சிங்காசன அங்கிசம் ஏற, குரு பார்க்க மத்தியிலே சௌக்கியம்.

---

1. அங்கிசம் ஏற பொன்னன்.

சுகவாழ்க்கை

இருந்தஇலக் னாதி சொட்ச
உச்சமாய் இனியோர் பார்க்க
பரிந்துசோ பனகேந் திரத்தில்
பர்வதங் கிசமே பற்ற[1]
மருந்தெனும் மத்தி யோகம்
இலக்னகேந் திரம்பொன் பார்க்க
அருந்துஇலக் கனத்தன் கேந்திர
அயிராப தாங்கிசம் நன்றே. 15

என்பது,

இலக்கனாதிபதி சொட்சசேத்திர உச்சமாக சுபக்கிரகம் பார்க்க, இலக்கனேசன் சோபன கேந்திரத்தில் இருக்க, பர்வதாங்கிசம் ஏற மத்தியிலே சௌக்கியம். இலக்கனத்தை வியாழன் கேந்திரத்தில் இருந்து பார்க்க அல்லது இலக்கனாதிபதி கேந்திரத்தில் பலத்துப் பூரண பலமாக இருக்க அல்லது ஐராவதாங்கிசம் ஏற, அவனுக்கு ஸ்திரி புத்திரர் மித்திரர்களுடேனே மரணம் வரையும் செல்வம் என்பது.

நன்றெனும் இலக்க னாதி
கோபுராங் கிசமாய்ச் சுங்கன
அன்றியும் தேவ லோகாங்
கிசமாகில் மத்தி யத்தில்
துன்றிய பின்னும் செல்வம்
சுபர்கள்இலக் கனமாய்ப் பாவி
ஒன்றிய தனமாய்க் கேந்திர
உச்சமேல் மத்தி யோகம். 16

என்பது,

---

1. ஏற

இலக்கனேசன் கோபுராங்கிசம் ஏற, அவனுக்கு மத்தியிலேயும் மத்தியத்திலேயும் யோகம். இலக்கனத்தில் பாவி இருக்க, தனத்தில் சுபர் இருக்க, இலக்கனாதிபதி கேந்திர கோணம், உச்சனாக இருக்க, அவனுக்கு மத்தியிலேயும் மத்தியத்திலேயும் சௌக்கியம் என்பது.

யோகமாம் இலக்க னத்தில்
பாவியாய்ச் சுபர்பா ராமல்[1]
பாகுசேர் பாக்கி யத்தில்
பாவியாய் நலமுந் தீவின்
வாகமும் இலக்க னாதி
பத்தில்லக் கனத்தில் வாழ[2]
தோகையே ! சுபக்கோள் பார்க்கில்
மத்தியில் யோகம் சொல்லே. 17

என்பது,

இலக்கனத்தில் பாவி இருக்க, தனத்தில் சுபர் இருக்க, பாக்கியத்தில் பாவி இருக்க, வாலிப சௌக்கியம். பிறகு தரித்திரம். இலக்கனேசன் கர்மத்தில் இருக்க அல்லது இலக்கனாதி இருக்க சுபக்கிரகம் பார்க்க மத்தியலே யோகம்.

அபகீர்த்தி அடைதல்

சொல்லிய இலக்க னத்தில்
பாவியும் இராகும் தோன்ற
நல்லதாம் கேந்தி ரத்தில்
பாவிகள் இருந்து நாட
வல்லவன் இலக்க னாதி
நீசனாய் வாழ்வா னாகி
புல்லன்துர்க் கீர்த்தி யாகிப்
புகழின்றி சிலநாள் வாழ்வான். 18

---

1. யோகலக் கனத்தில் பாவி யாய்ச்சுபர் வர்க்க மாகி
2. பத்தில்கர் மத்தில் வாழ, பத்தேழு கர்மம் வாழ

இலக்கனத்தில் பாவியும் இராகுவும் இருக்க, கேந்திரங்களிலும் பாவிகள் இருக்க, இலக்கனாதிபதி நீசனாக இருக்க, துர்க்கீர்த்தியை அடைவான் என்பது.

மத்திம பாக்கியவான்

வாழுமோர் இலக்க னாதி
 வீரிய னாக வந்து
மீனான வீட தாகி
 அரசனாய்க் கீர்த்தி மேவும்
நாளிலே இலக்க னேசன்
 மூன்றெட்ட ராறு தன்னை
காளைபுத் திரரும் இன்றி
 காமியாய் வேசை யாவான் 19

இலக்கனாதிபன் ஆரோப வீரியனாக, அந்த வீரியாதிபதி சொட்ச சேத்திரனாகக் கீர்த்திமானாக இராசாவாக இருப்பான். இலக்கனாதிபதி 3, 6, 8, 12இல் இருக்க, சுக்கிரன் பார்க்க, புத்திரர் இல்லை. பாக்கிய மத்திபம். வேசை சங்கமம்.

புகழ், பாக்கியம் உடையவன்

வானதாம் இலக்க னாதி
 வீடதாய்ப் பலமாய் வாழத்
தானவன் சுபக்கோள் கேந்திர
 திரிகோணம் தன்னி லாகி
பானபேர் சுபனும் கர்ம
 நாதனும் பாரக்க தங்கில்
ஈனமாம் கேந்தி ரத்தில்
 இருக்கதீர்க் காயு வாமே. 20

என்பது,

இலக்கனாதிபதி பலமாக இருக்க, சுபக்கிரகம் கேந்திர திரிகோணத்தில் இருக்க, சுபர் பார்க்க, கர்மாதிபதி கூட அல்லது திரிகோணத்தில் இருக்க, பாக்கியம், கீர்த்தி, தனதானியவானாய்த் தீர்க்காயுளும் உடையவன் என்பது.

செல்வம் உடையவன்

ஆயுவாம் இலக்க னாதி
அதிபலம் கேந்தி ரத்தாய்
மேயவர் சுபரே பார்க்கில்
தீர்க்காயுள் மிருத்தி இல்லை
நாயகன் எனவே லோக
நாதனாய்க் குணவா னாகி
ஈயவுடை தியாகி இராச
லெட்சுமி உடைய னாமே. 21

இலக்கனாதிபதி பலமாக இருக்க, சுபக்கிரகம் பார்க்க, கேந்திரனாக இருக்க மிருத்தி இல்லை. தீர்க்காயுள். குணவானாக, இராசலெட்சுமி உடையவனாக இருப்பன்.

புகழ் உடையவன்

உடையவன் இலக்க னாதி
ஒன்றுநான் கேழு பத்தில்
திடமுடன் குருவோ டாக
தீயர்கேந் திரகோ ணத்து
மடவுடன் கூடார் பாரார்
எட்டிலும் அணுகா ராகில்
இடமுடன் வாழ்வு தீர்க்கா
யுசுவாய்க் கீர்த்தி யாமே. 22

இலக்கனத்துக் கேந்திர கோணத்தில், எட்டாம் இடத்தில், 12ம் இடத்தில் பாவிகள் இல்லாது இருக்க, இலக்கனாதிபதியும், வியாழனும் 1, 4, 7, 10ல் இருக்க, கீர்த்திமானாகப் புண்ணியவானாகத் தீர்காயுளோடு இருப்பான்.

பாக்கியம் உடையவன்

தீர்க்கமாய் இலக்க னாதி
 தனத்தில்கர் மத்தி லாக
ஏற்கவே இலாப னோடே
 கூடிட இருப தாண்டாம்
ஆர்க்கும்இலக் கனத்தான் ஏறும்
 அங்கிசன்கேந் திரகோ ணத்தால்
கூர்க்குமுச் சத்தில் இலாபன்
 கூடமுப்பத்தி ரண்டின்மேல் இன்பம் 23

இலக்கனேசன் தனத்திலாவது கர்மத்திலாவது இருக்க, அல்லது இலாபனுடனே கூடி இருக்க, இருபது வயதுக்குச் சுகம். இலக்கனாதிபதி இருந்த அங்கிசாதிபதி கேந்திர கோண உச்சனாக இலாபேசனுடனே கூடியிருக்க, முப்பத்தி இரண்டு வயதுக்குமேல் பாக்கியம்.

இன்பமாம் இலக்க னாதி
 சுபராசி இருக்க அந்த
அன்பனைச் சுபகோள் பார்க்க
 கோபுராங் கிசத்தில் ஏற
மன்குணம் அறுப தாண்டு
 வாழுவான் இலக்க னாதன்
தன்பல முற்றும் இரண்டாம்
 இடப்பலன் சாற்ற லாமே. 24

இலக்கனேசன் சுபராசியில் இருக்க, சுபக்கிரகம் பார்க்க, கோபுராங்கிசம் ஏற அறுபது வயதுக்குச் சுகம்.

இலக்கன பாவம் முற்றும்

------ *** ------

2. இரண்டாம் பாவம்

சாத்திய நாமம் தானும்
தனம்முகம் குடும்பம் வித்தை
ஏத்தின விலாவின் பக்கம்
மந்திரம் இதயம் உண்ணல்
கூர்த்தகண் குருவும் என்ன
குறித்துணர் வெங்க டேச
மூர்த்தியே உரைத்தார்க் கெல்லாம்
மூடன்நான் விரிப்ப தாமே. 25

என்பது,

குடும்பம், முகம், விலாப்பக்கம், வித்தை, மந்திரம், இதயம், அறிதல், போசனம், குரு, தனம் இவை எல்லாம் இரண்டாமிடம் கொண்டு சொல்ல வேண்டும்.

கண் குறைபாடு

விரித்தோனாம் இலக்க னேசன்
வித்தையா னுடனே கூடிப்
பரித்தமூன் றாறும் எட்டும்
பன்னிரண் டதிலே வாழத்
தரித்தமாய் தனத்தான் தானும்
இலக்கின னுடனே சார
அரித்திடு நயனந் தன்னை
அந்தக னாகத் தானே. 26

என்பது,

இலக்கனாதிபதி இரண்டாமிடம் உடையவனுடனே கூடி 3, 6, 8, 12இல் இருக்க, இரண்டாமிடம் உடையவன் இலக்கனத்தில் இருக்க, அந்தகனாவன் என்பது.

ஆந்தைக் கண்

ஆகமாம் இலக்க னத்தில்
இரவியே நீச மாக
வேகமாம் இராகு பார்க்கில்
விரணமாம் கண்ணில் என்றும்
தாகமாம் குடும்பம் தன்னில்
சனிகுச னுடேன கூடச்
சோகனாம் குளிகன் பார்க்கில்
ஆந்தைக்கண் எனச்சொல் மின்னே. 27

என்பது,

சூரியன் இலக்கனத்தில் நீசமாக இருக்க, இராகுவால் பார்க்கப்பட, எந்நேரமும் கண்ணிலே விரணம். இரண்டாமிடத்தில் செவ்வாய் இருக்க, குளிகன் பார்க்க, சனி கூடியிருக்க ஆந்தைக்கண் என்பது. சுபர் பார்க்கில் இல்லை.

அரைக்கண் பார்வை

மின்னிய இரவி இந்து
தனத்தினில் இராகு மந்தன்
மன்னியே பார்க்க இரண்டு
நயனம்அந் தகமே யாகும்
பன்னிய தனத்தில் ஒன்றே
பாவியாய் குடும்ப னாதன்
வன்னியாம் பாவி கூட
வருவது தெரியா தாமே. 28

சந்திரனும் சூரியனும் இரண்டாமிடத்தில் இருக்க, சனியும் இராகுவும் பார்க்க, அந்தகன். சுபர் பார்க்கில் இல்லை. தனத்திலே ஒரு பாவி இருக்க, இரண்டாமிடத்திற்கு உடையவன் பாவியுடனே கூடியிருக்க, சுபக்கிரகப் பார்வை இல்லாதிருக்க சத்துரு வருவது தெரியாது. அரை பார்வை, ரோக நேத்திரம் என்பது.

கண்ணில் காயம்

தெரிதரும் நேத்தி ராதி
செல்லுமங் கிசத்து நாதன்
எரியெனும் பாவர் வீட்டில்
இருக்கவும் பாவி யாகில்
அரியெனும் கேது மாந்தி
நேத்திரா திபனும் கூட
உரியராம் கண்ணில் என்றும்
விரணமே உடைய தாமே. 29

(இ-ள்.) நேத்திரத் தானாதிபதி கரை ஏறின அங்கிசாதிபதி பாவச் சேத்திரத்தில் பாவியாக இருக்க, நேத்திராதிபதியுடனே கேது குளிகன் கூட, நேத்திரம் விரணம்.

இரத்த, நல்ல கண்

தாமெனும் இரவி சேயும்
தனத்திலாய்ச் சுபர்பா ராதே
பூமன்கண் இரத்த மாகும்
புகன்றிடும் நயனத் தானும்
சோமனாம் சுபரே கூடிக்
காரகன் சுபரே பார்க்க,
தீம்மாம் நயனம் என்றும்
தீர்க்கமாய் இலங்கும் தானே. 30

(இ - ள்) சூரியன், செவ்வாய் இரண்டும் நேத்திரத் தானத்தில் இருக்க, சுபக்கிரகத் திருட்டி (பார்வை) இல்லாதிருக்க, இரத்த கண். நயனாதிபதி சௌமியனுடனே கூட, காரகன் சூரியனைச் சுபர் பார்க்க, நல்ல கண் என்பது.

பலரைக் காக்கும் யோகம்

இலங்கிய குடும்ப னாதன்
உச்சசொட்சேத் திரத்த னாக
குலங்கிளர் சுபரே கூட
பார்க்கமா குடும்பி யாவான்
பலம்பரும் தனத்தான் உச்ச
சொட்சனாய்ப் பெரியோர் பார்க்க
நலந்திகழ் இலக்க னாதி
அவ்வண்ண மாக நன்றே. 31

(இ-ள்) குடும்பநாதன் சௌமியனாக இருக்க, உச்ச சொட்சேத்திரனாக இருக்க, சௌமியாள் கூட, பார்க்க, வெகுகுடும்ப இரட்சகனாக இருப்பான். குடும்பாதிபதி சொட்சேத்திர உச்சனாக சுபக்கிரகம் பார்க்க, இலக்கனாதிபதி உச்ச சொட்சேத்திரனாக, அநேக குடும்ப இரட்சகனாக இருப்பான்.

நன்றெனும் தனத்தா னத்தில்
வியாழனாய் நல்லோர் பார்க்க
அன்றியும் பிருகு உச்ச
சேத்திரம் அதனி லாக
வென்றிகொள் அரச னாக
வெகுசன இரட்சை யாகி[1]
மன்றினில் கீர்த்தி யாகி
வாழுவான் குடும்பி யாமே. 32

குடும்பத்தில் வியாழன் இருக்க சுபர் பார்க்க, பிருகுவால் உச்ச சொட்சேத்திரத்தில் இருக்க, பல உபகாரியாய், வெகுசன இரட்சகன் என்பது.

---

1. இரட்சகன்தான்

கஷ்ட யோகம்

குடும்பத்தில் பாவி யாகிக்
குடும்பன்ஆ றெட்டி ராகி
அடைந்திட இலக்க னாதி
அப்படி யாகில் துக்க
மிடும்பாரம் பாவி ரண்டில்
இருக்கவும் இலக்க னாதி
துடந்தவே ஆறெட் டாகித்
துக்கியாய்ப் பொசிப்பில் லானே. 33

குடும்பத்தில் பாவிகள் இருக்க, குடும்பாதிபதி சட்ட அட்டவியத்தில் போக, சென்ம இலக்கனானதிபதியும் அப்படிப் போக, அவனுக்குப் பொசிப்புக்குச் சந்தேகம். இரண்டில் வெகுபாவிகள் இருக்க, இலக்கனாதிபதி பாவியாகச் சட்ட அட்ட வியத்தில் போகில், அவனுக்குச் சுய சீவனம் மூலம் சுகம் இல்லை என்பது.

பலரைக் காப்பாற்றும் யோகம்

பொசித்திடும் தனத்தா னன்வீ
டுச்சமாய் பொருந்த அந்த
வசித்திரன் இலக்க னாதி
பலாட்டிய னாக மேவ
இசைபடு குடும்ப நாதன்
இருந்தவீ டுடையான் கேந்திர
நசைபடும் கோண மாகில்
நல்லவன் தனவான் ராசன். 34

(இ-ள்) : குடும்பாதிபதி சொட்சசேத்திர உச்சனாகத் திரிகோணத்தில் இருக்க, அநேக சனமித்திரனாக இரட்சிப்பான் என்றவாறு.

செல்வனும் ஏழையும்

தனத்தாதி இருந்த இராசி
　　தலைவன்கேந் திரங்கள் தன்னில்
மனத்துடன் சுபனே யாகில்
　　ஐநூற்றுப்பேர் மன்னாய் வாழ்வான்
இனத்துடன் இரண்டில் பாவி
　　இருக்கிலும் கலக னாகி
சினத்திடும் பாவி கூடி
　　சட்டாட்டம் சேர துக்கி. 35

குடும்பேசன் இருந்த இராசியாதிபதி கேந்திரங்களில் சுபனாக இருக்க, ஐநூற்றுப் பேரை இரட்சிப்பான். குடும்பாதிபதி பாவர்களுடனே கூட, இலக்சனாதிபதியும் பாவர்களுடனே கூடி, சட்ட, அட்ட, வியங்களில் இருக்க தனமில்லை என்பது.

செல்வன்

சேரவாம் தனேசன் பர்வ
　　தாங்கிசம் அதனில் இந்து[1]
தீரவாய்த் தனத்தில் இலக்கனன்
　　சிங்காச னாங்கிசம் ஏற
பாரவான் வியாழன் **பர்வ**
　　தாங்கிசம் பற்றில் அந்த
சூரன்மூ வாயி ரம்பொன்
　　சுகமனைக் குடும்ப வானே. 36

என்பது,

தனேசன் பர்வதாங்கிசம் ஏற, தனத்தில் சந்திரன் இருக்க, இலக்கனாதிபதி சிங்காசனாங்கிசம் ஏற, வியாழன் பர்வ தாங்கிசம் ஏற, மூவாயிரம் பொன்னுக்கு ஆஸ்தியாக இருப்பான் என்றவாறு

---

1. அங்கிசம் சேர இந்து

குடும்பனும் பரம உச்ச
னாகவே கொள்ளும் விட்டான்
நுடங்கிய குருவாய்ப் பின்னை
தோன்றும்இலக் கனத்து நாதன்
இடம்பயில தன்வீ டுச்சம்
ஏறிலா யிரம்இலட் சம்பொன்
உடந்தையாய்த் தேடி மீறும்
உம்பர்கோன் எனவும் வாழ்வான். 37

என்பது,

குடும்ப நாதன் பரம உச்சனாக, அந்த வீடுடையவன் வியாழனாக, இலக்கனாதிபதியும் சொட்சசேத்திர உச்சனாக இருக்க, ஆயிரம் இலட்சம் பொன்னுக்கு அதிபதியாக வாழ்வான் என்றவாறு.

உம்பர்கோன் வியாழன் சிங்கா
சனாங்கிசம் உகந்து வாழ
நம்பனாம் பிருகு பாலன்
கோபுராங் கிசத்தை நண்ண
அம்புவி தனத்தான் பலாட்டி
ஐராவ தாங்கிச மேறித்
தம்பமாய் அளவில் லாத
தனத்தினுக் குடையா னாமே. 38

என்பது,

வியாழன் சிங்காசனாங்கிசம் ஏற, சுக்கிரன் கோபுராங்கிசம் ஏற, தனாதிபதி பலாட்டியனாக ஐராவதாங்கிசம் ஏற, அளவில்லாத திரவியம் ஆட்சிப்பன் என்றவாறு.

நிட்சேப யோகம் உடையவன்

தனத்தினான் சலத்தி லாக
சதுர்த்தயன் சலவா னாக
சினத்தெழும் கர்மத் தானும்
சலராசி உடைய னாகில்

கனத்தநிட் சேப யோகம்
கைவந்து தர்ம வானாய்
இனத்துடன் கூடி வாழ்ந்து
இறைவர்வா னுலகம் சேர்வான்[1]. 39

என்பது,

தனாதிபதி சல ராசியில் இருக்க, நான்காமிடம் உடையவன் சல ராசியனாக இருக்க, கர்மாதிபதியும், சலராசிக் காரனாய் இருக்க, நிட்சேப யோகம் என்பது.

அழகன்

சேந்திரு முகத்தா னத்தான்
கேந்திர பாகஞ் சொல்ல
வாந்திடு முகத்தா னத்தில்
சுபர்களே வாழ அந்த
சாந்தனி குழலி ! நல்ல
முகமொடு தர்ம வானாய்[2]
பாந்தள்மேல் கிடந்து பாரும்
பரிப்பவன் அழகு வாய்ந்தே. 40

என்பது,

இரண்டாம் இடம் உடையவன் கேந்திரத்தில் பாகனாக இருக்க, அந்தத் தானத்தில் சுபர் இருக்க, சீமானாகப் பிரகாசமாக முகமுமாக இருப்பான் என்றவாறு.

கோபி, சாத்திரங்கள் கற்றவன்

வாய்ந்தெழும் குடும்ப னோடே
குளிகனும் வாழ வன்றிக்
காய்ந்திரு தனத்தான் நீசன்
எண்ணிசேர் கோபி யாவான்

---

1. *அனைத்துடன் கூடி வாழும்*
மலரவன் அரைந்த தன்றே.
2. *தனவா னாவான்*

சாந்தணி தனத்தான் பொன்னன்
ஆகவுந் தனத்தில் தங்கும்
ஏந்தல்தான் உச்ச மாகச்
சாத்திரம் எவையும் கற்பான். 41

என்பது,

இரண்டாம் இடம் உடையவனுடனே குளிகன்கூட, இரண்டாம் இடம் உடையவன் நீசனாக, வெகு கோபியாக இருப்பான். வாக்குத் தானாதிபதி வியாழனாக, இந்தத் தானாதிபதி உச்சனாக, வெகு சாத்திரம் அறிவான் என்றவாறு.

செல்வன்

கற்பதாம் வாக்கு நாதன்
சுகவர்கோத் தாங்கிசம் ஏற
உற்பனத் தனத்தான் பொன்னாய்ப்
பர்வதாங் கிசம்உ வப்ப
அற்புத பிருகு பாலன்
உச்சமாய் புதனும் கூடப்
பற்பமாம் ஐராவ தாங்கிசம்
பற்றிமா தனத்தா னாமே. 42

என்பது,

வாக்கீசன் சுபனாக இருக்க, வர்க்கோத்தாங்கிசம் ஏற, வாக்குத் தனாதிபதி குருவாக, அவன் பர்வதாங்கிசம் ஏற அல்லது சுக்கிரனாக இருக்க, அவன் புதனுடனே கூட சுக்கிரன் உச்சனாக இருந்து ஐராவதாம்சம் ஏற மாதவனாக, ஆஸ்தான கோலாகலனாக இருப்பான்.

ஏழை

தானமாய் வாக்குத் தன்னில்
பாவிகள் இருக்க அப்பால்
ஈனமாய்ப் பானுத் தானும்
எழில்மாந்தி யோடே ஏறில்

வானவன் சுபர்பா ராமேல்
வாக்கையும் பேசா தாகி[1]
போனக மன்றித் துட்ட
னாகவே பேசு வானே. 43

என்பது,

இரண்டாம் இடத்தில் பாவிகள் இருக்க, கர்ம தானத்திலே சூரியன் நீசனாக இருக்க, அந்தச் சூரியன் மாந்தியோடே கூடி இருக்க, வார்த்தை சொல்லமாட்டாதே பொசிப்புமில்லை என்றவாறு.

பரோபகாரி

வானெனும் கேந்தி ரத்தில்
மாலவன் அன்றிச் சுங்கன்
தானுேம புதனோ டாகத்
தனத்தினான் உச்ச னாகி
நானிலம் தன்னி லேதான்
சோதிடம் நவின்று கல்வி
மானெனத் தனவா னாகி
அறம்மிகச் செய்வான் நன்றே. 44

என்பது,

கேந்திரங்களிலே புதன் இருக்க, அல்லது சுக்கிரனுடனே கூடியிருக்க, இரண்டாமிடம் உடையவன் உச்சனாக இருக்க, அவன் சோதிட சாஸ்திரம் அறிவான். கவித்துவம் உள்ளவனாகி, தனவானும் தர்மவானுமாய் வாழ்வான் என்றவாறு.

சோதிட மேதை

நன்றெனும் வாக்கு நாதன்
புதனுடன் கூடி வாழ
அன்றியே புந்தி பார்க்க
கேந்திர மதுவ னாக

1. வார்த்தையும் பேசா தேதான்

வென்றிசேர் தன்வீ டாக
வியாழந்தான் பார்க்கக் காரி
துன்றும்வெண் மதியோ டாகச்
சோதிட சாத்திரம் சொல்லுவான். 45

என்பது,

வாக்குத் தானாதிபதி புதனுடனே இருக்க, அல்லது புதன் பார்க்க, அல்லது புதன் கேந்திரத்தில் இருக்க, அல்லது சொட்சசேத்திரனாக அல்லது குருவாலே பார்க்கப்பட சனி சந்திரனுடனே கூட, சோதிட சாத்திரம் அறிவான் என்றவாறு.

சொல்லிய கேந்தி ரத்தில்
கோணத்தில் குருவே தோன்ற
அல்லது பிருகு நாதன்
உச்சந்தா னன்றி வர்க்கப்
புல்லிய புதனே கூடப்
புகழுடன் நாத னாகி[1]
மல்லலம் புவியாம் தன்னில்
சோதிடம் கற்பான் என்னே. 46

என்பது,

கேந்திர, திரிகோணங்களிலே குரு இருக்க, சுக்கிரன் உச்சனாக, வித்தியாகாரன் புதனுடனே கூட, அவன் சோதிட சாத்திரம் அறிவான் என்றவாறு.

வேதாந்தி

வகுத்திடும் வாக்குத் தானம்
பருதிசே யாக வாழ
மகத்துவம் புகர்பொன் பார்க்க
அங்கும்சோ திடநூல் வல்லான்

---

1. இருப்பா ராகின்

மிகுந்திடும் தனவான் வெள்ளி
பொன்னன்சேய் கதிரோன் பார்க்க
பகுத்திடும் தானத்தா னுச்சம்
ஆகவே வேதம் பண்ணும். 47

என்பது,

வாக்குத் தானாதிபதி சூரியன், செவ்வாயாக இருக்க, குரு, சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட, சோதிட சாத்திரம் அளப்புக் காரனாக இருப்பான். இரண்டாமிடம் உடையவன் உச்சனாக அவனோடு புதன்கூட, அவன் வேத சாத்திரம் உண்டாக்குவான்.

பன்னிய தனத்தான் பொன்னன்
னாகவும் பலமே பற்ற
மின்னிய கதிரோன் வெள்ளி
பார்க்கவே வேதம் தேர்வன்
மின்னிய தனத்தில் பானு
வந்திட வாக்கு நாதன்
பொன்னுடன் சட்ட அட்ட
வியம்புக சரச னாமே. 48

என்பது,

குரு, இரண்டாமிடம் உடையவனாகச் சம்பூரண பலவானாகச் சூரியன், சுக்கிரனைப் பார்க்க, வேதசாத்திரம் அறிந்தவனாக இருப்பான் என்றவாறு.

ஆமெனும் தனத்தைப் புத்தி
ஆவது புகர்தான் பார்க்க
தாமரும் சனியும் பர்வ
தாங்கிசம் பற்றச் சுங்கன்
நாமென உச்சம் ஏறி
இலக்கனம் புகரோன் கேந்திரம்
வாமமாம் புகரோன் கேந்திரம்
வாழ்ந்திட வேதம் வல்லான். 49

என்பது,

இரண்டாமிடத்தைப் புதனாவது சுக்கிரனாவது பார்க்க, சனி பர்வதாங்கிசம் கரை ஏற, சுக்கிரன் உச்சமாம் கரையேறி இலக்கனத்தில் இருக்க, அல்லது கேந்திரங்களில் சுக்கிரன் இருக்க, வேதாந்த சாத்திரம் அறிவான் என்றவாறு.

ஆறு சாத்திரங்களில் வல்லவன்

வேதனாம் குருவும் கேந்திரம்
மேவவே சுங்கன் அன்பாய்
நீதிசேர் சிங்காசன மாங்கிசம்
மீதினில் நேராய்ப் பொன்னும்
தீதில்லா திருந்த வீட்டில்
காரியங் கிசேம சேரப்
பூதலந் தன்னில் சட்ட
சாத்திரம் புகலு வானே. 50

என்பது,

கேந்திரத்தில் குரு இருக்க, சுக்கிரன் சிங்காசனாங்கிசம் ஏற, வியாழன் எந்த இராசியில் இருந்தானோ அந்த இராசியில் சனி அங்கிசம் ஏற, அவன் சட்ட சாத்திர வல்லவனாக இருப்பான் என்றவாறு.

செல்வன்

மாதரே ! இலக்க னாதி
வந்தஅங் கிசத்தான் உச்ச
நாதநா யகன்வீ டாகி
நவிலும்இரண் டாமி டத்தான்
ஏதமில் லாத வைகே
சிஅங்கிசம் உச்ச வீடாய்க்
கோதிலா அங்கிசம் ஏற
குபேரன்போல் தனமுண் டாமே. 51

என்பது,

இலக்கனாதிபதி ஏறின அங்கிசாதிபதி உச்ச சொட்சசேத்திரனாக வாக்குத்தானத்தில் வைசேசி அங்கிசம் ஏற, வெகுதானாதிபதியாக இருப்பான்.

தனத்தனும் இலக்க னாதி
 தரித்திடும் இராசி யானும்
இனமென கர்ம வீட்டான்
 இவர்களே பலக்க நான்காம்
மனையுடை வேந்தைப் பொன்னே
 மகிழ்வுடன் பார்க்கில் முன்னம்
வனவில்லா வாலி பத்தில்
 தனமென விளம்ப லாமே. 52

என்பது,

கர்மாதிபன் தனாதிபதியுடனே கூட. இலக்கனாதிபதி இருந்த இராசியாதிபதி பலக்க, நான்காம் இடம் உடையவன் வியாழனாலே பார்க்கப்பட, வாலிபம் தொடுத்துத் தனலாபம் உண்டு என்பது.

விளம்பிய தனத்தான் இலாபன்
 இலக்கனன் இவர்கள் தன்னைத்
துலங்கிய சுகத்தான் பார்க்கச்
 சொட்சஉச்ச கேந்திர மாக
வளம்பெறும் ஏறும் வாழ்வு
 விசேச அங்கிசம் வாக்கான்
உளந்திகழ் உச்சன் அங்கை
 ஊர்தனம் உண்டாம் என்றே. 53

என்பது,

இலக்கனாதிபதியும், தனாதிபதியும், இலாபாதிபதியும் சுபராலே பார்க்கப்பட, உச்ச சொட்சசேத்திரனாக இருக்க, விசேச அங்கிசம் கரையேற, இரண்டாமிடம் உடையவன் உச்ச அங்கிசம் எடுக்க, வாலிபந் தொடுத்துத் தனலாபமுண்டாம்.

நிதிநிட்சே யோகம் உடையவன்

நன்றெனுந் தனத்தான் இலாபம்
நண்ணியே மதிக்கத் தோன்றும்
மன்றல்சேர் இலக்க னேசன்
வாக்கிலாய் இலாப நாதன்
ஒன்றிய இலக்க னத்தாய்
உதித்திட முன்னம் வைத்து
நின்றதோர் நிட்சேப மாக
நிதிவந்து கூடுந் தானே. 54

என்பது,

இலக்கனேசன் தனத்தில் இருக்க, தனேசன் இலாபத்தில் இருக்க, இலாபேசன் இலக்கனத்தில் இருக்க நிட்சேப யோகம் உண்டென்பது. (நிட்சேபம் - புதையல்).

செல்வன்

கூடிய கிரக மெல்லாம்
இலக்கனத் தானைக் கூட
ஏடவிழ் குருவும் வைகேசி
அங்கிசம் ஏறி இலாபம்
தேடரும் தனத்தான் உச்ச
னாகவுஞ் செனிப்ப தாயேல்
நாடுதற் கரிதாம் வீரியத்
தனங்களென் னாளும் உண்டாம். 55

என்பது,

சகல கிரகங்களும் இலக்கனாதிபதியுடனே கூடி, குரு பார்க்க, வைகேசி அங்கிசம் ஏற தனலாபம் உண்டு. தனாதிபரம உச்சனாக இருக்க, வீரியமான தனம் வந்து சேரும் என்பது.

நாளுமே சுபக்கோள் இரண்டாய்ச்
சுப்பிலா ளதையும் நாட
வாழ்வுமோ மத்தி யாகும்
வாக்கினோன் புதனோ டாகில்
தாழ்வில்லா இலக்க னாதி
பலமுற இலாபத் தானை
மாழிபோல் வியாழன் பார்க்கில்
விருத்தத்தில் தனமுண் டாமே. 56

என்பது,

இரண்டாமிடத்தில் சுபனிருக்க, சுப்பிலாளதை நாட, தனம் மத்தியத்தில் வரும். இரண்டாமிடம் உடையவனுடனே புதன் கூட, இலக்கனாதிபதி பலமாக இருக்க, இலாபாதிபதியைக் குரு பார்க்க, விருத்த வயதில் தனமுண்டு என்பது.

சகோதரர் வழிச் செல்வம்

உண்டிடும் பிராது நாதன்
இலக்கனன் தனேசன் ஒன்றாய்
கண்டிடப் பலக்கப் புருசக்
கிரகமே கண்ணால்ப் பார்க்க
இரண்டிடம் உடையா னாலே
பார்த்திடில் சகோதர ரானால்
கொண்டிடும் தனங்கள் என்றும்
கூறினார் நூல்வல் லோரே. 57

என்பது,

மூன்றாமிடம் உடையவன், தனாதிபன், இலக்கனாதிபன் பலவானாக இருக்க, புருசக் கிரகங்களாலே பார்க்கப்பட, இரண்டாமிடம் உடையவனாலே பார்க்கப்பட சகோதரர் திரவியம் வந்து சேரும் என்பது.

வல்லவன் பிராது நாதன்
தனத்திலாய்க் கேந்தி ரத்தில்
நல்லபூ மனுமே பார்க்க
இலக்கனேசன் பார்க்க முன்போல்
இல்லையா இலக்க னாதி
தனத்தவன் கேந்தி ரித்துச்
சொல்லியே மாறி இலாபன்
பார்க்கவும் தனமுண் டாமே. 58

என்பது,

மூன்றாமிடம் உடையவன் தனத்தில் இருக்க, செவ்வாய் கேந்திரத்தில் இருக்க, இவர்களையெல்லாம் இலக்கனாதிபதி பார்க்க, சகோதரரால் திரவியம் வந்து சேரும். இலக்கனாதி பதியும், தனாதிபதியும் அன்னிய புண்ணிய கேந்திரங்களில் இருக்க, பார்க்க, இலாபாதிபதி, தனாதிபதியைப் பார்க்க சுபகிரகங்களிலும் பார்க்கப்பட நாலா விதத்திலும் திரவியம் வரும் என்பது.

பிள்ளைகள் வழி செல்வம்

துகமெனுங் குருவும் புத்தி
ரேசனும் கேந்தி ரத்தில்
உகமெனும் திரிகோ ணத்தில்
உதிக்கவும் இலக்க னாதி
அகமெனும் உச்ச னாக
வைகேசி யங்கிசம் உவப்ப
மகவினால் தனமுண் டாகி
வருமென உரைக்க லாமே. 59

என்பது,

புத்திரேசனும் வியாழனும் கேந்திர கோணத்தில் இருக்க, இலக்கனாதிபன். பலாட்டியனாக உச்சனாக இருக்க, இலக்கனாதிபதி வைகேசி அங்கிசம் கரை ஏற, புத்திரரால் தனமுண்டு என்பது.

மனைவியின் வழி செல்வம்

உரைத்தசத் துருவான் இரண்டாம்
இடனுடன் கூடப் பொன்னோன்
துரைக்கது பலமாய் நோக்கில்
சத்ருவினால் தனமுண் டாகும்
இரைத்தேனும் ஏழான் வீட்டான்
உடன்தன நாதன் கூடில்
விரைத்தபொன் பார்க்கு மாகில்
களத்திரத் தால்மிகஉண் டாமே. 60

என்பது,

சட்டேசனுடனே தனாதிபன் கூட, பலாட்டியனாக இருக்க, வியாழன் பலமாய் இருக்க, சத்துருவினால் தனலாபம். களத்திராதிபதியுடனே தனாதிபன் கூட, களத்திராதிபதியை வியாழன் பார்க்க, ஸ்திரிமூலமாகத் தனமுண்டு என்பது.

தந்தையின் வழி செல்வம்

மிகவெனும் இரவி நன்றாய்ப்
பலத்திட வியாழன் பார்க்கத்
துகமெனும் கர்ம நாதன்
அவ்விதம் சேரில் பிதாவால்
பகபரி இலாபத் தானும்
குருவுமே மாறிப் பார்க்க
சிகமறி பொன்தான் பார்க்க
தெய்வமால் தனமே சேரும். 61

என்பது,

பிதுர்காரகன் பலக்க, குருவாலே பார்க்கப்பட, கர்மேசன் பலமாக இருக்க, பிதாவினுடைய தனம் வரும். இலாபேசனும் வியாழனும் மன்னிய புண்ணியம் பார்க்க, அல்லது வியாழனாவது பார்க்க, தேவதையாலே தனம் வந்து சேரும் என்பது.

செல்வத்தை இழத்தல்

சேர்ந்தெழும் இலக்க னாதி
பலத்திலே செயமாய்ப் பாவி
பேர்ந்தனதை பார்க்க இரண்டாய்ச்
சட்டாட்டம் போக பானு
வீர்ந்திடும் ஈன னாகி
இல்லாது வியன்இ ரண்டாய்
சார்ந்திடத் தனத்திலன் நீசன்
சட்டமாய்த் தெண்ட மாமே. 62

இலக்கனாதிபதி ஈன பலமாக இருக்க, பாவியரால் பார்க்கப்பட, சட்ட, அட்டம, வியத்தில் தனாதிபதியும் ஆதித்தனும் போக, அவர்கள் நீசமாகத் தனம் ஈனம். வியேசன் தன ராசியில் இருக்க, இலாபாதிபதி அட்டமத்தில் போக, தனத்தில் நீசன் இருக்க, இராச தண்டத்திலே தனம் சேதம் வரும்.

தெண்டிய தனேச னாச
இராசிதான் நீச னாகத்
தண்டியே குருசட் டாட்ட
வியமதில் திறமாய்த் தங்க
தண்டின வியமன் கூட
இலக்கனன் ஆறெட் டாக
மிண்டிலக் கனனும் நாசம்
வியன்பார்க்க கோப சேதம் 63

என்பது,

தனேசன் நாச ராசியில் போக அல்லது, நீசனாகப் போக, வியாழனும் சட்ட அட்டம வியத்தில் போக இராச தெண்டத்தினாலே தனச்சேதம். தனேசன் வியாதிபதியுடனே கூடி இலக்கனத்தில் இருக்க இலக்கனேசன் சட்ட, அட்ட, வியத்தில் இருக்க, இலக்கன நீச இராசியிலே பாவிகளிருக்க இராச கோபத்தால் தனச்சேதம்.

சேதமாம் கர்மன் இலாபன்
தனன்எம கண்டாங் கிசமே
சார்தன நாத னுந்தான்
அவனுறில் சிரமே சேதம்
போதலே தனத்தான் கர்மன்
நாசமாய்ப் போக லோகத்
தாதரி யாமல் பாவி
அபவாதத் தால்தனம் நாசம். 64

என்பது,

கர்மேசனும் இலாபேசனும் தனாதிபதியும் எம கண்டாங்கிசம் ஏற, இராச கோபத்தினால் தனச்சேதம். கர்மேசன் நாச இராசியில் இருக்க, தனாதிபதியும் அப்படியிருக்க, லோக அபவாதத்தினால் தனநாசம்.

தனத்தோலும் குரூர மான
அங்கிசம் சார்ந்து பாவர்
இனமெனக் கூட இலாபன்
இவ்வண்ண மாகில் சேதம்
வினவிய தனத்தான் நின்ற
இராசியான் குளிகன் கூடி
அனுதினம் ஆறெட் டாகில்
அவர்கட்கும் தனமே நாசம். 65

என்பது,

தனேசன் குரூர அங்கிசம் ஏறிப் பாவியருடனே இருக்க, இலாபாதிபதியும் அப்படி இருக்க, தன ஈனன், தனாதிபதி எந்த ராசியில் இருந்தானோ அந்த இராசிபதி சட்ட, அட்டம, வியத்தில் போக, குளிகனுடனே கூடத் தனஈனம் என்பது.

அவர்களில் தனத்தான் தன்னை
புகர்குரு வாலே பார்த்துக்
குவமெனும் குரூர சட்டி
அங்கிசம் குறுகி வாழ
நாமெனும் இலக்க னாதி
சட்டாட்ட வியங்கள் நாட
பவனென தனத்தை வைத்துப்
பார்த்துப்பின் இழந்து போவான். 66

என்பது,

தனாதிபதி குரு, சுக்கிரனால் பார்க்கப்பட்டு குரூர சட்டியங்கிசம் ஏற, இலாபாதிபதியும் சட்ட, அட்ட, வியங்களில் போக, நெடுநாள் தனம் இருந்து இழந்து போவான்.

இளந்தையான் தனத்தால் வைகேசி
யங்கிச மேறப் பொன்னன்
வளந்துயர் வீட்டில் மூலத்
திரிகோணத்தில் வருமே யாகில்
உளந்திகழ் தனமே தேடி
இருக்குமாப் போலே நாளில்
இழந்துபின் தேடித் தேடி
இருப்பது திண்ண மாமே. 67

என்பது,

தனேசன் பாவாள் வைசேசி அங்கிசம் ஏற, குரு சொட்சசேத்திர மூலத்திரிகோணத்தில் இருக்க, இலாபம் வந்து நாசமாகப் போம் என்றவாறு.

பெண்வழிச் செல்வம் இழத்தல்

இருப்பது இலக்க னத்தான்
தனத்தினில் இலாபன் ஆறான்
விருப்புடன் கூட ஏழில்
சுக்கிரன் மின்னால் சேதம்

பெருக்கமாம் புகரோன் ஏழில்
வியாழந்தான் பாரா விட்டால்
திருப்புனை மகளால் ஆயி
ரம்பொன்னே சேதம் வையே.[1] 68

என்பது,

இலக்கனேசன் தனத்தில் இருக்க, இலாபேசன் ஆறாம் இடம் உடையவனுடனே கூட, ஏழில் சுக்கிரன் இருக்க, ஸ்திரீ மூலத்தினால் தனம் விரயம் என்பது.

செல்வன்

வியத்தினில் புகரே வாழ
வியாழமும் தனத்த னாகி
தியப்பமாயப் பதிய மின்னும்
சேர்ந்திட திரியால் இலாபம்
உயர்ந்ததோர் இலக்க னாதி
உயர்குரு வைகேசி ஏற
நயப்பொன்னன் கேந்திர கோணம்
ஸ்திரியினால் இலாபம் நல்லாய். 69

என்பது,

வியாழத்தில் சுக்கிரன் இருக்க, தனத்தில் வியாழன் இருக்க, சந்திரன் கர்மாதிபதியுடனே கூடி இருக்கப் பெண்களால் இலாபம். குரு இலக்னாதிபதியுடனே கூடித் தனேசன் வைகேசி அங்கிசம் ஏற, கேந்திர திரிகோணத்தில் வியாழன் இருக்க, முன்சொன்ன பலன் என்பது.

நல்லதோர் தனத்தான் வைகேசி
அங்கிசம் அதுவை நாட
வல்லவன் பாக்கி யாதி
களத்திரத் தான மாகப்

---

1. *திருக்களால் ஆயி ரம்பொன்*
சிதையும்வேய்த் தோளணங்கே.

புல்லிய நான்காம் வீட்டில்
சுபன்புகப் பூவை யேகேள் !
எல்லையில் லாது இரண்டு
இலட்சம் ஆட்சிப் பானே. 70

என்பது,

தனாதிபதி வைகேசி அங்கிசம் ஏற, பாக்கியாதிபதி ஏழில் இருக்க, நான்காமிடத்தில் சுபன் இருக்க, இரண்டு இலட்சம் ஆட்சிப்பன் என்றவாறு.

ஆட்சியாம் புகரும் வேயத்
தன்னிலே வியாழ னாகி
காட்சியாம் இலக்க னேசன்
வைகேசி அங்கிசம் காண
ஆட்சியாம் இலக்க னாதி
பதிஉச்ச னாகி லொன்று
மாட்சிமை யாக நாலா
விதத்தினில் இலாபம் வாய்க்கும். 71

என்பது,

வியத்தில் சுக்கிரன் இருக்க, தனத்தில் வியாழன் இருக்க, இலக்கனேசன் வைசேசி அங்கிசம் ஏற, அல்லது இலக்கனாதிபதி உடனே கூட, நானாவித திரவியம் வந்து சேரும் என்பது.

வாய்த்தெழும் இலாப நாதன்
பாக்கிய வாழ வன்றி
பாக்கியன் இலாபத் தானைப்
பார்த்துவர்க் கோத்த மான
தோய்த்தஅங் கிசமே ஏற
துகமுண்டாய்ச் சதகம் பத்தாய்க்
காய்த்தபொன்ஆ சித்தி யாகி
கனமுடன் வாழு வானே. 72

என்பது,

இலாபேசன் பாக்கியத்தில் இருக்க, அல்லது பாக்கியாதிபதி இலாபேசனைப் பார்க்க, குரு வர்க்கோத்த அங்கிசம் ஏற, பதினாயிரம் பொன் ஆட்சிப்பான் என்றவாறு.

பிச்சைக்காரன்

கனகனாம் தனத்தான் சட்ட
அட்டமவிய னுடனே கூட
அனுதினம் தனமே இல்லை
அருக்கனும் சனியும் கூடப்
புனிதனாம் புகரும் ஆறில்
பூமகன் கூட வன்றி
வினவிய சனிதான் ஆறில்
மேவினும் பிச்சை யாவான். 73

என்பது,

இரண்டாமிடம் உடையவன் சட்ட அட்ட வியாதிபதியுடனே கூடியிருக்க, அவனுக்குத் தனம் இல்லை. சூரியன் சனியோடே கூட, சுக்கிரன் ஆறாமிடத்தில் செவ்வாயுடனே கூட, அல்லது ஆறாமிடத்தில் சனி இருக்க பிட்சாவிருத்தி பண்ணுவான் என்றவாறு.

பைத்தியக்காரன்

மேவிய சனியும் சேயும்
தனத்திலே விளங்க இந்து
பாவியாய் எட்டில் ஆகில்
பைத்தியக் கார னாவான்
ஆவியாம் அட்ட மத்தில்
இராகு சனிநான் காக
தாவிலே எட்டில் குரூர
சட்டியால் மத்த மாமே. 74

என்பது,

செவ்வாயும், சனியும் இரண்டாமிடத்தில் இருக்க, சந்திரன் எட்டாமிடத்தில் இருக்க, பைத்தியக்காரனாவன் அட்டமத்தில் இராது, கேது இருக்க, நான்காமிடத்தில் சனி இருக்க, அல்லது எட்டாமிடத்தில் இருக்க, குரூர சட்டியங்கிசம் ஏற, பைத்தியக்காரனாவான் என்றவாறு.

தாயின் மரணம்

மத்தமாம் வாக்கான் நீசம்
சட்டட்ட வியங்கள் பாம்பு
அத்தனாம் சனியும் இந்து
அட்டமனு மரணம் தாயாம்
சித்தமாம் இலாபன் மந்தன்
சேரிலே செயமாம் இராகு
உத்தமா மதியுங் கூட
தாய்அனு மரணம் என்னே. 75

என்பது,

வாக்குத் தானாதிபதி நீசனாக, சட்ட அட்ட வியங்களிலே இராகு-கேது இருக்க, ஐந்தாமிடத்தில் சனியுடனே கூடி சந்திரன் இருக்க, மாதா அனுமரணம். இலாபேசன் சனியுடனே கூட அல்லது செவ்வாயுடனே கூட, இராகு-கேது சந்திரனுடனே கூட மாதா மரணம்.

காயமடைதல்

தாயெனும் இலக்க னேசன்
தனபதி யுடனே சார
வேயெனும் புகரும் கூட
குருவதை விரும்பிப் பார்க்க
நாயகன் வியாதி னோடே
நண்ணிட வேபொல் லாத
தீயவன் ரணத்துக் குள்ளாய்ச்
செயலுடன் வாழு வானே. 76

என்பது,

இலக்கனேசன் தனாதிபதியுடனேயும் வியாதியான சுக்கிரனுடனேயும் கூட, குருவாலே பார்க்கப்பட, வியாதிபதியுடனே தனாதிபன் கூடி இருக்க இரணப்படுவான்.

செயல்பொரு தனத்தான் பாவி
இலக்கனன் வியத்தில் சேர
தயவுடன் அங்கி சத்தில்
தனன்சனி வீடு தாக்க
இயல்புடன் ரணமாம் ரண்டில்
பாவியாய் இலக்க னேசன்
மயல்பொரு வியமாம் ரண்டாம்
அங்கிசம் சனியவ் வண்ணம். 77

என்பது,

தனத்தில் பாவி இருக்க, இலக்கனேசன் வியத்தில் இருக்க, தனாதிபதி சனி அங்கிசம் ஏற, இரணப்படுவான், இரண்டில் பாவி, இலக்கனேசன் வியமாக இரண்டாம் இடத்தான் அங்கிசத்தில் சனி பார்க்க இரணப்படுவான்.

வண்ணமாம் பாக்கி யாதி
பதினொன்றில் வாழப் பானு
திண்ணமாய்த் தனமே சேரத்
தனத்தவன் நீசம் சேரப்
பண்ணியே பாவ ராலும்
தனமுற அட்ட மத்தில்
கண்ணில்லாப் பாவர் கூடில்
இரணமுடன் காலம் போமே. 78

என்பது,

பாக்கியாதிபதி இலாபத்தில் இருக்க, ஆதித்தன் தனத்தில் இருக்க, தனேசன் நீச இராசியில் இருக்க, அல்லது பாவர் தனத்தில் இருக்க, அட்டமத்தில் இருக்க இரணம் உண்டாம்.

காலமாம் தனேசன் சட்ட
அட்டவியம் ஏறக் கண்டு
கோலமாம் குரூர சட்டி
அங்கிசம் கொள்ள லாபன்
வாலமாம் இலக்க னேசன்
சட்டிஅங்கிசம் வருமே யாகில்
ஏலவே ரணமுண் டாகி
இருப்பது வாக்குத் தானே. 79

என்பது.

தனேசன் சட்ட அட்ட வியத்தில் போக, குரூர சட்டியங்கிசம் ஏற, இலாபேசனும் இலக்கன நாதனும் குரூர சட்டி அங்கிசம் ஏற, இரணம் வரும்.

பற்களை இழத்தல்

வாக்கினான் சட்ட அட்ட
வியமதாய் இராகு ஆறில்
நீக்கமில் லாமல் கூட
தந்தம்போம் இரவி ரண்டாய்
ஏக்கவே செவ்வாய் நான்கில்
இருக்கவும் பல்லு நோவாம்
தாக்கிய பிலத்தைப் பார்த்து
தன்னிலே ஆய்ந்து பாரே. 80

என்பது.

வாக்கு தானாதிபதி சட்டஅட்ட வியத்தில் இருக்க, இராகு ஆறில் கூட, பல் விழுந்து போம். ஆதித்தன் தனத்தில் இருக்க, செவ்வாய் நான்கில் இருக்க, பல் விழுந்துபோம் என்பது.

ஆய்ந்துபார் தனத்தி னானும்
அட்டமம் இருக்க வெய்யோன்
காய்ந்திடும் இலக்கன னாத
னுடன்ரோகத் தானம் காண

ஏய்ந்திடும் இரண நோவு
இலக்கனன் தனத்தான் ஆறாம்
பாய்ந்துமே கூட சேசன்தன
முறில்பல் வாலிபத் தில்போம். 81

என்பது.

தனாதிபதி அட்டமத்தில் இருக்க, ஆதித்தனுடனே கூட, இலக்கனாதிபதி ஆறாம் இடத்தில் இருக்க, இரண ரோகம் வரும். ஆறாமிடமுடையவன் உடனே தனாதிபதியும் கூட செவ்வாயும் தனத்தில் இருக்க, வாலிபத்தில் பல் விழும் என்பது.

போசன சௌக்கியம்

வாலிபன் தனத்தா னத்தோன்
மித்திரு வங்கிசம் வாழ்ந்து
சீலமாய் உச்ச மாக
வியாழனும் மதியும் நன்றாய்ப்
பாலனாய் பலமாய் நண்ணப்
போசனம் பரிவுடன் டாகும்
ஏலவே வாக்கான் காரன்
அங்கிச நலத்தில் முன்போல். 82

என்பது.

வாக்குத் தானாதிபதி மித்துரு அங்கிசம் ஏறி பரம உச்சத்தில் இருக்க , சந்திரனும் வியாழனும் பலத்திருக்க, போசன சௌக்கியம் உண்டு. வாக்குத் தானாதிபதி நல்ல அங்கிசங்கள் ஏறி இருக்க, வாக்குக்காரன் நல்ல அங்கிசம் ஏற, போசன சௌக்கியம் உண்டு என்பது.

உணவில்லாதவன்

முன்பதாம் புகரும் இந்தும்
பலமுறத் தனத்தில் நாதன்
அன்பினால் விசேட அங்கிசம்
அதனிலே அமர்ந்து வாழ

பின்பதாம் இலக்க னேசன்
உடன்சனி பலமாய்க் கூடில்
இன்பமாம் பொசிப்புக் கிட்டா
திருப்பது திண்ண மாமே. 83

என்பது.

சுக்கிரன் சந்திரன் பலத்திருக்க, தனாதிபதி விசேட அங்கிசம் ஏற இலக்கனேசனுடனே சனி கூட சங்கட போசனம்.

வெள்ளிப் பாத்திரத்தில் உணவு உண்ணுபவன்

இருந்திடும் தனத்தான் உச்சம்
வைகேசி அங்கிசம் மீதில்
புறந்தெழும் புந்தி யோடே
கூடவும் புத்தி ரேசன்
அருந்தியே ஏறும் அந்த
அங்கிச நாதன் வீடாய்ப்
பொருந்தவே இருக்க வெள்ளி
பாத்திர மதில்பொ சிப்பான். 84

என்பது.

இரண்டாமிடம் உடையவன் உச்சனாக, வைகேசி அங்கிசம் ஏற, புதனுடனே கூட புத்திரேசன் கரையேறின அங்கிசத்திருந்த அங்கிசாதிபதி பலத்திருக்க, வெள்ளிப் பாத்திரத்தில் புசிப்பான்.

ஓட்டில் உணவு உண்பவன்

பொசிப்பெனுந் தனத்தான் பாவ
சகிதனாய் பொருந்தும் வீட்டான்
ஒசித்தயீ ராறு மெட்டு
முதித்திடில் ஓடு பட்டை

விசித்திரன் புத்தி நாதன்
நீசராசியை விரும்ப பாவர்
அசித்ததைப் பார்க்கில் ஓடு
பட்டையை அறைய லாமே. 85

என்பது.

தனாதிபதி பாவக்கிரக சசிதனாக அவன் இருந்த இராசியான அட்ட வியங்களில் போக ஓடு, பட்டையில் புசிப்பான். புத்திரத்தானாதிபதி நீச இராசியில் இருக்க, பாவக்கிரகம் பார்க்க, முன் சொன்ன பலன் என்பது.

உயர்ந்த உணவு

அறைந்தெழும் ஐந்த னாகி
அரசனும் சுபனே யாகி
நிறைந்துதான் இருந்த வீட்டான்
சுபனெனச் சுபனே பார்க்க
சிறந்துவாழ் நல்ல புத்தி
ரேசனும் சிறக்க அங்கிசம்
*மறந்திகழ் குருவும் சுங்கன்
வீடென அமர ஊணே. 86.

என்பது.

புத்திரத்தானாதிபதி சுபனாகச், சுபக்கிரகமாக அவன் இருந்த இராசியாதிபதியும், சுபனாகச் சுபக்கிரகம் பார்க்கப்பட நல்ல புத்தியை உடையவன். புத்திநாதன் பலவானாக இருக்க விசேச அங்கிசம் ஏற, குரு சுக்கிரனால் பார்க்கப்பட, சொட்சசேத்திரத்தில் இருக்க, தெய்வ போக்கிய போசனம் உண்டென்பது.

அமரர் குருவும் புத்தி
தனபதி கூட அன்றி
விமலனாம் தனத்தைப் பார்க்க
வைகேசியங் கிசங்கள் மேவ

---

* *மறந்திகழ் விசேசம் சுங்கன்
மருவமேல் அமரர் பாக்கியம்*

நமதென மிருந்து வங்கிசம்
　　நாடிட நாளும் நன்றாய்
தமதென தனத்தைப் பாக்க
　　உண்ணலாம் தாட்சி இல்லை. 87

என்பது.

தனாதிபனுடனே குரு புதன் கூட, பார்க்க, வைகேசி அங்கிசம் ஏறமிருந்து அங்கிசம் ஏற தெய்வபோசனம் உண்டென்பது.

ஊன்தரு தனத்தான் பொன்னன்
　　புகரெனப் புதனும் பார்க்க
காண்கெனக் கூட வைகேசி
　　அங்கிசம் ஏலங்கமழ் புசிப்பாம்
சேண்பெருந் தவத்தான் பாவ
　　நீசனாய்க் குரூர சட்டி
ஊண்பென பொசிப்புத் தேடி
　　கருத்தழிந் துலைந்து போவான். 88

என்பது.

வாக்குத் தானாதிபதி குரு சுக்கிரராக, அவனைப் புதன் பார்க்க கூடவே வைகேசி அங்கிசம் ஏற, தெய்வ போசனம், தனாதிபதி சொட்சசேத்திர மித்திரு உச்சமல்லாதே பாவ நீச்சனாய்க் குரூர சட்டி அங்கிசமாக இருக்க, பார்க்க, அன்னம் தேடிப் புசிப்பான் என்றவாறு.

சிரார்த்த உணவு உண்ணுபவன்

கருத்தெனும் தனத்தா னத்தில்
　　காசியாய்த் தனத்தான் நீசம்
பொருத்தவும் அன்றி கூட
　　சிரார்தத்தில் புசிப்ப தாவான்

உருத்தெழுந் தனத்தான் காரி
சேய்குளிகன் அவனோ டாகப்
பிரித்ததைப் பார்வைஆகி லும்சி
ரார்த்தம் புசிப்பு மன்னும். 89

தனத்தில் சனி இருக்க, அல்லது அந்தத் தானாதிபதி நீசனாக அல்லது சனியுடனே கூட, சிரார்த்தங்களில் கூடித் தின்பான். புத்தினாதன் சனி, செவ்வாய், குளிகனுடனே கூடில் அல்லது அவர்கள் பார்க்கச் சிரார்த்தம் வாங்கிப் புசிப்பன் என்பது.

பெரியோரைப் பழிப்பவன்

மன்னிய தனத்தான் பாவச்
சகிதனாய் இலக்க னத்தில்
அன்னியும் தனத்தில் ஆறில்
ஆதித்தன் சேயே யாகப்
பன்னியும் சேய்தான் பார்க்க
பெரியோர்தன் னைப்பல காலும்
துன்னிமித் தங்கள் போலே
தூசணம் பண்ணு வானே. 90

என்பது.

தனத்தான் பாவியுடனே கூடி இருக்க இலக்கனேசன் சட்ட, அட்ட வியத்திலே போக, தனத்தில் ஆதித்தன் இருக்க, செவ்வாயாலே பார்க்கப்பட பெரியோர்களைத் தூசனன் பண்ணுவான் என்றவாறு.

தீயவைப் பேசுவன்

பன்னிய செவ்வாய் சத்துரு
தானனாய் அதையும் பற்ற
தன்னிய வியத்தி லாதல்
சனிகூட துர்வாக் காகும்

அன்னிய சனியுங் ரண்டில்
நான்கிலும் பாவர் ஏற
திண்ணிய துச்சம் பேசி
திரிவது வாக்குத் தானே. 91

என்பது.

இலக்கனம், வியத்தில், செவ்வாய் சத்துரு தானாதிபதியாக இருக்கச் சனியும் கூட இருக்கத் துர்வாக்காகப் பேசுவான். தனத்தில் சனி இருக்க, கர்மம் நான்கில் பாவிகள் இருக்க படு தூசணப் புத்தி உடையவன் என்பது.

பாம்பு பயம்

வாக்கிலோர் காய மாந்தி
மனத்துடன் பார்க்கு மாகில்
தாக்கிய சர்ப்ப பீதி
தனத்தினில் பாவி யாகி
நீக்கமில் லாமல் பாவி
பார்க்ககுரூ ராங்கிச மேவ
தேக்கிய தனத்தால் பாவி
கூடவே சர்ப்பம் தீண்டும். 92

என்பது.

தனத்தில் இராகு இருக்க, குளிகனால் பார்க்கப்பட, பாம்பினால் பீதி உண்டு. தனத்தில் பாவி இருக்கப் பாவி பார்க்க, குரூர அங்கிசம் ஏற, இரண்டாமிடம் உடையவன் பாவியுடனே கூட சர்ப்ப பீதி உண்டு. இப்படி பலாபலம் அறிந்து ஆராய்ந்து சொல்லுவது.

இரண்டாம் பாவம் முற்றும்

3. மூன்றாம் பாவம்

கூடிய தனத்தின் பாவம்
கூறினோம் மூன்றாம் பாவம்
நாடிய சாகசம்பி ரதாப
பராக்கிர மங்கள் ரோகமாம்
வீடிய கழுத்து மேலும்
வித்தைதட் சணம்பச் சிப்பு
தேடியே வெங்க டேசர்
தேவரும் அருள்செய் தாரே. 93

என்பது.

மூன்றாமிடங்கொண்டு சாகசம், சகோதரம், பராக்கிரமம், கழுத்துக்கு மேல் களரோகம், வித்தை, தட்சணம், பட்சிப்பு இதுவெல்லாம் சொல்லுவது.

சகோதரர் அழிவு

செய்தியாம் மூன்றாம் பாகம்
தேவனும் சேயும் கூடி
வெய்யவன் பாவர் கூட
அல்லது விரும்பிப் பார்க்க
எய்திய சட்ட அட்ட
வியங்களில் இருக்கு மாகில்
நய்யனே சகோத ரங்கள்
நாசமாம் கலைவல் லோரே. 94

என்பது.

மூன்றாமிடம் உடையவனும் செவ்வாயும் பாவிகளுடனே கூடில் அல்லது பாவிகள் பார்க்க, சட்ட அட்ட வியங்களில் இருக்க சகோதரம் நாசம் என்பது.

சகோதரர் இன்மை

வல்லவர் பாவர் மூன்றில்
பதியவும் பார்க்க நாசம்
வல்லதே மூன்றில் நீசன்
அங்கிசம் நீச மாகில்
புல்லவன் பாவ ரோடும்
சகிதனாய்ப் பொருந்து மாகில்
இல்லையாம் சகோத ரங்கள்
என்றுமா முனிவர் கூறும்.

என்பது.

மூன்றாமிடத்தில் பாவி இருக்க, பாவிகள் பார்க்க சகோதரம் இல்லை. சகோதரக்காரகன் நீசனாக நீசாங்கிசம் ஏற, பாவர் சகிதனாக இருக்க சகோதரமில்லை என்பது.

கூறிய மூன்றாங் வீட்டான்
குருகுமங் கிசத்து நாதன்
ஈறிலே நீசாங்கி சத்தில்
ஏறவே பிராதா இல்லை
தேறிய சகோத ரத்தில்
பாவியே சேர அன்றி
மூறியகா ரகனைக் கூடில்
சகோதரம் விலக்க தாமே.

என்பது.

சகோதரத் தானாதிபதி ஏறின அங்கிசாதிபதி நீசாங்கிசம் ஏற, சகோதரம் நாசம். மூன்றாம் இடம் உடையவன் பாவியாக இருக்க, காரகனும் அப்படி இருக்க, சகோதரம் இல்லை என்பது.

சகோதரர் அழிவு

விலக்கெனும் பிராது நாதன்
அங்கிசம் எடுத்த வீட்டான்
பலத்திட நாச ராசி
ஆயிடில் பிராதா இல்லை

இலக்கென மூன்றான் வீட்டான்
எடுத்தஅங் கிசத்தா னத்தான்
பலக்கமில் சட்ட அட்டம்
வியமேறில் பிராதா நாசம். 97

என்பது.

பிராதுதானாதிபதி ஏறின அங்கிசாதிபதி நாச இராசியில் இருக்க, சகோதரம் நாசமாம். சகோதரத் தானாதிபதி கரையேறின அங்கிசாதிபதி இருந்த வீடுடையவன் சட்ட அட்ட வியங்களில் இருக்க, சகோதரம் நாசம் என்பது.

சகோதர இலாபம்

நாசமாம் சகோத ரத்தான்
குரூரசட்டி யங்கிசம் நாடப்
பாசமாம் காரகனும் அப்படி
யாகிலே தனிய னாகும்
ஆசில்லா மூன்றாம் வீட்டான்
பர்வதாங்கிசம் மலிய நன்றாய்த்
தாசனாய்ச் சுபரே பார்க்கச்
சகோதரம் மிகஉண் டாமே. 98.

என்பது.

மூன்றாமிட முடையவன் குரூர சட்டியங்கிசம் ஏற, காரகனும் அப்படியே ஏற, அவன் ஒருத்தனாகப் பிறப்பான். சகோதரத் தானாதிபதி பலகீனம் இல்லாமல் பர்வதாம்சம் கரையேறச் சுபனுடனே கூட, சுபர் பார்க்க, சகோதர இலாபம் உண்டு என்பது.

உண்டெனும் சகோத ரத்தை
நாதன்கா ரகனே யாகில்
விண்டென சுபரே பார்க்கில்
சகோதரம் மிகவும் உண்டு

கொண்டலா மூன்றாம் வீட்டால்
கோணகேந் திரமே யாக
உண்டெனு உச்ச மாக
சகோதரம் மிகவுண் டாமே.

என்பது.

சகோதரக்காரகன் சகோதரத் தானாதிபதியைச் சுபர் பார்க்க, பலவானாக இருக்க, சகோதர இலாபம் உண்டு. மூன்றாமிடம் உடையவன் கேந்திர கோணத்தில் இருக்க, உச்ச சொட்சசேத்திரனாகச் சகோதர வர்த்தனை உண்டு என்பது.

தைரியசாலி

மிகவெனும் பிராது நாதன்
சேயெனும் வீடு மாகில்
நகைவிரி சுபரே பார்க்கில்
பராக்கிரம னாக வாழ்வர்
நுகமெனும் மூன்றாம் வீட்டான்
உச்சனாய் பலவா னாக
திகழமகேந் திரந்தான் நல்லோர்
செயமுண்டாய்த் தைரி யாமே. 100

என்பது.

மூன்றாமிடம் உடையவன் செவ்வாய் ஆகில், சேத்திரனாகி அந்த ராசியில் பலவானாக இருந்தால், பராக்கிரமசாலியாக இருப்பான். மூன்றாமிடம் உடையவன் உச்சனாக இருக்க, கேந்திர திரிகோணங்களிலே சுபக்கிரகமாக இருக்க வைகேசி அங்கிசம் கரையேற தைரியவனாக இருப்பான் என்றவாறு.

தைரியமும் வீரமும்

தைரிய தனத்தான் நல்லோர்
சகசனாய் வைகேசி யங்கிசம்
உயலென தீர னாவன்
பொருவிலா மூன்றாம் வீட்டான்

தயவுடன் உச்ச னாகச்
சகோதரம் சரமே யாகில்
பயமின்றி தீர னாவான்
பராக்கிரம சாலி யாமே. 101

என்பது.

மூன்றாமிடம் உடையவன் சுபக்கிரகத்துடனே கூடி வைகேசி அங்கிசம் கரையேற, தீரவானாக இருப்பான். மூன்றாமிடம் உடையவன் உச்சனாக மூன்றாமிடம் சரராசியாக இருக்க அவன் பராக்கிரமசாலியாக இருப்பான் என்றவாறு.

போர்வீரன்

பராக்கிரம தானத் தானும்
பன்னிரண் டாக அந்த
தீர்க்கமாம் கார கன்தான்
சொட்சேத்திர உச்சம் ஆகில்
ஏற்கவே சனம்வந் தாலும்
அதிர்ப்பன்மூன் றாமி டத்தான்
ஆக்கவேசிங் காசன காரகன்
பர்வதாங் கிசமாகில் தீரன். 102

என்பது.

மூன்றாமிடத்துக்கு உடையவன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, காரகன் பலவானாக இருக்க அவன் சொட்சசேத்திரம் உச்சனாக முதற்சனம் வந்து திரும்பத் தைரியம் வரும். மூன்றாமிடம் உடையவன் சிங்காசன அங்கிசம் ஏற, காரகன் பர்வதாங்கிசம் ஏற, தீரனாக யுத்தம் பண்ணுவான்.

திறமைசாலி, கலகம் செய்பவன்

தீரனாம் பிராது நாதன்
ஆதித்த னுடனே சேர
ஆரலும் சசியும் கூடி
சனிப்பார்க்க அவனும் தீரன்
கோரமாம் மூன்றாம் வீட்டான்
குருவுடன் கூட ஏழாய்ப்
பாரவான் செயலால் சண்டை
பன்னவே மூட்டு வானே. 103

என்பது.

மூன்றாம் இடம் உடையவன் ஆதித்தனுடனே கூட, சந்திரனுடனே செவ்வாய் கூட, சனியாலே பார்க்கப்பட யுத்தங்களிலே சாமாத்தியவானாக இருப்பன். மூன்றாமிடம் குருவுடனே ஏழாமிடம் உடையவன் செவ்வாயுடனே கூட என்னேரமும் கலகம் மூட்டுவான்.

கழுத்து நோய் உள்ளவன்

மூட்டிய மூன்றாம் வீட்டில்
இராகுவாய் அன்றி மூன்றான்
ஆட்டிய அரவும் கூட
அன்றியும் பிராது நாதன்
ஈட்டிய கோண கேந்திரம்
முற்சனி யாலே பார்க்க
வட்டிய களரோ கந்தான்
வந்திடும் திண்ண மாமே. 104

என்பது.

மூன்றாமிடம் உடையவனுடனே இராகு கூட, அல்லது மூன்றாமிடத்தில் இருக்க, மூன்றாமிடம் உடையவன் பிரசித்தமாய்க் கேந்திர கோணத்தில் இருக்க, அவன் சனியாலே பார்க்கப்பட, களரோகம் வரும் என்பது.

களமெனும் மூன்றான் வீட்டில்
நீசரே தங்க நான்காம்
அளவிடைச் சட்ட அட்ட
வியங்களாய்ப் பாவி பார்க்கச்
சளம்வரும் களமாய் ரோகம்
குளிகன்தான் மூன்றில் தங்க
உளதெனும் ரோகத் தானும்
மூன்றுடனே கில்கள ரோகமே. 105

என்பது.

மூன்றாமிடத்தில் நீச கிரகம் இருக்க, நான்காம் இடத்துக்கு உடையவன் சட்ட அட்ட வியங்களில் இருக்க, பாவிகள் பார்க்க, களரோகம் வரும். மூன்றாமிடத்தில் குளிகன் இருக்க, மூன்றாமிடம் உடையவன் ஆறாமிடத்துக்கு உடையவனுடனே கூட இராகு, மாந்தி பார்க்க, களரோகம் வரும் என்பது.

செவி ஆபரணம் அணிபவன்

உடன்பொரு புகரும் இந்தும்
பலமுற சுபக்கோ ளாக
திடம்படச் சுபக்கோள் பார்க்க
பொன்பாத் திரஞ்சேர் மூன்றில்
தடந்திகழ் புந்தி யாகி
சௌமியாள் பார்க்க நன்றாய்
இடம்பெறு காரகன் தானும்
இவ்வணம் கடுக்கன் உண்டாம். 106

என்பது.

சுக்கிரனும் சந்திரனும் பலவானாகச் சுபர் கூட பார்க்க, பொன்னின் பாத்திரத்திலே சாப்பிடுவான். மூன்றாம் இடத்தில் புதன் இருக்க, சௌமியாள் பார்க்க, காரகனும் அப்படியே இருக்க கடுக்கன் போடுவான்.

கழுத்துநோய் உள்ளவன்

கடுகிய பிராது தானம்
பாவிகள் பார்க்க மற்ற
அடுதொழில் கிரக மெல்லாம்
ரோகமேல்கள ரோகம் உண்டு
திடமுடன் மூன்றில் இராகு
சேரவும் சுபர்பா ராமல்
கடவுளர் தானத் தானைப்
பார்த்திடில் களரோ கந்தான். 107

என்பது.

மூன்றாம்மிடத்தில் பாவிகள் இருக்க, மற்ற கிரகங்கள் ரோகத்தில் இருக்க, விசேடமாகக் களரோகம் உண்டு. மூன்றாமிடத்தில் இராகு இருக்க, சுபக்கிரம் பாராதிருக்க, களரோகம் வரும் என்பது.

நீலக்கல் செவியாபரணம் அணிபவன்

ரோகமாம் தானத் தானும்
சேயுடன் கூடி அந்தத்
தேகனும் சட்ட அட்டம்
வியமுறில் செவிகே ளாதாம்
பாகமாம் மூன்றாம் வீட்டில்
புகர்நிர்க குருவும் பார்க்க
ரேகனாய் இருக்க நீலக்
கடுக்கனும் அணிகு வானே. 108

என்பது.

செவ்வாயுடனே ஆறாமிடத்துக்கு உடையவன் கூடி சட்ட, அட்ட, வியத்தில் இருக்க, செவி கெட்டுப்போம் மூன்றாமிடத்தில் சுக்கிரன் இருக்க, வியாழன் பார்க்க, இருக்க நீலக்கல் கடுக்கன் போடுவான் என்பது.

புராணங்கள் கேட்பவன்

வனைகழல் மதியும் தெய்வ
மந்திரி புகர்மால் கூடி
அனைவரும் சேயும் கூட
வச்சிரா பரண மாகும்
புனைமதி பொன்மால் சுங்கன்
பொருந்திட மூன்ற தாகில்
தினசரி புராணம் சித்தம்
செவியுறக் கேட்பன் மாதே ! 109

என்பது.

சந்திரனுடனே சௌமியன் கூட, செவ்வாயுடனே கூட, வைரக்கல் பதித்த ஆபரணம் போடுவான் என்பது, சௌமியர் இடத்தில் இருக்க, புராணம் நித்தம் கேட்பன் புண்ணியவான்.

மூன்றாம் பாவம் முற்றும்

4. நான்காம் பாவம்

கேள்வியாம் வெங்க டேச
கிரீடியாம் மூன்றாம் பாவம்
தாழ்வற உரைத்தார் பின்னும்
சதுர்த்தஅங் கிரக மாதா
வாழ்வுறும் பாரி வீரம்
வத்திர சயனம் பாச
மாளவிலா சுகங்க ளேனும்
வாகனம் சாத்து வாரே. 110

என்பது.

நான்காமிடங்கொண்டு வாகனம், கிரகம், மாதுரு, களத்திரம், வீரம், பாசவர்க்கம், சுகம், புடவை, மூத்திரக் கிரிச்சனம், சயனம், நட்டம் இவையெல்லாம் சொல்லுவது.

பிறன்மனை விரும்புபவன்

சாற்றிய புகரோன் ஏழில்
சாருமேல் காமி புத்தி
சாற்றிடில் அன்னிய தாரம்
குருவும்சேர் தார மற்ற
சீற்றமாம் சனியும் அங்க
ஈனமே சேரும் செவ்வாய்த்
தோற்றிடில் வெகுபேர் பானு
பரதாரம் செப்ப லாமே.

என்பது.

சுக்கிரன் களத்திர தானத்தில் இருக்க அதிககாமி. புதன் இருக்கில் அன்னிய தாரம் இச்சிப்பான். குரு இருக்கில் சோரத்தாரன். சனி இருக்கில் அங்க ஈனம். குசன் இருக்கில் வெகு ஸ்திரி சையோகம். பானு இருக்கில் பரதாரம் விரும்புவான் என்பது.

பிறபெண்கள் சேர்க்கை

செப்பிய இலக்க னாதி
குடும்பனும் தாரத் தானும்
ஒப்பில்லாப் பகையே யாகில்
பரஸ்திரி உகந்து வாழ்வான்
அப்படி இலக்க னாதி
பாவிக ளுடனே யாகத்
தப்புமே பாவர் எழில்
தரித்திடில் சாதி ஈனம். 112

என்பது.

இலக்கனாதிபதியும் குடும்பாதிபதியும் களத்திர ஸ்தானாதிபதிக்குச் சத்துருவாக இருக்க பரஸ்திரி கமனம். பாவிகள் பார்க்க, ஏழாமிடத்தில் பாவிகள் இருக்க, பார்க்க பரஸ்திரி கமனம் என்பது.

விபச்சாரம் செய்பவன்

சாதியாம் இலக்க னேசன்
குடும்பன்சத் துருவான் கூடி
ஏதில்லாப் பாவி பார்க்க
ஈனச்சா திகளைச் சேர்வான்
கோதில்லாப் பாம்பு மேலாய்
குரூரரே பார்க்கில் கண்ட
மாதரை விரும்பிப் பொல்லாக்
கர்மனாய் வாழு வானே. 113

என்பது.

இலக்கனாதிபதியும் சத்துருத்தானாதிபதியும் குடும்பாதிபதியும் கூடி இருக்க, பாவிகள் பார்க்க, ஈன பரஸ்திரி கமனம். இராகு, கேது ஏழில் இருக்க பாவிகள் பார்க்க, விபச்சாரம் பண்ணுவான் என்பது.

பிறபெண்களை விரும்புவான்

கர்மனும் வித்தை யானும்
களத்திரத் தானத் தானும்
பன்னியும் ஆறில் பத்தில்
பரிந்திடில் பாவி தானும்
கன்னியாம் ஏழாம் வீட்டானே
நாலுறச் செவ்வாய்க் காணத்
தன்னிலே சோரி யான
ஸ்திரிகளைத் சயனிப் பானே. 114

என்பது.

கர்மேசன், வித்தையேசன், களத்திரேசன் இவர்கள் ஆறாமிடத்துக்கு உடையவனுடனே கூடி கர்மத்தில் இருக்க, அவன் பரபுத்திரன். ஏழாமிடம் உடையவன் நான்காம் இடத்தில் இருக்க, செவ்வாய்ப் பார்க்க, பரஸ்திரி கமனன்.

பிற ஆடவரால் பிள்ளைப் பெறுபவன்

தகிலியாய்ப் புத்தி ரேசன்
களத்திரன் பலனாய்ச் சேர
அகிலமாம் ஆறான் பார்க்க
பரவிந்து ஸ்திரியுண் டாவன்
பகரிலஏ ழுடையான் வாக்கான்
பாவிக ளுடனே கூடச்
சுகமுடை அவனே பார்க்கில்
சேரலர் தரிக்கும் கர்ப்பம். 115

என்பது.

புத்திரேசனும் களத்திராதிபதியும் பாலாட்டியனாக இருக்க, அவன் களத்திரம் சோர பர்த்தாவால் பிள்ளை உண்டாவாள். ஏழாமிடம் உடையானும் குடும்பாதிபதியும் பாவிகளுடனே சேர, செவ்வாயாலே பார்க்கப்பட, அவளுக்கு சோர பர்த்தாவால் பிள்ளை உண்டு என்பது.

தரித்திடும் களத்தி ரேசன்
பாக்கியன் சட்ட அட்டம்
விரித்தெழும் வியங்க ளாக
களத்திரம் பலமில் லானேல்
அரித்திடும் புத்தி ரேசன்
பார்த்திட அவன்தா ரத்தால்
சிரித்திடச் சோர ராலே
புத்திரர் சிலருண் டாமே. 116

என்பது.

பாக்கியாதிபதியும் களத்திராதிபதியும் சட்ட, அட்ட வியங்களில் இருக்க. களத்திராதிபதி பலவீனனாக ஐந்தாமிடமுடையவன் பார்க்க, முன் சொன்ன பலனுண்டு என்பது.

கர்ப்ப மனைவி மரணம்

சிலவிடுங் கலைகள் தேய்ந்த
மதிசில பாவி கூட
இளகிய ஏழாய் அன்னிய
காமிஅஞ்சா மிடத்தான் ஏழாய்
விலகிய ஏழான் வீட்டான்
பாவனாய் பிருகு பாலன்
பலமது குறையில் தாரம்
பிள்ளைஉண் டாகி மாளும். 117

என்பது.

சந்திரன் சீரணனாகப் பாவியுடனே கூடி ஏழில் இருக்க, அன்னிய களத்திரகாமி. ஐந்தாமிடம் உடையவன் ஏழில் இருக்க, ஏழாமிடம் உடையவன் பாவியுடனே கூட சுக்கிரன் பலவீனனாகக் களத்திரம் கர்ப்பத்துடனே மரணம்.

நடத்தைக் கெட்டவன்

பிள்ளையாம் மதியும் நீசம்
　　பெற்றிட கர்ம னோடே
உள்ளதாம் களத்தி ராதி
　　சட்டஅட்ட வியத்தில் ஓடி
தெள்ளரும் குடும்பத் தானம்
　　சேயெனில் ஈனம் மேவும்
கள்ளிய ருடனே சேர்ந்து
　　காலங்கள் கழிந்து போமே. 118

என்பது.

சந்திரன் நீசனாகப் போக, கர்மாதிபதியும் சட்ட அட்ட வியத்தில் போக, குடும்ப தானத்தில் செவ்வாய் இருக்க, சாதி ஈனக் களத்திரம் சேர்வான் என்பது.

மனைவி விஷத்தால் மரணம்

கழிந்திடும் ஏழான் விட்டான்
　　பாவிக ளுடனே கண்டு
ஒளிந்திடும் குரூர சட்டி
　　அங்கிச முயற்சி யாகி
விழிந்திடும் திரேகா ணத்தில்
　　சனியதே மேவு மாகில்
அழிந்திடும் தாரத் தானும்
　　விடபட்ச ணத்தால் தானே. 119

என்பது.

ஏழாம் இடம் உடையவன் பாவிகளுடேனே கூடி, குரூர சட்டி அம்சம் கரையேற, சனி திரேகானம் கரையேற, களத்திரம் விடபட்சணத்தினாலே மரணம்.

களத்திர எண்ணிக்கை

தானெனும் கர்ம னாதன்
    இராகுவும் சாரம் ஏழில்
தீனமாம் சலராசி யாகச்
    சேயுறில் ஸ்திரியும் துஞ்சும்
கானவன் களத்தி ராதி
    சட்டியங் கிசமாய்க் கண்ட
மானவன் பாகை எண்ணில்
    தாரமவ் வளவாய்ச் சொல்லே. 120

என்பது.

கர்மாதிபதி, இராகுவுடனே கூடி ஏழில் இருக்க, செவ்வாயாலே பார்க்கப்பட ஏழாமிடம் சலராசியாக இருக்க, ஸ்திரி தண்ணீரில் விழுந்து சாவாள். ஏழாமிடம் உடையவன் சட்டி அங்கிசம் கரையேற, அதில் இருந்த பாகை எண்ணில் அவ்வளவு களத்திரம் என்றவாறு.

இருதாரம் உடையவன்

சொல்லிய களத்தி ரேசன்
    உச்சனாய்ச் சேர்வர் நீசம்
இல்லது பிலாட்டி யாகி
    இல்லுவிற் பனனே யாகும்
அல்லவன் இலக்க னாதி
    பலமுறை களத்தி ராதி
நல்லனக் குடும்பன் கூட
    இருதாரம் நவில லாமே. 121

என்பது.

களத்திராதிபதி உச்சனாக, வக்கிரம் நீசம் இல்லாது இருக்க, விற்பன களத்திரமாக இருக்கும். இலக்கனேசன் பலவானாக இருக்க, களத்திரேசன் குடும்பேசன் பலவானாக இருக்க, உபய களத்திரம் உண்டு என்பது.

மூன்று தாரம், நாற்பது வயதில் தாரம்

நவிலரு மதியும் புத்தி
    புகர்பொன்னும் பலமாய் நாடத்
தவமென மூன்று தாரம்
    தாராதிபன் பாக்கி யத்தாய்த்
திவவெளி இலக்க னேசன்
    சட்டாட்ட நீசம் சேர்ந்து
பவமுறில் நாற்ப தான
    வயதின்மேல் பாரி பற்றும். 122

என்பது.

சந்திரன், புதன், வியாழன் பலமாக இருக்க, அல்லது சுக்கிரன் பலமாக இருக்க, மூன்று தாரம் என்பது, களத்திராதிபதி பாக்கியத்தில் இருக்க, இலக்கனேசன் சட்ட, அட்ட, வியத்தில் இருக்க, குடும்பாதிபதியும் அப்படியே இருக்க, நாற்பது வயதிற்கு மேல் களத்திரம் உண்டு என்பது.

வாகன யோகம்

பாரிலே சுகத்தில் சுங்கன்
    பரிந்து கேந் திரகோ ணத்தாய்
நாரியே கேந்தி ரத்தில்
    உச்சனே இலாபத் தாரம்
தீரனாம் வாக னத்தில்
    சுபன்நிற்க வாக னேசன்
ஆரவே பலக்கப் பொன்னன்
    நோக்கில்வா கனமாம் யோகம்

என்பது.

சுகத்திலே சுங்கன் இருக்க, கேந்திர கோணங்களிலும் உச்சத்திலும் இருக்க, நல்ல இலாபதாரம் என்பது. நான்காம் இடத்தில் சுபன் இருக்க, அல்லது நான்காமிடம் உடையவன் பலவானாக, வியாழன் இருக்க வாகன யோகம் என்பது.

வாகன இலாபம் ஏறு
கர்மனும் இலாபம் பார்க்க
ஏகவே தானத் தானை
நோக்கினும் இவையவ் வண்ணம்
நாகமாம் பிருகு பாலன்
நான்கிலாய்த் தானத் தோடே
போகிஇலக் னாதி யோடு
பொன்கூட தும்பி உண்டாம். 124

என்பது.

வாகனத்தானாதிபதி இலாபத்தில் இருக்க, கர்மாதிபதி வாகனத்தானத்தைப் பார்க்க, அல்லது தானாதிபதியைப் பார்க்க, இலக்கனாதிபதி பார்க்க, வாகனயோகம். அல்லது சுக்கிரன் நான்காமிடத்தில் இருக்க அல்லது வாகனாதிபதி யுடனே கூட, அல்லது வியாழத்துடனே கூட கெச, துரக, பதாதி உண்டு என்பது.

தும்பிசே ராசன் சுங்கன்
உடன்கூட அன்றி பார்க்க
வெம்பிய பாவி நீசர்
நோக்கில்வா கனமும் உண்டாம்
தம்பமாம் பாக்கி யாதி
வாகன னுடனே சார
நம்பிகேந் திரகோ ணத்தில்
இருக்கவா கனமே நல்கும். 125

என்பது.

சுக்கிரன் வியாழத்துடனே கூடி இருக்க, அல்லது ஒருவருக்கொருவர் பார்வையாக, வாகனத்திலாவது இலக்கனத்திலாவது பாவி நீசர் பார்த்திருக்க வாகனம் உண்டென்பது. பாக்கியாதிபதி, வாகனத்தானாதிபதியுடனே கூடியிருக்க அல்லது பாக்கியாதிபதி கேந்திரத்தில் இருக்க, அல்லது கோணத்தில் இருக்க வாகனயோகம் உண்டு.

அரசாளும் யோகம்

நல்கிய பாக்கி யாதி
வாகனன் உடனே நண்ண
வல்லவன் குருவும் நாலாய்
வாகன யோக முண்டாம்
சொல்லிய லாபன் ஒன்பான்
சுகத்தானன் உடனே வாழ
அல்லது உதயன் கர்மன்
கூடசிங்கா சனமுண் டாமே. 126

என்பது.

பாக்கியாதிபதி வாகனத்தானாதிபதி உடனே கூடி இருக்க, வியாழன் வாகனத்தில் இருக்க, பலவானாக இருக்க இரண்டில் இலக்கனனாதன் இருக்க, வாகனமுடையவனாக இருப்பான், இலாபாதிபதியும் பாக்கியாதிபதியும் நாலாமிடத்துக்கு உடையவனுடனே கூடி இருக்க அல்லது கர்மத்தில் இருக்க, பாவ நீசர்கள் பார்த்திருக்க, கர்மாதிபதியுடனே இலக்கனாதிபதி கூடி இருக்க, சிங்காசனாதிபதியாக இருப்பான் என்றவாறு.

சக்கரவர்த்தி

ஆசன இலாபத் தானும்
பாக்கியன் தனத்தில் மூன்றில்
வாசனாம் ஒருவன் நான்கு
மதிக்குக்கேந் திரத்தி லாகத்
தேசுரு இலாபம் ஐந்தில்
குருவீடாய்ச் சிறக்கு மாகில்
யோசனை பலநா டாளும்
அகண்டசாம் ராட்சிய யோகம். 127

என்பது.

இலாபேசனும், பாக்கியனும், தனாதிபதியும் இதில் ஒருத்தர் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருக்க, இலாபமாகிலும் தனமாகிலும் வரும். ஐந்தாமிடம் வியாழன் வீடாயிருக்க, அகண்ட சாம்ராச்சிய யோகம்.

அதிக இடங்கள், அதிக வீடுகள்

அகன்றவா கனத்தான் கர்மத்
ததிபதி உடனே கூடப்
புகன்றசேய் தன்வீ டுச்சம்
பொருந்தில்மா பூமி இலாபம்
மிகுமதி கர்ம நாலாய்
மித்திர னாக நல்லான்
மகிழ்ந்துடன் கூடப் பார்க்க
வளர்குரு இலக்கனம் பார்க்க. 128

என்பது.

நான்காமிடம் உடையவனுடனே கர்மேசன் கூடி இருக்க, செவ்வாய் சொட்சசேத்திர உச்சத்தில் இருக்க, வெகு பூமி இலாபமுண்டு. கர்ம இராசியுடையவன் பலவானாக இருக்க, நான்காமிடம் உடையவனுடேனே கூடி, மித்திரனாக இருக்கச் சேத்திரத்தானாதிபதி சுபனுடனே கூடி இருக்க, பார்க்க, காரகனை வியாழன் பார்க்க வெகு சேத்திரம் உண்டு என்பது.

அதிக வீடுகள்

பார்க்கிலும் சேத்தி ராதி
ஒற்றித்த ராசி பார்க்க
கார்கமாய்ப் பலனாய் நல்ல
கோபுராங் கிசமே ஏறத்
தீர்க்கமாய்ச் செவ்வாய் தானும்
மித்தராங் கிசத்தைச் சேரில்
சேர்க்கையாய்ச் சேத்தி ரங்கள்
மிகஉண்டாய்ச் செழித்து வாழ்வான். 129

என்பது.

சேத்திராதிபதி ஒற்றித்த ராசியில் இருக்க, கோபுராம்சம் ஏற, செவ்வாய் மிருத்து வாம்சம் ஏற, வெகுசேத்திரம் உண்டு என்பது.

செழித்திடும் கிரகத் தானும்
சகோதர னுடனே சேர்த்து
வழிபடில் பிராது சேத்திர
வருவதும் மிகுவ தாகும்
விளைத்திடும் சேத்தி ராதி
விரும்புமங் கிசத்தான் நாலில்
தளைத்தவ னுடனே கூடில்
சேத்திரம் தானுன் டாமே. 130

என்பது.

மூன்றாமிடம் உடையவனும் நான்காமிடம் உடையவனும் கூடில் பிராது சேத்திரம் அடைய, சேத்திராதிபதி ஏறின அங்கிசாதிபதி சேத்திராதிபதியுடனே கூடி இருக்க வெகு சேத்திரம் உண்டு என்பது.

நான்காம் பாவம் முற்றும்

5. ஐந்தாம் பாவம்

சேத்திரத் தானம் தன்னை
செகபதி வெங்க டேச
மூர்த்தியும் உரைத்தார் ஐந்தாம்
இடப்பலம் மொழிவ தாக
போற்றிய ஆர்ப்பன் தானம்
புத்திரன் விருது புத்தி
சாத்துமந் திரங்கள் எல்லாம்
தழைத்திட புகன்ற வாரே. 131

என்பது.

ஐந்தாம் இடம் என்றது ஆர்ப்பனம், புத்திரதானம், விருது, புத்தி, மந்திரம் இதுவெல்லாம் சொல்ல.

தத்துபுத்திரன், புத்திரநாசம்

தழைத்தெழும் ஐந்தாம் வீடு
புதனுட வீடாய்ச் சாரப்
பிழைத்திட சனியன் வீடேல்
சனியனும் பார்க்கில் தெத்தாம்
செழித்தபுத் திரத்தான் அன்று
சேர்ந்தஅங் கிசத்தான் அன்றேல்
உழைத்திடும் சட்ட அட்ட
வியமுடை உண்டாய் நாசம். 132

என்பது.

புத்திரத்தானம் புதன் சேத்திரமாக அல்லது சனி வீடாக, குளிகனாவது சனியாவது இந்தத் தானம் பார்க்க, தத்துபுத்திரன், புத்திரன் தானாதிபதி எடுத்த அங்கிசம் உடையவன் சட்ட, அட்ட, வியங்களுக்கு அதிபதியாகப் புத்திரர் உண்டாய் நாசம் வரும் என்பது.

வெகு புத்திரயோகம்

உண்டெனும் ஐந்தாம் வீட்டைக்
குருபார்க்க புத்தி ரோனும்
கண்டிடப் பலனே யாகி
இலக்கனம் பார்க்கில் உண்டாம்
திண்டிறல் புத்தி ராதி
குருவுக்குக் கேந்திர கோணாய்ப்
பண்டிதன் குடும்பன் பார்க்க
புத்திரபாக் கியம்உண் டாமே. 133

என்பது.

புத்திரத் தானத்தை வியாழன் பார்க்க, தனாதிபதி பரிபூரண பலவானா க இலக்கனாதிபதி பார்த்திருக்க, புத்திர பாக்கியத் தனலாபமும் உண்டு. புத்திரத் தானாதிபதியும் வியாழனும் கேந்திரத்தில் இருக்க, அல்லது மூலதிரிகோணத்தில் இருக்க, குடும்பபேசன் பலவானாக இருக்க, வெகு புத்திரயோகம் உண்டென்பது.

வயோதிகத்தில் தத்துபுத்திரன்

ஆமெனும் புத்தி ராதி
சுக்கிர னாக வந்தத்
தாமதாம் தானந் தன்னைப்
பாக்கி பார்க்க பெண்ணாம்
சோமனாம் சேயும் ஐந்தாம்
சேத்திரம் உடையா னாக
வாமமாம் சிங்க மீன
மேடமேல் தெத்தும் தானே. 134

என்பது.

புத்திரத்தானாதிபதி சுக்கிரனாக புத்திரத் தானத்தைப் பாக்கியாதிபதி பார்க்க, அவனுக்குப் பெண். செவ்வாய் இருக்க, புத்திரத் தானம் மேடம், சிங்கம் மீனமாக சுபகிரக திருட்டி இல்லாது இருக்க, அவனுக்கு அந்நியத்தில் தத்து புத்திரன்.

புத்திரர் இன்மை

தெத்திய புதனும் ஐந்தாம்
இடமதாய்ப் பாவர் சேர
நத்தியே இலக்க னத்தில்
நான்கிலாய்ச் சுபக்கோ ளெட்டாய்
அத்திலே பாக்கி யத்தான்
அல்லது பார்வை யாகப்
புத்திரன் அன்றி மற்ற
புகழுடன் வாழு வானே. 135

என்பது.

புதன் ஐந்தாம் இடத்தில் இருக்க, இலக்கனத்திலும் நான்காமிடத்திலும் பாவி இருக்க, சுபக்கிரகம் அட்ட, பாக்கியத்தில் இருக்க, அல்லது பார்க்க, புத்திரன் இல்லை என்பது.

தத்து புத்திரன், கணவன், குழந்தை இன்மை

வாழும்இலக் கனத்தில் செவ்வாய்
மந்தனும் அட்ட மத்தாய்
ஏழிலஞ்சில் இரவி யாகி
சுபர்நோக்கில் தெத்த தாகும்
மீளியே இலக்க னேசன்
தாரேசனும் வியாழந் தானும்
கோழையாய்த் தனத்தான் பாவ
ஈனனேல் குழந்தை இல்லை. 136

என்பது.

செவ்வாய் இலக்கனத்தில் இருக்க, அட்டமத்தில் சனி இருக்க, ஐந்தில் சூரியன் இருக்க, சுபர் பார்க்கில் காலாந்தரத்தில் தத்து புத்திரன், வியாழன் பலயீனனாக இருக்க, இலக்கனேசன் தாரேசன் வியாழனும் பலயீனனாகத் தனத்தாதிபதியும் பலயீனனாக ஸ்திரிக்கும் புருசனுக்கும் புத்திரன் இல்லை.

பக சும்பனம்

இல்லெனும் வியாழன் தானும்
    இருந்தகஞ் சேய்வீடாக
அல்லலே மந்தன் வீட்டில்
    தானாதி யாகில் பிள்ளை
சொல்லி ஏழாம் தானம்
    சுக்கிரன் இருக்கப் பார்க்க
இல்லையால் புகரும் வீடேல்
    பகசும்பனம் இயலும் தானே. 137

என்பது.

வியாழன் இருந்த வீடு செவ்வாய் வீடாக, அல்லது சனியின் வீட்டில் புத்திரத்தானாதிபதி இருக்க, அன்னியதாக ஒரு பிள்ளையை வளர்ப்பான். ஏழாமிடத்தில் சுக்கிரன் இருக்க, பார்க்க அல்லது சுக்கிரன் சேத்திரமாக இருக்க பக சும்பனம் பண்ணுவான் என்பது.

நான்கு களத்திரங்கள்

தனபதி யுடனே வெள்ளி
    சேரவும் குளிகன் பார்க்க
வினவிடாப் பகத்தில் தானுஞ்
    சும்பனம் இயற்று மின்னே
அனுதினம் ஏழும் எட்டும்
    பாவியாய் வியம்சே யாகத்
தினகரன் ஏழில் தார
    மூன்றுபோய் நாலாள் சேரும். 138

என்பது.

குடும்பாதிபதியுடனே சுக்கிரன் கூடியிருக்க. குளிகன் பார்க்க, பகசும்பனம். ஏழாமிடத்திலும் எட்டாமிடத்திலும் பாவியிருக்க, வியத்தில் செவ்வாய் இருக்க, சூரியன் ஏழில் இருக்க, மூன்று களத்திரம் நாசமாய், நாலாவது வரும் என்பது.

மூன்று களத்திரங்கள்

சேர்ந்திடும் களத்தி ரத்தில்
நீசனாய் ஆறான் செவ்வாய்
ஆய்த்திடும் ஏழாம் வீடும்
பாவர்வீ டாக வாழ
சார்ந்திடும் குடும்பம் தன்னில்
பாவரே சேர வாய்த்த
கூந்தலாள் இரண்டும் மாய்ந்து
கொள்வது மூன்றாம் தாரம். 139

என்பது.

இரண்டாமிடத்தில் பாவிகள் இருக்க, களத்திர தானத்தில் ஆறாமிடம் உடையவன் நீசனாக இருக்க, ஏழாமிடம் பாவர் வீடாக இருக்க, இரண்டுகளத்திரம் நாசமாய் மூன்றாம் களத்திரம் உண்டாம்.

குள்ள மனைவி, அனுகூல மனைவி

தாரமாம் கார கன்தான்
சசியுடன் கூட புத்தி
தீரனாம் புகர்தான் பொன்தான்
சசிகூட குறளாய்ப் பின்போம்
வாரனாம் வியாழன் பார்க்கில்
கேந்திரம் வாழச் சுங்கன்
ஆரவே இலாபம் சேரில்
அவர்நோக்கில் அழகாம் பாரி. 140

என்பது.

களத்திரக்காரன் சந்திரனுடனே கூட, அல்லது புதனாவது வியாழனாவது கூட, அல்லது சுக்கிரன் கூட களத்திரம் குறளாய் விபசாரம் உண்டு என்பது. பாக்கியத்திற்குக் கேந்திரத்தில் வியாழன் இருக்க, இலாபத்துக்குக் கேந்திரத்தில் சுக்கிரன் இருக்க, அன்னிய புண்ணிய வீடு மாறி இருக்க, அனுகூல களத்திரம் என்பது.

மூன்று களத்திரம் உடையவன்

பாரியாம் ஏழாம் வீட்டான்
பரமோச்சம் பகர்ந்த ஏழில்
சீரிய சுபரே வாழ
அன்றியும் தெளிந்த சுங்கன்
கூரிய உச்ச னாகில்
குலபதி யாக என்றும்
நாரியாய் மூன்று கொண்டு
நலமுடன் இருப்பன் நங்காய். 141

என்பது.

ஏழாமிடம் உடையவன் பரம அல்லது சுக்கிரன் பரம உச்சனாக இருக்க, மூன்று களத்திரம் உண்டு. என்பது.

அற்பாயுள் உடையவன்

நங்கையே இலக்க னேசன்
சேயென வியாழன் நாட
தங்கிய கல்லால் அன்றி
சரமாறி லும்கூடிய தெட்டும்
வெம்பிய வியமே பாவ
ராய்மேவி இலக்க னேசன்
அங்குதுர்ப் பலனே யாகி
அற்பமாம் ஆயுள் தானே. 142

என்பது.

இலக்கனேசன் செவ்வாயாகப் பாவிகள் பார்க்க கல்லினால் விரணம். சட்ட, அட்ட, வியங்களில் பாவிகள் இருக்க, இலக்கனேசன் துர்ப்பலவனாக இருக்க அற்பாயுள் என்பது.

தீர்க்காயுளும், இராசவல்லமையும் உடையவன்

ஆயுவாம் இலக்க னாதி
அதிபல னாக நல்ல
நாயகம் சுபரே பார்க்க
கேந்திரம் சுபரே நண்ணத்
தீயவர் நோக்கி டாதேல்
தீர்க்காயுள் அரச னாகி
நேயமாயே வாழ பூவில்
நெறியுறும் காயத் தானே. 143

என்பது.

இலக்கனாதிபதி அதிபலனாக இருக்க, சுபக்கிரகங்களால் பார்க்கப்பட, கேந்திரங்களில் இருக்க, பாவிகள் பாராதிருக்க, மிருத்து இல்லாமல் தீர்க்காயுளாய் இராச வல்லவனாக இருப்பன் என்றவாறு.

தீர்க்காயுள் உடையவன்

இலக்கனம் உடைய வேந்தன்
கேந்திர திரிகோ ணத்தாய்
விலக்கில்லா தேழாம் வீடு
வியாழன்வீ டாக ஏழில்
பலத்துடன் குருவாய்ப் பாவி
பார்க்கிலே பிள்ளை தானும்
குலத்துடன் ஆண்டு நூறும்
குணமுடன் வாழு வானே. 144

என்பது.

இலக்கனாதிபதி கேந்திர திரிகோணத்தில் இருக்க, அட்டமத்தில் பாவிகள் இல்லாதிருக்க, ஏழாமிடம் வியாழன் இருந்து பார்க்க, புண்ணியவானாக நூறு வயது இருப்பான் என்பது.

தோசம் தீர்தல்

வானெனும் ஒன்ப தைந்தில்
பத்திலக்க னத்தில் பொன்தான்
தானவன் புந்தி சுங்கன்
சாரில்லா தோசம் தீரும்
பானுவாம் பகல்ப்பி றக்கில்
மதியுமா இலாபம் சாரத்
தீனமாம் கோடி தோசம்
தீர்ந்திடும் சேய்க்குத் தானே. 145

என்பது.

ஒன்பதாமிடம், பத்தாமிடம், இலக்கனம் இவைகளில் வியாழனாவது, புதனாவது, சுக்கிரனாவது இந்தத் தானங்களில் இருக்க, எத்தனை தோசம் இருந்தாலும் தீரும். பகலில் பிறந்தவர்க்குச் சூரியன் இலாப இராசியில் இருக்க, இராத்திரி சந்திரன் இலக்கனத்துக்கு இலாபத்தில் இருக்க, கோடி தோசம் இருந்தாலும் தீரும்என்றவாறு.

சாமர யோகம்

தீரனாம் இலக்க னேசன்
பணபரம் சேர வெள்ளி
ஆரவே பார்க்க அன்றி
அழகுபொன் னுடனே கூடத்
தாரமா யோக ராச
பூச்சிய வித்து வானாய்ப்
பாரெல்லாம் துதிக்க எண்பது
வயதுபா ரிப்பன் நம்பி. 146

என்பது.

இலக்கனேசன் பணபரத்தில் இருக்க, சுக்கிரனால் பார்க்கப்பட, அல்லது வியாழத்துடனே கூடி இருக்கச், சாமர யோகம். இராச பூச்சியனாகவும், வித்துவானாகவும் லோகனாதனாகவும் வேத,சுரதமறியவனாகவும் எண்பது வயதும் இருப்பான் என்பது.

ஆற்றல் உடையவன்

நம்பியாம் வியாழன் இந்து
கேந்திரத் ததிலே நண்ண
அம்புலி குருவி னோடே
அன்னியபுண் ணியங்கேந் தரிக்க
தும்பியின் இடையே சிங்கம்
தோன்றிய தாகும் என்ன
நம்பியும் வாழ்வான் இந்தத்
தாரணி மதிக்கத் தானே. 147

என்பது.

சந்திரனுக்குக் கேந்திரத்தில் வியாழன் நிற்க, வியாழனுக்குக் கேந்திரத்தில் சந்திரன் நிற்க ஆயிரம் யானைக்கு ஒரு சிங்கம் போலே வாழுவான் என்பது.

தீர்க்காயுள்

மதித்திடும் பாவர் சட்ட
அட்டம வியமே வாழ
உதித்திடும் சுபர்கள் கேந்திரத்
திரிகோணம் தன்னில் மேவ
பதித்திடும் இலக்க னேசன்
பலமுறில் தீர்க்க ஆயுள்
கதிர்புற வாழ்வான் லோகம்
காற்றுமிக் காகத் தானே. 148

என்பது.

சட்ட, அட்ட, வியங்களில் பாவிகள் இருக்க, கேந்திர திரிகோணங்களில் சுபர்கள் இருக்க, இலக்கனேசன் பலவானாக இருக்க, தீர்க்காயுளோடு வாழ்வான் என்பது.

தீர்க்காயுள், வாகன யோகம் உடையவன்

மிக்கதாய மதிக்கு வெள்ளி
கேந்திரம் இருக்க இந்து
தக்கதாய்க் கவிக்கு கேந்திரம்
தனிலுறில் ஆயுள் உண்டாம்
மக்களில் மிகுந்து நல்ல
வாகன யோகம் உண்டாய்
மெய்க்கவே இருப்ப தாகச்
சாற்றிடும் வேதம் மூன்றாய். 149

என்பது.

சந்திரனுக்குக் கேந்திரத்தில் சுக்கிரன் இருக்க, சுக்கிரனுக்குக் கேந்திரத்தில் சந்திரன் இருக்க, தீர்க்காயுளும் வாகனமும் உண்டு என்பது.

சர்ப்பபீதியும், களரோகமும் கொண்டவன்

மூன்றிடம் உடைய கோவும்
இராகுவும் மூன்றில் வாழ
தோன்றிலே மூன்ற தாக
இராகுவும் இலக்க னத்தில்
வான்றிடில் சர்ப்ப பீதி
வருசங்கள் ரோகம் உண்டு
ஈன்றவர் பார்த்துத் தர்மம்
இயற்றுவ தியற்கை யாமே. 150

என்பது.

மூன்றாமிடத்தில் இராகுவும் மூன்றாமிடம் உடையவனும் கூடி இருக்க, இலக்கனத்தில் மூன்றாமிடம் உடையவனும் இராகுவும் இருக்க, சர்ப்ப பீதியும், களரோகமும் உண்டு என்பது.

நீர் கண்டம், மிருக கண்டம் உடையவன்

இயற்கையாம் இலக்க னங்கள்
சலமென குருவும் வாழ
முயற்கையாம் மூன்றாம் வீட்டான்
கூடில்நீரி லாகும் பீதி
வயற்றனாம் நாற்கா லாலும்
வரும்பய மென்று முன்னோர்
நயத்துடன் நல்லோ ராய்ந்து
பார்த்துடன் பிரிப்ப தாமே. 151

என்பது.

இலக்கனத்தில் குரு இருக்க, மூன்றாமிடம் உடையவன் கூடி இருக்க, அந்த இராசி சலராசியாக இருக்க, சலபீதியும் நாற்கால் மிருக பயமும் உண்டு என்பது.

நல்ல வீடு உடையவன்

விரித்திடு மூன்றாம் வீட்டான்
சூரிய னுடனே மேவப்
பரித்தசேய் மதியும் கர்ம
பாகனும் இராகும் கூட
தரித்திடு மேனி நல்ல
சாற்றிய நான்காம் வீட்டான்
பிரித்தநல் வர்க்கம் ஐந்து
பெறநல்ல கிரக முண்டே. 152

என்பது.

மூன்றாமிடம் உடையவனுடனே சூரியன் கூட, சந்திரனுடனே கர்மாதிபதி கூட, இராகு உடனே செவ்வாய் கூட இருக்க, சௌமியனாகச் சாத்விக புத்தி உடையவனாக இருப்பான். நான்காமிடம் உடையவன் ஐந்து வர்க்கம் கரையேற நல்லகிரகம் உண்டு என்பது.

கிரகனாம் நான்காம் வீட்டான்
இலக்கனன் இலக்க னத்தாய்
சுரர்குரு முதலோர் பார்க்க
நல்லகிர கம்குடி வைக்கும்
நரபதி நான்காம் வீட்டான்
கேந்திர மூறில் நல்லோர்
திரமெனக் கிரகம் தானும்
திடத்துடன் வாய்க்கும் தானே. 153

என்பது.

நான்காமிடம் உடையவன் இலக்கினாதிபதி உடனே கூடி, இலக்கனத்தில் இருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட்டால் பிரயத்தனமில்லாமல் நல்ல கிரகம் வாய்க்கும். நான்காமிடம் உடையவன் பலவானாகக் கேந்திரங்களில் இருக்க நல்லகிரகங்கள் வாய்க்கும் என்பது.

நல்ல வீடும், செல்வமும் உடையவன்

வாய்த்திடும் வாக னேசன்
சுகவர்க்கம் ஐந்தும் வாய்க்க
பாக்கிய கிரக முண்டாம்
பரமனாம் கிரக நாதன்
தாய்க்குமங் கிசத்தான் லக்கன
கேந்திரம் சாரில் நல்ல
தீர்க்கமாம் கிரக முண்டாய்த்
தனலாபம் கிட்டும் தானே. 154

என்பது.

நான்காமிடம் உடையவன் சுகவர்க்கம் ஏற, ஐந்து வர்க்கம் கரையேற, நல்ல கிரகம் உண்டு. நான்காமிடம் உடையவன் அடுத்த அங்கிசாதிபதி இலக்கன கேந்திரங்களில் இருக்க, நல்ல கிரகம், தன இலாபம் உண்டு என்பது.

உறவினர்களால் போற்றப்படுபவன்

கிட்டிய கிரக சிங்கா
சனமெனில் செங்கல் வீடாம்
திட்டாய் நான்காம் வீட்டான்
சௌமியள் சேர முன்பான்
இட்டமாங் கார கேசன்
சேய்நோக்க எவர்க்கும் மிக்காய்
வெட்டன வன்றி பந்து
மானென விளங்கு வானே. 155

என்பது.

கிரகாதிபதி சிங்காசன அங்கிசம் ஏற, தெய்வீகக் கிரகம் கட்டுவன். நான்காம் இடம் உடையவன் சௌமிய கிரகங்களுடனே கூடி இருக்க, சௌமியர் பார்க்க, காரகன் செவ்வாய் பார்க்க, பந்து பூச்சியனாக இருப்பான் என்றவாறு.

இடிந்த வீட்டில் இருப்பவன்

வெந்துதா னத்தான் தன்னை
வியாழம்பா ராதி ருக்க
அந்தமாம் குரூர சட்டி
அங்கிசம் அதிலே வாழ
நிந்தனை பிறரே சொல்ல
நீசர்வாழ் அகத்தில் வாழ்ந்து
புந்தியும் அன்றி புல்லர்
பூமனும் ஆவன் நல்லாய்

என்பது.

வெந்துத் தானத்தை வியாழன் பாராதிருக்க, பந்தீசன் குரூர சட்டியங்கிசம் கரையேற, நீசகிரகத்தில் இருப்பன் என்றவாறு.

சுற்றத்தாரிடம் பகை உடையவன்

நல்லதாம் பந்துத் தானம்
பாவியே நாடி வாழ
அல்லது தனத்தான் பாவி
கூடபந் தீன மாகும்
வல்லவன் நான்காம் வீட்டான்
நீசனாய் நான்கின் பாவர்
இல்லெனில் பந்து வாலே
கலகனாய் இருப்பன் நல்லாய். 157

என்பது.

பந்துத்தானத்தில் வெகு பாவிகள் இருக்க, அல்லது பந்துத்தானாதிபதியுடனே பாவியர் இருக்க பந்து ஈனனாக இருப்பான். நான்காமிடத்தில் பாவிகள் இருக்க, அந்தத் தானாதிபதி நீசாங்கிசம் ஏற நித்திய பந்து கலகனாக இருப்பன் என்றவாறு.

தாய் போன்றவருடன் தொடர்பு கொள்பவன்

இல்லிடம் சரமே யாக
இராசியான் சரத்தில் ஏற
பலபல கிரக முண்டாய்ப்
பாக்கியம் சுகம தாமே
சொல்லிய சுகத்தான் பாவச்
சகிதனாய்ச் சுபர்பா ராமல்
எல்லையி லேழான் நான்கான்
அன்னைபோல் இச்சிப் பானே. 158

என்பது.

நான்காம் இடம் சர இலக்கத் தானமாக அந்த இராசிநாதன் சரராசியில் இருக்க, அனேக கிரகம் உண்டாம். நான்காம் இடம் உடையவன் பாவியுடனே கூடி இருக்க, சுபக்கிரகம் பாராது இருக்க, ஏழாமிடம் உடையவனுடனே நான்காம் இடம் உடையவன் கூடியிருக்க, மாதாவுக்குச் சமமான பேரைக் கூடுவான் என்பது.

இச்சையாம் களத்தி ராதி
மூன்றென இருக்க நான்கான்
நச்சையாய்ப் புகரோ டாகில்
சகோதர சமான சங்கம்
சச்சறுங் கிரகத் தானுஞ்
சனியுறில் நான்கான் சுங்கன்
எச்சியில் வியமாய்ப் பாக்கியம்
பாவரில் தாயே சங்கம். 159

என்பது.

ஏழாமிடம் உடையவன் மூன்றாமிடத்திருக்க, சுக்கிரனுடனே நான்காமிடமுடையவன் கூடியிருக்க, சகோதர சமானச் சங்கம். நான்காமிடத்தில் சனி இருக்க, அந்தவீடு உடையவன் பன்னிரண்டில் சுக்கிரனுடனே கூட, பாக்கியத்தானம் பாவி வீடாக இருக்க, மாதுரு சமானச் சங்கம் என்பது.

சங்கையாம் சத்து ரேசன்
நான்கிலே சார இந்து
இங்கிதன் புதனும் கூட
இல்லுமே புருசர் வீடேல்
பங்கமா தாவைக் கூடும்
பாம்புதான் நான்காய்ச் செவ்வாய்
மங்கவே பார்க்கப் பானு
மகனும்கூ டிடில்அவ் வண்ணம். 160

என்பது.

ஆறாமிடம் உடையவன் நான்காமிடம் நிற்க, சந்திரனுடனே கூட பார்க்க, அந்த வீட்டான் புருச கிரகமாக இருக்க, முன் சொன்ன பலன் என்பது. நான்காமிடத்தில் இராகு இருக்க, அவனைச் செவ்வாய்ப் பார்க்க, சனியுடனே சூரியன் கூட, முன்சொன்ன பலன் என்பது.

சத்திரிய தந்தை

வண்ணமாம் பாம்பும் இந்தும்
மாத்துருத் தான மாகில்
புண்ணிய சுபர்பா ராரேல்
போதும்வை சியர்கள் விந்தாம்
நண்ணியே புகரும் பானும்
நான்கிலாய்ச் செவ்வாய்ப் பார்க்க
எண்ணிய சத்தி ரீயர்
விந்தென வியம்ப லாமே. 161

என்பது.

நான்காமிடத்தில் இராகுவுடனே சந்திரன் இருக்க, வைசிய புத்திரன். சூரியனுடனே கூட சுக்கிரன் நாலில் இருக்க, செவ்வாயாலே பார்க்க, சத்திரிய விந்து என்பது.

மாற்றான் பிள்ளை

விந்துவாம் இலக்க னேசன்
சுபனுடன் விரும்ப அன்றிச்
சுந்தான பிதாவான் கூட
புத்திரன் தோன்றிப் பார்க்கில்
நிந்தையாம் பரசா தகனாம்
சுகத்தினில் பாவி நிற்க
மந்தமாதி இலக்கன மூன்றாம்
பார்க்கிலவ் வண்ண (மாமே). 162

என்பது.

இலக்கனேசன் நான்காமிடம் உடையவனுடனே கூடி இருக்க, அல்லது பாக்கியனுடனே கூட ஆறாமிடம் உடையவன் பார்க்க பரசாதகன். மாதுரு தானத்தில் பாவி நிற்க மாதுருகாரகன் பாவியுடனே கூடியிருக்க இலக்கனாதிபதி மூன்றாமிடத்துடனே கூடியிருக்க, பரசாதகன் என்றவாறு.

வாகனத்தால் கேடு

வண்ணமாம் சுகதானத்தில்
பாவியாய் மாலோன் பார்க்கப்
பொன்னதாம் மாதுர்த் தானன்
குளிகனும் கூடில் நீசர்
எண்ணிலாச் சட்ட அட்ட
வியங்களில் வாக னேசன்
நண்ணிசேய் மாந்தி பார்க்க
இராசிகே தகமே நாடும். 163

என்பது.

மாதுரு தானத்தில் பாவி நிற்க, புதனாலே பார்க்கப்பட மாதுரு தானாதிபதி குளிகனுடனே கூட, ஈன விந்து. சட்ட, அட்ட, வியங்களில் வாகனாதிபதி நிற்க, குளிகன், செவ்வாயால் பார்க்கப்பட இலாபாதிபதி கூட ஒற்றித்த இராசியாக இருக்க, வாகன கேதகம் என்பது.

வீடு, வாகன யோகம்

நாடிய வாக னேசன்
புகருடன் வியத்தில் நண்ணத்
தேடுவான் சுயமாய் வீடு
பிதுர்மாதா கிரகம் சேரான்
பாடிய இலக்க னாதி
பதியுடன் பாக்கி யேசன்
ஓடியும் பார்க்க கர்மன்
சுபன்கூட வாக னங்கள். 164

என்பது.

நான்காமிடம் உடையவன் வியத்தில் சுக்கிரனுடனே கூடி நிற்க, மாதா பிதா வழியில்லாத சுயக்கிரகம் தேடுவான். இலக்கனாதிபதியும் பாக்கியாதிபதியும் அன்னிய புண்ணியம் பார்த்திருக்க, கர்மேசன் நான்காமிடம் உடையவனுடனே கூட அவனுக்கு கச, துரகம் (யானை, குதிரை, வாகன யோகம்) என்பது.

மூன்று வாகனங்கள்

சுகனெனும் பிருகு பாலன்
உச்சனாய்த் தோன்ற ஒன்பான்
புகருடந் கேந்தி ரத்தில்
வாகனம் பூமி சேரும்
தகுமெனத் தனத்தான் உச்சம்
தனதுகேந் திரம்விய மாக
முகமெனச் சுகனைப் பார்க்கில்
மூன்றுவா கனமும் உண்டே. 165

என்பது.

உச்சனாகச் சுக்கிரன் இருக்க, பாக்கியாதிபதி கேந்திரத்தில் இருக்க, வெகுவான கசம் உண்டு என்பது. இரண்டாமிடம் உடையவன் சொட்சசேத்திரனாக இருக்க அல்லது வியத்தில் இருக்க, பாக்கியாதிபதி வாகனாதிபதியைப் பார்க்க, மூன்று வாகனங்கள் உண்டு என்பது.

தீய நடத்தை உடையவன்

பாக்கியன் கேந்தி ரத்தாய்ச்
சுகத்தனை விரும்பிப் பார்க்க
ஆக்கமும் சுகமும் உண்டு
புகரொளிவாய் வெகுவாம் தாரம்
தேக்கதி புதனே ஏழில்
பரத்திரி சேர்வன் பொன்னன்
தூக்கிய ஏழி லாகில்
சோரத்திரி பிரிய னாமே.

என்பது.

பாக்கியன் கேந்திரத்தில் இருக்க நான்காம் இடம் உடையவனைப் பார்க்க, அவனுக்குச் சுகலாபம் உண்டு. சுக்கிரன் ஏழில் இருக்க, வெகு ஸ்திரி. புதன் ஏழில் இருக்க, பரதாரம். வியாழன் ஏழில் இருக்க சோரஸ்திரி பிரியன்.

கீழான பெண்களுடன் உறவு கொள்பவன்

ஏழிலே சனியின் நீசம்
இணங்குசேய் வெகுஸ்திரி என்க
பானுவே ரண்டில் வந்துத்
தோன்றபர தார மாகும்
கானையாம் இலக்க னாதி
குடும்பன்சத் துருவாய்க் காண
ஏழையாம் புகரும் பாவர்
இணங்கில்ஈன திரியே என்க. 167

என்பது.

சனி ஏழில் இருக்க, கீழ்ச்சாதி சையோகம். செவ்வாய் இருக்கில் வெகு ஸ்திரி. சூரியன் இரண்டில் இருக்க பரதாரம். இலக்கனாதிபதியும் குடும்பனும் சத்துருவாக குடும்பத்தில் இருக்க, சுக்கிரன் பாவ கிரகத்துடனே இருக்க, பரஸ்திரி, ஈனஸ்திரி சையோகம். சுபக்கிரகம் பார்க்க இல்லை என்பது.

நடத்தைக் கெட்ட களத்திரம் உடையவன்

ஈனமாம் பதியும் பாவி
இணங்கிய இலக்கன னோடே
பானுவும் பாவி கூடச்
சத்துரு தானம் சேர
கானமாம் தனத்தான் கர்மன்
களத்திரன் பத்தில் சார
ஈனமாம் தாரம் தானும்
பரர்களைச் சேரு வாளே. 168

என்பது.

சந்திரன் இலக்கனத்தில் பாவி நிற்க, இலக்கனாதிபதி யுடனே பாவி கூட, குடும்ப ஸ்தானத்தில் சத்துரு இருக்க, விபசாரக் களத்திரம், கர்மேசன், இரண்டாமிடம் உடையவன், களத்திரநாதன் கர்மத்தில் இருக்க, அந்தக் களத்திரம் சோரியாம் என்பது.

மாற்றான் பிள்ளை

சேருவன் பாவி யொன்று
நான்கிலாய்ப் பரத்தை தேடி
தாரனும் புத்தி ரேசன்
கூடசத் துருதா னத்தான்
கோரமாய்ப் பார்க்க வந்த
தாரமும் குரூர னாகி
ஆரவே கள்ள ராலே
பிள்ளையுண் டாவள் தானே. 169

என்பது.

நான்காமிடத்தில் பாவக்கிரகம் ஒரு கிரகம் இருக்க, பரஸ்திரி கமனம். புத்திரேசனும் ஏழாம் இடம் உடையவனும் கூடி இருக்க, அவனை ஆறாமிடம் உடையவன் பார்க்க, கள்ள நாயகனால் பிள்ளை உண்டு என்பது.

தோன்றிடும் ஆறான் வீட்டான்
பலமின்றி சுங்கன் கூட
ஆன்றபா விகளே பார்க்கில்
அவ்வண்ணம் பாக்கி யாதி
கான்றிடும் களத்தி ராதி
ஆறெட்டில் பன்னி ரண்டில்
ஈன்றபுத் திரனால் பார்க்க
முன்சொன்ன மகவுண் டாமே. 170

என்பது.

ஆறாம்இடம்உடையவன்பலயீனனாகஇருக்கச்சுக்கிரனுப் கூடி இருக்க, அவர்களைப் பாவியர் பார்க்க முன் சொன்ன பலன். பாக்கியாதிபதிகளத்திராதிபதிசட்ட, அட்டம, வியங்களில் இருக்க, புத்திரதானாதிபதியால் பார்க்கப்பட முன்சொன்ன பலன் என்பது.

கர்ப்பத்துடன் மனைவி மரணம்

மகவெனும் தானத் தானும்
களத்திரம் பொருந்த ஏழான்
மிகவும்பா வியமாய்க் கூடச்
சுக்கிரன் பலமில் லானேல்

அகமகள் கர்ப்பத் தோடே
அழிவது திண்ண மாகப்
பகருவீர் சுபக்கோள் தானே
பார்வைதக் கதுவாய் தானே. 171

என்பது.

ஐந்தாமிடம் உடையவன் ஏழில் இருக்க, ஏழாமிடம் உடையவன் பாவிகளுடனே கூட, சுக்கிரன் பலவீனனாக இருக்க, தாரம் கர்ப்பத்துடனே மரணம்.

மூன்று தாரங்கள் உடையவன்

வாய்ந்த மதியும் நீசமுற
செவ்வாய் பார்க்கச் சுக்கிரனும்
மாய்ந்த மூன்றாம் இடமாக
மூன்றாம் திரேகா ணம்மேவில்
தோய்ந்த தாரம் விசங்களையே
தின்று சோரும் களத்திரனும்
மேய்ந்த காரகன் உச்சமெனில்
மூன்று தாரம் இவர்க்கென்ன. 172

என்பது.

சந்திரன் நீசனாக செவ்வாயாலே பார்க்கப்பட, சுக்கிரன் மூன்றாம் இடத்தில் இருக்க, மூன்றாம் திரேகாணம் பாவத்திரேகாணமாகத் தாரம் விட பட்சணத்தினால் மரணம். களத்திரத் தானாதிபதியும் களத்திரகாரகனும் உச்சனாக அவனுக்கு மூன்று ஸ்திரி வாய்க்கும்.

நல்ல மனைவி உடையவன்

தாரநா யகனும் பாவி
தனத்தவன் பாவி யாகக்
கோரமாஞ் சனி சேய் இராகு
கூடிடில் தார நாசம்
தீரவாய் நான்காம் வீட்டில்
சுபர்சேர பாக்கி யேசன்
தூரமாய் உச்சம் ஏக
களத்திரச் சுகமுண் டாமே. 173

களத்திராதிபதி பாவியாக இருக்க, குடும்பேசனும் பாவியாக இருக்க, சனி, இராகு, செவ்வாய் கூடியிருக்க களத்திரம் நாசம். நான்காமிடத்தில் சுபன் இருக்க பாக்கியேசன் பரம உச்சனாக இருக்க, நல்ல களத்திரம் என்பது.

அதிக பெண்களிடம் தொடர்பு கொள்பவன்

சுகம்பெறும் ஏழாம் வீட்டான்
இலக்கனம் தோன்றி வாழ
மகபதி கர்மத் தானம்
தனிலுறில் மதன யோகம்
வெகுஸ்திரி புணர்ந்து காம
வாகனாய் யோக வானாய்
தகமையும் உடைத்துக் கீர்த்தி
ஆனதாய் தழைத்து வாழ்வான். 174

என்பது.

ஏழாமிடம் உடையவன் இலக்கனத்தில் இருக்க, கர்மாதிபதி கர்மத்தில் இருக்க, மதன யோகம். வெகு ஸ்திரி உண்டு என்பது.

அதிக பிள்ளகளைப் பெறுபவன்

ஆனதோர் புத்தி ரேசன்
சுபனுட னாக வந்த
மீனவன் வியாழன் பார்க்க
புத்திரர் மிகஉண் டாகும்
தானவன் புத்தி ரேசன்
இலக்கன னுடனே சார
நானென வியாழன் பார்க்க
நல்லபுத் திரருண் டாமே. 175

என்பது.

புத்திரத்தானாதிபதியை வியாழன் பார்க்க, அவன் சுபனுடனே கூட புத்திர பாக்கியம் உண்டு. இலக்கனேசன் புத்திரத்தானாதிபதியுடனே இருக்க, பரிபூரண பலமாய் வியாழன் பார்க்க, வெகுபுத்திர பாக்கியம் உண்டு என்பது.

தத்துப்புத்திரன்

புத்திரத்தா னத்தான் உச்ச
வீடதாய் இலக்க னேசன்
உத்திட வியாழன் பார்க்க
அநேகபுத் திரர்உண் டாகும்
மத்துமே புத்தி மைந்தன்
வீடைந்தான் தான மாகில்
குத்திரன் மாந்தி மந்தன்
பார்த்திடில் தெத்தாய்க் கூறே. 176

என்பது.

புத்திரத்தானாதிபதியும் இலக்கனாதிபதியும் உச்ச சொட்சசேத்திரமாக இருக்க, வியாழனாலே பார்க்கப்பட, வெகு புத்திரர் உண்டு என்பது. ஐந்தாமிடம் புதன் வீடாக அல்லது சனி வீடாக இருக்க குளிகனாலே, சனியாலே பார்க்கப்பட, அவனுக்குத் தத்துப்புத்திரன்.

மாற்றான் பிள்ளை

கூறிய புத்தி ரேசன்
இலக்கனன் கூடிப் பார்க்க
மாறியும் சனியே பார்க்க
புத்திரன் நீச னாக
வேறதாய் மனையாள் சோர
விரும்பியும் பிள்ளை உண்டாம்
தேறியே பெறுவாள் பாவி
கர்மத்தில் சேர்கி லானே. 177

என்பது.

இலக்கனாதிபதியும் புத்திராதிபதியும் அன்னிய புண்ணியம் பார்க்க, சனியாலே பார்க்கப்பட, புத்திரகாரகன் நீசனாக, சோர புத்திரர் என்பது.

சேர்கிலா இலக்க னேசன்
ஆறினில் சேர அந்தத்
தீரனாம் சத்து ரேசன்
பலமுற வியாழன் தானும்

கூரனாய் நீச னாகிக்
குலத்தினும் இழுக்க தாகப்
பாரியும் சோர ராலே
கர்ப்பமும் பற்று வாளே. 178

என்பது.

இலக்கனேசன் ஆறாம் இடத்தில் இருக்க, ஆறாமிடம் உடையவன் பலத்திருக்க, குரு நீசனாகப் போக முன் சொன்னது போல பாரியும் சோர பர்த்தாவாலே புத்திரரைப் பெறுவாள்.

புத்திரர் அழிவு

பத்திய புத்தி ரேசன்
பர்வதங் கிசமே பற்ற
புத்திரர் நாசம் உண்டாம்
குரூரசட்டி யங்கிசம் ஏற
மத்திய நீச மூடம்
ஆனதால் புதல்வர் நாசம்
சத்திய மாகச் சொன்னோம்
தகவதாய் ஆய்ந்து கொள்ளே. 179

என்பது.

ஐந்தாமிடம் உடையவன் குரூர சட்டி அங்கிசம் ஏற, நீச மூடமாக இருக்க, புத்திரர் நாசம் வரும் என்பது.

தத்தெடுப்பாவன்

ஆய்ந்திடும் புத்தி ரேசன்
மிருத்துஅங் கிசமே யாக
வாய்ந்திடும் தானம் தன்னில்
பானுவே வாழச் செவ்வாய்ச்
சாத்ததும் வியாழத் தோடாய்ச்
சகோதரர் பிள்ளை தன்னைப்
பேர்ந்தவன் தத்துக் கொண்டு
புகழுடன் வளர்ப்ப தானே. 180

என்பது.

புத்திரத்தானாதிபதி மிருத்துவங்கிசம் ஏற, புத்திரத்தானத்தில் சூரியன் நிற்க, செவ்வாய், வியாழத்துடனே கூட, சகோதரர் புத்திரனைத் தத்துக் கொள்வான் என்பது.

புத்திரர் முகம் அறியாதவன்

வளமுறும் இலக்க னத்தில்
மாலவர் சேய்தான் பார்க்கில்
விளியென பரதா ரத்தை
இச்சிப்பன் புதல்வன் இல்லை
உழமெனும் பஞ்ச மத்தில்
புதனவன் உதயம் நாலில்
அளவிலா பாவி அட்டம்
இல்லையேல் பிள்ளை இல்லை. 181

என்பது.

புதன் இலக்கனத்தில் இருக்க, செவ்வாயாலே பார்க்கப்பட, பரதாரம் இச்சிப்பன், புத்திரர் நாசம். புதன் ஐந்தாமிடத்தில் இருக்க, இலக்கனத்தில் நான்காமிடத்தில் பாவி நிற்க, அட்டமத்தில் சுகக்கிரகம் இல்லாதிருக்க, புத்திரர் முகம் அறியான்.

தீவிர புத்தி உடையவன்

பிள்ளையாம் இலக்க னத்தில்
சேய்வர சனியின் எட்டாய்
உள்ளதாம் ஐந்தில் பானு
சுபதிட்டி யுளதால் அற்பம்
ஒள்ளிய ஐந்தாம் வீட்டான்
உச்சமாய்ச் சுபக்கோள் பார்க்க
விள்ளதாம் மத்தி யாகில்
புத்தியும் மிகவுண் டாமே. 182

இலக்கனத்தில் செவ்வாய் இருக்க, எட்டில் சனி நிற்க, ஐந்தில் சூரியன் நிற்க, சுபர் திருட்டி உண்டாகில், காலாந்திரத்தில் புத்திரலாபம். ஐந்தாமிடம் உடையவன் பரம

உச்சம் ஏற, அவனைச் சுபர் பார்க்க, அல்லது சுபக்கிரகம் மத்தியில் இருக்க தீவிர புத்தி உடையவன் என்பது.

புத்திரர் அழிவு

புத்திர கார கன்தான்
பூரண பலமே யாகத்
தெத்திய தானத் தானைப்
பொன்பார்க்கிற் தீவிரமாம் புத்தி
சத்தியாம் ஐந்தில் பாவி
தானனும் பாவி கூட
உத்தியும் குரூர சட்டி
அங்கிசம் புத்திரர் நாசம். 183

என்பது.

புத்திரகாரகன் பூரண பலமாக இருக்கத் தனாதிபதியை வியாழன் பார்க்க தீவிரபுத்தி. ஐந்தாமிடத்தில் பாவி நிற்க, அந்தத் தானாதிபதி பாவியுடனே கூட குரூர சட்டி அம்சம் ஏற, புத்திரர் நாசம் வரும்.

பைத்தியக்காரன்

நாசமாம் புத்திர தானன்
நீசமூ டாரி நாட
பாசமாய்க் கூடில் புத்திர
நாசமாம் பஞ்ச மத்தில்
தேசில்லாச் சனியே வாழப்
பாவிகள் திருட்டி உண்டேல்
காசுறு மங்க னாகிப்
பைத்தியக் கார னாவான். 184

என்பது.

ஐந்தாமிடம் உடையவன் நீச மூடாரிகளுடனே கூட புத்திர நாசம். ஐந்தில் சனி நிற்க, அவனைப் பாவக்கிரகம் பார்க்க பைத்தியக்காரன் என்பது.

ஞானி

ஆகிய ஐந்தாம் வீட்டான்
அதிகஉச்ச மாகப் பொன்னன்
ஏகமாய்ப் பார்க்க புத்தி
ரேசனும் இறைவன் தானும்
நாகமாம் கோபு ராங்சம்
அதிலாக இறைவன் தானும்
மாகியத் திரிகா லத்தின்
ஞானியாய்ச் சேரும் தானே. 185

என்பது.

ஐந்தாமிடம் உடையவன் உச்சனாக வியாழத்தால் பார்க்கப்பட, ஐந்தாமிடம் உடையவன் கோபுராங்கிசம் கரையேற, அவன் திரிகால ஞானியாக இருப்பான் என்றவாறு.

பெண் குழந்தைகள் அதிகம் உள்ளவன்

தேனெனும் ஐந்தாம் வீட்டான்
புருடனாய்ச் செம்பொன் நோக்க
ஈனமாய் மக்கள் தன்னில்
புருசரே மிஞ்ச யெய்தும்
ஆனதோர் ஐந்தாம் வீடு
திரிராசி யாக நீசர்
போனயாய்ப் பார்க்கப் பொன்னே
பெறுவனே மிஞ்சித் தானே. 186

என்பது.

ஐந்தாமிடம் உடையவன் புருஷக்கிரகமாக, அதை வியாழன் பார்க்க, புத்திரர் மிஞ்சி இருக்கும். ஐந்தாமிடம் ஸ்திரிராசியாய் இருக்க அதை நீசக்கிரகம் பார்க்கப் பெண்பிள்ளை அதிகம் என்பது.

ஐந்தாம் பாவம் முற்றும்

---- ❋ ----

6. ஆறாம் பாவம்

மிஞ்சிய ஐந்தாம் பாகம்
முகிந்தது மின்னே இன்னும்
தஞ்சமாம் ஆறாம் பாகம்
சத்துரு ரோகத் தானம்
துஞ்சிய சோரத் தானம்
தூரமும் அடவ தாக
அஞ்சலாம் வெங்க டேசன்
அருளினால் உதவ லாமே. 187

என்பது.

ஆறாம் இடம் கொண்டு சத்துரு, ரோகம் சோரம், விக்கினம் இதுவெல்லாம் சொல்ல.

சத்தி குன்மம்

தவனெனும் ஆறான் வீட்டான்
குரூரமாய் உதயம் சார
பவமெனும் எட்டில் சார
விரணமே பலிக்கும் என்க
அவமெனும் ஐந்தாம் வீட்டான்
ஆறில்ஆ றானோ னோடே
தவமென கூடிச் சத்தி
குன்மமே பலிக்கும் மிஞ்ச. 188

என்பது.

ஆறாமிடம் உடையவன் குரூர கிரகமாக லக்கனத்தில் இருக்க, அல்லது அட்டமத்தில் இருக்க, சரீர விரணனாக இருப்பான். ஐந்தாமிடம் உடையவன் ஆறாமிடத்தில் நிற்க, அந்தத் தானாதிபதியுடனே கூடி இருக்க, சத்தி குன்மம் வரும் என்பது.

பலிப்பது ஏழாம் தானம்
        பானுவாய் இலக்க னேசன்
மெலிந்தஅட் டமத்தில் நிற்க
        வியயேனும் ஆறில் சேர
சொலித்திடும் சோரி செய்த
        மருந்தினால் சுட்க மாகிக்
கலித்திடும் சத்தி குன்மம்
        காளையும் அதனில் மாய்வன். 189

என்பது.

ஏழாமிடத்தில் ஆதித்தன் நிற்க, இலக்கனாதிபதி எட்டில் நிற்க, வியாதிபதி ஆறில் நிற்க, சோராதிரி மருந்தினால் சத்தி குன்மம் வரும் என்பது.

குட்டரோகம், இரத்தசோகை

மாய்ந்திடும் மதியும் ஐந்தாம்
        தானனும் ஆறில் வாழ
ஆய்ந்தெழும் இராகு கேது
        இலக்கமாய் அமைய குட்டம்
ஈய்ந்திடும் இலக்க னாதி
        நாலில்சத் துருவோ டெய்த
பாய்ந்தபாம் புதையம் ஆறான்
        பார்த்திடில் சோகை யத்தி. 190

என்பது.

சந்திரனும் புத்திரத் தானாதிபதியும் ஆறில் நிற்க, இராகு கேதுவுடனே கூடக் குட்ட ரோகத்தினால் மரணம். இலக்கனாதிபதி நான்கில் நிற்க, ஆறாம் இடம் உடையவன் கூட அல்லது பார்க்க, இராகு, கேது இலக்கனத்தில் நிற்க, சோகையாய் நொறுக்கு நோயுடன் வாழ்வான் என்பது.

வாத சூலை

அத்திய புதனும் ஆறில்
அரவுடன் கூட மந்தன்
சத்தியாய்க் கூடப் பார்க்க
சத்தமி இரவி நின்று
வைத்தஇலக் கனத்தைப் பார்க்க
வாதசூலை அதனால் மேனி
வத்தியே முடமாய்ப் பாவி
யாய்இவன் இறப்பான் மின்னே. 191

என்பது.

புதன் ஆறில் நிற்க, இராகுவுடனே கூட, சனி கூட அல்லது பார்க்க, ஏழில் ஆதித்தன் நின்று இலக்கனத்தைப் பார்க்க, வாதசூலையினால் சரீரம் விழும் என்பது.

வெட்டுக்காயத்தால் மரணம்

இரவியும் ரோகத் தானும்
இலக்கனா திபனும் ஒன்றாய்
விரவிய ராசி யாக
மதிகூட அன்றி பார்க்க
புரவலன் சலத்தின் பாங்கில்
போதுற வெட்டுப் பட்டு
திரமென மாய்வான் ஆய்ந்து
தெளிவினால் தேறல் நன்றே.

என்பது.

ஆதித்தனும் ஆறாம் இடம் உடையவனும் இலக்கனாதிபதியும் ஒரே இராசியில் இருக்க, சந்திரனுடனே கூடி இருக்க, அல்லது சந்திரனால் பார்க்க, சலக்கரையில் வெட்டுப் பட்டுச் சாவான் என்றவாறு.

விஷத்தால் மரணம்

நன்றெனும் ரோகத் தானும்
　　பாம்பும்ஒன் றாகி ஆறில்
நின்றிட சேயே பார்க்க
　　நெருப்பின்மேல் விழுந்து சாவான்
அன்றியும் இலக்க னாதி
　　பதிசத்தம் அமைந்து பாவி
கன்றெனப் பார்க்க ஆறான்
　　கர்மமேல் ஸ்திரியால் சாவான். 193

என்பது.

இராகுவானாலும் கேதுவானாலும் ஆறாமிடம் உடையவனுடனே கூடி ஆறில் நிற்க, செவ்வாய் பார்க்க, அக்கினியில் அகப்பட்டுச் சாவான். இலக்கனாதிபதி ஏழாம் இடம் இருந்து பாவிகளின் பார்வைபெறக் கர்மாதிபதியும் சட்டாதிபதியும் இலக்கனத்தில் இருக்க, ஸ்திரி நிமித்தம் விடபட்சணம் பண்ணி மரணம் என்பது.

மரத்திலிருந்து விழுந்து மரணம்

ஆலமாம் இராகு கேது
　　கேந்திரத் திரி கோணத் தாக
ஏலமாம் ஆறாம் வீட்டான்
　　இருந்ததைப் பார்க்க அப்போ
சீலமாம் பிதுருத் தான
　　காரன்அட் டமத்தில் சேர
பாலனும் மரத்தில் ஏறி
　　படியினில் விழுந்து மாய்வான். 194

என்பது.

இராகு, கேதுக்கள் கேந்திரத் திரிகோணத்தில் இருக்க, ஆறாமிடம் உடையவனால் பார்க்கப்பட, பித்ருத் தானாதிபதி, காரகன் அட்டமத்தில் இருக்க, மரத்தில் ஏறி விழுந்து மரணம் என்பது.

பெண்ணால் மரணம்

மாயவன் இரண்டாம் வீட்டான்
களத்திரன் ரோக னோடே
ஆயவன் இருக்க ஏழான்
பார்த்திடில் ஸ்திரியால் மாய்வான்
தேயுமா மதியாம் இராகு
திருட்டிக்க கர்மன் ஏழான்
தீயவர் பார்க்கில் சொந்த
ஸ்திரியினால் மரணம் செப்பே. 195

என்பது.

இரண்டாம் இடம் உடையவனும் களத்திராதிபதியும் ஆறாமிடம் உடையவனும் கூடி இருக்க, சுக்கிரனாலே பார்க்கப்பட, ஸ்திரி மருந்தினாலே மரணம். சந்திரன் இராகுவாலே பார்க்கப்பட, கர்மாதிபதியும் களத்திராதிபதியும் கூடி இருக்க, தீயவர் பார்க்க ஸ்திரியினால் மரணம் என்பது.

மரத்திலிருந்து விழுந்து மரணம்

செப்பிய இராகு கேது
கேந்திர திருகோ ணத்தாய்
வெப்புடன் ஆறான் பார்க்க
பாக்கியன் இரவி எட்டாய்க்
கொப்புறு மரத்தில் ஏறிக்
கோரமாய் விழுந்து சாவான்
தப்பிடா தென்று முன்னோர்
சொல்லினார் தமிழ்வல் லாரே. 196

என்பது.

இராகு, கேது கேந்திரதிரிகோணத்தில் நிற்க, ஆறாமிடம் உடையான் பார்க்க, பாக்கியனும் ஆதித்தனும் எட்டில் நிற்க, மரத்தில் ஏறி விழுந்து சாவான் என்பது.

பெண்ணால் மரணம்

சாற்றிய தனத்தான் ஏழான்
சத்துருத் தானன் கூட
மாற்றவன் புகரே பார்க்க
மருந்திடும் ஸ்திரியால் மாய்வான்
சீற்றமா மதியை இராகு
திருட்டிக்க கர்ம நாதன்
தோற்றியும் ஏழான் கூட
ஸ்திரியினால் மரணம் சொல்லே. 197

என்பது.

இரண்டாமிடம் உடையானுடனே களத்திராதிபதி, சத்திராதிபதி கூடி, சுக்கிரன் பார்க்க, ஸ்திரி மருந்தினால் சாவான். சந்திரன், இராகு பார்க்க, ஏழாமிடம் உடையவனுடைய கர்மநாதன் கூட ஸ்திரியினால் மரணம் என்பது.

தூக்கிலிடப்பட்டு மரணம்

சொல்லிய மதியா றெட்டுத்
துவாதேசம் சேர மாந்தி
வல்லவன் இலக்க னேசன்
பார்த்திடில் கயிற்றால் மாய்வான்
அல்லது அட்ட மாதி
இலக்கனன் உடனே யாக
புல்லிய இராகு பார்க்க
பாவத்திரே காணம் முன்போல். 198

என்பது.

சட்ட, அட்ட, வியங்களில் சந்திரன் நிற்க, இலக்கனாதிபதியாலே பார்க்கப்பட, சனி, குளிகன் பார்க்க, கயிற்றினால் துர்மரணம். அட்டமாதிபதியும் இலக்கனாதிபதியும் கூடியிருக்க, இராகுவாலே பார்க்கப்பட, பாவத் திரேகாணம் ஏறக் கயிற்றினால் துர்மரணம் என்பது.

முன்னிய மந்தன் மாந்தி
குருவுடன் மூன்று கூடி
பண்ணிய அட்ட மாதி
பதியுடன் பார்வை யாகித்
தன்னிலே சனியும் எட்டாம்
தானனைப் பார்க்கு மாகில்
உன்னியே கயிற்றில் தொங்கி
உயிர்தனை இழப்ப தாமே. 199

என்பது.

சனி, குளிகனுடனே வியாழன் கூட, அட்டமாதிபதியாலே பார்க்கப்பட, அல்லது சனியாலே அட்டமாதி பார்க்கப்பட முன் சொன்ன பலன் என்பது.

ஆயுதத்தால் மரணம்

இழப்பதாம் எட்டில் ஆறில்
சகோதர சேயும் கூடில்
வளப்படு மாந்தி மந்தன்
கூடில்ஆ யுதத்தால் மாய்வன்
அளப்பிலே ஆயுள் தானம்
பாவராய் மதியும் சேயும்
சளப்படும் குரூர சட்டி
அங்கிசம் சாரில் முன்போல். 200

என்பது.

ஆறில், எட்டில் செவ்வாயும், மூன்றாம் இடம் உடையவனுடனே கூடி நிற்க, சனி, குளிகன் கூடி நிற்க, ஆயுத மரணம். அட்டமத்தில் பாவர் இருக்க, செவ்வாயுடனே சந்திரன் குரூர சட்டியாங்கிசம் ஏற, ஆயுத மரணம் என்பது.

முன்னிய செவ்வாய் மேட
விருச்சிக முயன்று நிற்க
வன்னியர் இரவி அன்னிய
புண்ணிய மாறிப் பார்க்க

இன்னெழில் அங்கி சத்தில்
அப்படி மாறி பார்க்கில்
தன்னிலே கோபம் உண்டாய்க்
கருவியால் சயிப்பன் தானே. 201

என்பது.

செவ்வாய் மேட விருச்சிகத்தில் நிற்க, ஆதித்தனும் அவனும் அன்னிய புண்ணியம் பார்க்க அல்லது அங்கிசத்தில் அப்படி இருக்க, ஆயுதத்தால் மரணம் என்பது.

சயரோகம்

சயித்திடும் ஆறான் குரூர
சட்டிஅங் கிசஞ்சார் பாவி
செயித்ததைப் பார்க்கப் பானும்
கூடஅவந் தரையாய்ச் சாவான்
பைத்திய புதனும் சேயும்
கூடசுக் கிரனும் பார்க்க
தைத்தியல் குரூர சட்டி
சாரவும் சயமாம் ரோகம். 202

என்பது.

ஆறாமிடம் உடையவன் குரூர சட்டி அங்கிசம் ஏற, பாவிகள் பார்க்க, சூரியன் கூடி இருக்க, அவந்தரை மரணம். ஆறில் புதனும் செவ்வாயும் நிற்க, சுக்கிரன் பார்க்க, குரூராங்கிசம் ஏற, சயரோகம் வரும் என்பது.

தீராத நோய்

ரோகமாம் தான மந்தன்
சேயுற பானும் பார்க்க
ஆகிலே பாம்பு பார்க்க
இலக்கனன் நீச னாக
ஏகிலே பலமில் லானே
இருந்திடும் அளவும் பொல்லா
வேகமாய் நோயுண் டாகி
மிடியனாய் மரிப்பன் தானே. 203

என்பது.

ஆறில் சனியும் செவ்வாயும் நிற்க, சூரியனாவது இராகுவாவது பார்க்க, இலக்கனாதிபதி ஈன பலவானாக இருக்க தீராத ரோகம் வந்து இறப்பான் என்பது.

சயரோகம்

மிடியெனும் ஆறாம் தானம்
மந்தனும் மாந்தி மேவப்
படியுறும் பாம்பும் பானும்
சேயதைப் பார்க்க நல்லோர்
உடனதைப் பார்த்தி டானேல்
சயரோக மாகும் மேனி
கடனுறத் திரிந்து காலன்
கைவசம் ஆவான் இவன்தான். 204

என்பது.

ஆறில் சனியும் குளிகனும் இருக்க, இராகு, கேது, செவ்வாய், ஆதித்தன் பார்க்கச் சுபதிருட்டி இல்லாதிருக்கச் சயரோகம் வரும் என்பது.

மூத்திரக் கிரிச்சனம், பீனிசநோய்

இந்துவும் ரோகத் தானும்
சலத்துற சலத்தான் பார்க்க
முந்திய ரோகத் தானும்
மூத்திரக் கிரிச்சன மாகும்
பத்தமா மிருத்தி யோக
மந்தனகேந் திரமாய்ப் பாவர்
பிந்தியே வேயும் பாவர்
அங்கிசம் பீனிச னானே. 205

என்பது.

சந்திரன் சலராசியில் இருக்க, சட்டாதிபதியும் சலராசியில் இருக்க, சலத்தானாதிபதி பார்க்க [illegible]

கிரிச்சனம் வரும். ஆறில் சந்திரன் நிற்க, சனி கேந்திரத்தானத்தில் இருக்க, வியத்தானத்தில் பாவி நிற்க, பாவி அங்கிசம் கரையேற பீனிசம் வரும் என்பது.

சத்தி குன்மம்

நேசமாம் ஆறில் பாவர்
　　நின்றிட இலக்க னேசன்
ஆசிலாப் பலமில் லானேல்
　　சத்தியால் குன்ம மாகும்
மாசையால் ரோகன் என்றும்
　　அங்கிசம் பானு மந்தன்
வாசமாய் இருக்கில் சத்தி
　　குன்மாய் வருக்க லாமே. 206

என்பது.

ஆறாமிடம் உடையவன் பலயீனனாக இருக்க, இலக்கனேசனும் பலயீனனாக இருக்க, சத்திகுன்மம். சட்டேசன் கரையேறின அங்கிசாதிபதி சூரியன் சனியாக இருக்க, சத்தி குன்மம் வரும் என்பது.

எதிரிகளால் மரணம்

சத்துருத் தானம் கேந்திரம்
　　சார்பாவி கள்தான் நோக்க
மத்துமா றானைப் பாவி
　　பார்க்கவர்த் திக்கும் ஒண்ணார்
அத்திய இலக்க னேசன்
　　ஆறிலாய் ஆறான் இலக்கன
மத்திப மாந்தி பார்க்கில்
　　வர்த்திக்கும் ஒண்ணார் தானே. 207

என்பது.

சத்துரு தானாதிபதி கேந்திரத் திரிகோணத்தில் இருக்க, பாவக்கிரகம் பார்க்க, ஆறாமிடம் உடையவனைப் பாவிகள் பார்க்க, சத்துரு வர்த்தனை. இலக்கனேசன் ஆறில் நிற்க ஆறாமிடம் உடையவன் இலக்கனத்தில் நிற்க, சனி குளிகன் கூட இருக்க, சத்துரு வர்த்தனை.

தாயாதிகளால் தொல்லை

ஒண்ணலார் தானத் தானும்
நீசத்த மனமாய் ஓங்க
அன்னியம் நீச மூட
இலக்கனம் பலமே யாகில்
தன்னிலே பகையும் மாயும்
இலக்கனன் ஆறான் அன்றி
உன்னியே உதயம் பார்க்க
ஞாதியால் ஊக்கம் உண்டாம். 208

என்பது.

சத்துருத்தானாதிபதி அத்தமன நீசத்தில் இருக்க, இலக்கனாதிபதி பலவானாக இருக்க, சத்துரு நாசம் உண்டாம். இலக்கனேசன் ஆறில் நிற்க அல்லது சட்டேசனாலே இலக்கனாதிபதி பார்க்கப்பட அல்லது ஆறாம் இடம் உடையவன் இலக்கனத்தில் நிற்க, ஞாதியால் பீடை வரும் என்பது.

தாயாதிகளால் சீவனம்

ஊத்தமாம் புகரே பொன்னன்
ஆறாமிடம் கூடி ஒன்றாய்ச்
சீத்தமாய்ச் சனிசேய்ப் பார்க்க
ஞாதியால் சேரும் பீடை
காத்திடும் இலக்க னாதி
சுபனெனில் ஆறான் இந்து
கூத்தகேந் திரகோண் மாற
கொடுக்கும்ஞா தியினால் இன்பம் 209

என்பது.

குரு, சுக்கிரன் ஆறாமிடம் உடையவனுடனே கூடி இலக்கனத்தில் இருக்க, சனி, செவ்வாய், இராகு பார்க்க, ஞாதி பீடை. இலக்கனாதிபதியன் சுபராய் இருக்க, ஆறாமிடம் உடையவனும் சந்திரனும் கூடி இருக்க, கேந்திர திரிகோணத்தில் புதன் இருக்க, ஞாதிகளாலே சீவனம்.

தாயாதிகள்வெற்றி

ஞாதியாம் ஆறான் பாவன்
நீசனாய் அங்கி சத்தில்
கோதில்லாக் குரூர சட்டி
கொண்டிடில் ஞாதி மாயும்
சூதமாய் ரோகன் ஆறு
வர்க்கமே சூழப் பின்னும்
ஏதில்லாப் பலனில் லானே
ஞாதியும் இறந்து போமே. 210

என்பது.

ஆறாமிடம் உடையவன் பாவியாக, நீசம் கரையேறிக் குரூர சட்டி அங்கிசத்தில் இருக்க ஞாதி செயம். ஆறாமிடமுடையவன் ஆறு வர்க்கம் ஏறி பர்வதாம்சமாக இருக்க, அவன் பலயீனனான ஞாதி சயம் என்பது.

தீயினால் மரணம்

போதமாம் பாக்கி யேசன்
ஆறிலாய்ப் போகப் பார்க்கக்
கோதில்லா ரோகன் செவ்வாய்ச்
சனியுடன் கூடிப் பார்க்க
சாதகனக் கினியால் சென்மம்
பலமுறச் சட்ட னாதன்
மாதவன் மாந்தி கூடில்
மரிக்கும்அக் கினியால் தானே. 211

என்பது.

பாக்கியேசன் சட்ட இராசியில் இருக்க, ஆறாமிடம் உடையவன் பார்க்க, ஆறாமிடம் உடையவனைச் சனி, செவ்வாய்க் கூடிப் பார்க்க, அக்கினியால் மரணம். இலக்கனேசன் பூரண பலமாக இருக்க, சட்டேசன் மாந்தியுடனே கூடிப் பார்க்க, அக்கினியால் மரணம் என்பது.

இனிப்புப் பண்டங்களில் விருப்பம்

தானெனும் பிருகு பாலன்
ஆறிலே பலமாய்ச் சார
வானவன் சுபக்கோள் பார்க்கில்
நித்திய மதுரம் உண்பன்
ஆனதோர் ஆறான் பாவ
முடிந்துபின் அடவ தாக
ஈனமில் ஏழாம் பாவம்
இயற்றுவ தியற்கை யாமே. 212

என்பது.

சுக்கிரன் ஆறாமிடத்தில் பலவானாக இருக்க, சுபர் திருட்டி உண்டாக நித்தியம் மதுரம் புசிப்பான்.

ஆறாம் பாவம் முற்றும்

7. ஏழாம் பாவம்

சிறப்புடன் முனிவோர் சொல்லும்
சோதிடம் அதனை ஆய்ந்து
செயப்புள்ள கிரகம் கோளின்
ஆனதை ஆய வல்லார்
வியப்புடன் வெங்க டேசர்
வேதிய சுவாமி சொன்னார்
நயத்துடன் ஊமன் கற்று
நவிலல்போல் தமிழ்நான் சொன்னேன். 213

என்பது.

ஏழாமிடம் கொண்டு குளம், சீர், நிவர்த்தி, பொசிப்பு, தாரம், மூத்திரக்கிரிச்சனம் இதுவெல்லாம் சொல்ல.

களத்திரம் மரணம்

சொன்னமாம் களத்தி ரேசன்
நீசனாய் ஆறெட் டாகப்
பன்னிய வியத்தி லாதல்
பாரியே நாச மாகும்
முன்னிய குடும்பன் வெள்ளி
பாவிகள் வீடாய் மோத
வன்னியாம் பாவர் பார்க்கில்
மனையவள் மரணம் தானே.

என்பது.

களத்திராதிபதி நீசம் கரைஏற அல்லது களத்திராதிபதி சட்ட, அட்ட, வியத்தில் இருக்க, களத்திரம் நாசம். குடும்பாதிபதியும் சுக்கிரனும் பாவர் சேத்திரத்தில் இருக்க, பாவிகளால் பார்க்கப்பட, களத்திர நாசம் என்பது.

பல பெண்களுடன் தொடர்பு

மனையெனும் களத்தி ரேசன்
கேந்திர கோண மாக
வினவிலே சொட்ச உச்ச
மித்துரு வாகி நன்றாய்
கனவிலும் கர்ம னாதன்
பார்த்திடில் அனேக தாரம்
தனனெனும் உண்டாய்ப் போத
வானெனச் சங்க மாமே. 214

என்பது.

களத்திரகாரகன் கேந்திரத் திரிகோணத்தில் நிற்க, அல்லது சொட்சசேத்திர மித்திரங்களிலே நிற்க. கர்மாதிபதி கூட இருக்க, அல்லது பார்க்கப்பட, வெகுஸ்திரி யோகம் என்பது.

சங்கையாம் இலாப நாதன்
களத்திரம் கூடச் சார்ந்து
தங்கியே பார்க்க அன்றி
பலமிது மிகுமே யன்றி
சுங்கவன் கோண மாகில்
காமமே சுகம் தாகும்
மங்கையர் பலரைச் சேர்வன்
பாக்கிய மட்டுத் தானே. 216

என்பது.

இலாபாதிபதியும் களத்திரத்தானாதிபதியும் கூடி இருக்க, அல்லது பார்க்கப்பட அல்லது பாலாட்டினாகத் திரிகோணத்தில் இருக்க, வெகுஸ்திரி சையோகம் என்பது.

அதிக களத்திரம்

மட்டில்லா பாக்கி யேசன்
ஏழிலாய் ஏழாய் நான்காய்த்
தட்டிலே கேந்தி ரத்தால்
வெகுஸ்திரி சகித னாவன்

திட்டமாய்த் தார னாதன்
　　கோபுராங் கிசமாய்க் கர்மன்
இட்டமாய் குடும்பக் கூட
　　ஏழிலாய் ஸ்திரிபத் தென்றே. 217

என்பது.

பாக்கியேசன் ஏழில் நிற்க, ஏழாமிடம் உடையவன் நான்கில் நிற்க, அல்லது கேந்திரத்தில் நிற்க, வெகு ஸ்திரி சையோகம். தாரேசன் கோபுராங்கிசம் ஏற, கர்மேசன் ஏழில் நிற்க. குடும்பாதிபதியும் ஏழில் நிற்க, அவனுக்குப் பத்துக் களத்திரம் உண்டு என்பது.

பொல்லாத மனைவி

திரிவமாம் தார நாதநன்
　　பாவியள் உடனே சேரக்
கர்வனாம் ஏழான் பாவ
　　அங்கிசம் குணமில் லாளாம்
பிரியமாம் தார நாதன்
　　குரூரசட்டி அங்கிசம் ஏறில்
மியலான அகோர மாகி
　　அசடியாம் தார மாமே. 218

என்பது.

தாரேசன், பாவியுடனே கூடியிருக்க, ஏழாமிடம் உடையவன் பாவாங்கிசம் கரையேற, குண ஈனஸ்திரி. ஏழாமிடம் உடையவன் குரூர சட்டியம்சம் கரை ஏற, பொல்லாத தாரம் என்பது.

நல்ல மனைவி

தாரனும் சுபரே கூடச்
　　சுபரதைத் தாவிப் பார்க்க
வீரமாய்ச் சுபகோள் தங்கள்
　　மத்தியாய் நல்ல தாரம்

வீரமாம் கர்ம னாதன்
பலாட்டியாய்த் தார நாதன்
காரகன் சுபாங்கிச மாகில்
களத்திரம் நல்ல தாமே. 219

என்பது.

தாரேசன், சுபனுடனே கூடச், சுபர் பார்க்கச், சுபக்கிரக மத்தியில் நிற்க , நல்ல களத்திரம். தாரேசனும் காரகனும் சுபராசி அங்கிசம் ஏறக் கர்மாதிபதி பலமாக இருக்க, நல்ல களத்திரம் என்பது.

கடமை பக்தியுடைய மனைவி

நல்லதாம் சொட்ச உச்ச
மித்திர நாத னாக
அல்லது கோபு ராங்கிசம்
அடவுடன் சஷ்டி ஏற
இல்லெனும் தார நாதன்
குருவுடன் ஏகப் பார்க்க
வல்லவன் கார கேசன்
பலமெனில்பதி விரதை மாதே. 220

என்பது.

தாரேசன் சொட்சசேத்திர உச்ச மித்திரனாக இருக்க, அல்லது கோபுராம்சம் ஏற, சட்டி அங்கிசம் கரை ஏற, அனுகூல களத்திரம். களத்திர தாரேசனைக் குரு பார்க்க அல்லது குருவுடனே கூட சுக்கிரன் பலமாக இருக்க, நல்ல பதிவிரதை என்பது.

தர்மகுணம் கொண்ட மனைவி

மாதரே களத்தி ரேசன்
சனியுடனே வாழ வந்தப்
போதிலே வியாழம் கூடப்
புதன்குரு வாலும் பார்க்கச்

சீதமாம் தர்ம சீல
தேவியாம் களத்தி ரேசன்
கோதிலாங் கிசமாய்த் தர்ம
பார்த்திடக் குணமாம் தாரம். 221

என்பது.

களத்திரேசன், சனியுடனே கூட புதன், குருவாலே பார்க்கப்பட, வியாழனுடனே கூட, நல்ல தர்மபதிவிரதை. களத்திரேசன் கேந்திரத்தில் நிற்க, திரிகோணத்தில் நிற்க, சுபக்கிரகம் பார்க்க, தர்ம சீலப் பதிவிரதை என்பது.

நல்ல மனைவி

சுகமெனும் களத்தி ரேசன்
சூரிய னுடனாய்ப் பார்க்க
பகமதாய்ப் பாவி பார்க்கத்
தாரமும் பாவி யாகும்
மிகமெனும் தாரம் வீட்டில்
பானுவே இருக்க நல்லோர்
தகுமென பார்க்கில் தாரம்
நல்லதாய்ச் சாரும் தானே. 222

என்பது.

களத்திரேசன் பாவ இராசியில் சூரியனுடனே கூட பாவிகளால் பார்க்கப்பட, பாவகளத்திரம். ஏழாமிடத்தில் சூரியன் நிற்க, சுபர் திருட்டி உண்டாக்கி இருக்க, நல்ல களத்திரம் என்பது.

குழந்தைகளைப் பெறுபவள்

சார்ந்திடும் பிருகு பாலன்
உச்சமாய்த் தன் வீடாக
ஏந்தலம் களத்தி ராதி
உடன்சுபாங் கிசத்தில் ஏற

கூந்தலம் பிடியாள் தாரம்
குணபதி தார மாக
சேர்ந்தநற் புத்தி ராளைச்
செயமெனப் பெறுவாள் தானே. 223

என்பது.

சுக்கிரனும் களத்திராதிபதியும் பலவானாகச் சுபாங்கிசம் கரை ஏற, மித்துரு உச்ச வர்க்கங்களிலே சுபக்கிரகமாக இருக்க, வாசாலமாய்ப் புத்திரவதியாக நல்ல களத்திரம் என்பது.

அன்னிய மனைவி

பெறுவதாம் களத்தி ரேசன்
பிணியெனும் நாதன் தானும்
முறுமென ஏழில் கூட
ஏழிடம் உடையான் மந்தன்
மறுவில னாக நீச
அங்கிசம் வருவா னாகில்
உறுதியாய்த் தாரம் தானும்
பரத்தனை உகந்து வாழ்வாள். 224

என்பது.

ஆறாமிடம் உடையவன், ஏழாமிடம் உடையவனுடேனே, கூடி ஏழில் நிற்க அந்த ஏழாமிடம் உடையவன் சனியாக, அவன் நீசக்கிரகம் கரையேற, பரஸ்திரி என்பது.

மனைவியால் அவமானம்

வாழ்பவன் ஏழாம் வீடு
குருவின்வீ டாக மந்தன்
தாழ்வில்லா திருக்க நல்லோர்
பார்த்திடில் நல்ல தாரம்

ஏழிலே இராகு கேது
சனியுடன் இருக்க மந்தன்
வாழுமங் கிசத்தாய்ப் பாவர்
பார்வையாம் மயக்கும் தாரம். 225

என்பது.

ஏழாமிடம் உடையவன், வியாழனாக இருக்க, சுபக்கிரகம் பார்க்க, நல்ல களத்திரம். இராகு, கேது ஏழில் நிற்க, சனி கூடி இருக்க, பாவிகள் பார்க்க, சனி குரூர சட்டி அங்கிசம் ஏற, அல்லது சனி இருக்க, அவள் பர்த்தாவுக்கு விசனம் கொடுக்கும் அவபதி என்பது.

நல்ல மனைவி

தாரெனும் இலக்க னேசன்
சசிதனாய் உதயம் வாழில்
வாரமாய் வாலி பத்தில்
களத்திரம் வாய்க்கும் நல்ல
தீரனாம் இலக்க னேசன்
களத்திர னுடனே சேர்ந்து
மாரவே கேந்தி ரத்தில்
இளமையில் தார மாமே. 226

என்பது.

தாரேசன், இலக்கனாதிபதியுடனே கூட, இலக்கனத்தில் இருக்க, வாலிபந்தொடுத்து அனுகூல களத்திரம். இலக்கனாதிபதியும் களத்திராதிபதியும் கேந்திரத்தில் இருக்க, பாக்கியத்தினாலே பார்க்கப்பட, வாலிப வயது முதல் அனுகூல களத்திரம் என்பது.

இளமையில் திருமணம்

இளமையாம் இலக்க னாதி
பதியுடன் களத்தி ரேசன்
வளமுறும் குடும்பன் கூட
அல்லது சுபர்கள் வீடாய்ப்

பழகினால் வாலி பத்தில்
　　பாரியாம் இலக்க னேசன்
அளவாறு வர்க்கம் கார
　　கன்பலக்கிலவ் வண்ண மாமே.

என்பது.

இலக்கனாதிபதியும் குடும்பாதிபதியும் தாராதிபதியும் சுபனுடனே அல்லது சுபக்கிரக வீட்டில் இருக்க, அவனுக்கு வாலிபத்தில் விவாகம் என்பது. களத்திராதிபதி ஆறு வர்க்கம் ஏற, குடும்பாதிபதி பலாட்டியனாக இருக்கச், சுக்கிரனும் அப்படியே இருக்க, வாலிப விவாகம் என்பது.

பாக்கியம், தாரம் இல்லாதவன்

வண்ணமாம் கார கேசன்
　　சட்டஅட்ட வியத்தில் வாழத்
திண்ணமாய் இலக்க னாதி
　　பதியுமப் படியே சேரத்
தண்ணதாம் ஏழாம் தானம்
　　பாவநீச மதாய்த் தாரம்
எண்ணிலாத் தூக்கி யாகி
　　இருப்பது திடமாய்ச் சொல்லே. 228

என்பது.

சுக்கிரன் சட்ட, அட்ட, வியத்தில் போக இலக்கனாதிபதியும் அப்படியே இருக்க, அந்தத் தானம் நீச மூடமாய்ப் போக, அவனுக்குப் பாக்கியமும் கெட்டுத் தாரமும் கிடையாது என்பது.

தூரதேசத்தில் திருமணம்

இருப்பவன் ஏழாம் வீட்டான்
　　குரூரசட்டி இலகச் சுங்கன்
விருப்பிலவ் வண்ணம் நல்லோர்
　　பார்க்கில்நாற் பதுமேல் தாரம்

ஒருப்படு கர்மத் தானம்
பாவியாய்க் குடும்பன் ரண்டான்
பெருக்கென பாவர் கூடில்
ஏழுநிலத்தூ ரம்போய்த் தாரம். 229

என்பது.

ஏழாமிடம் உடையவன், குரூர சட்டி அம்சம் ஏற, காரகனும் அப்படி ஏற, சுபக்கிரகம் பார்க்க, நாற்பது வயதுக்கு மேல் விவாகம். கர்மத்தில் பாவி இருக்க, குடும்பாதிபதி பாவியுடனே கூடப் பாக்கியாதிபதி பாவர்களுடனே கூடி களத்திரத்தில் இருக்க தூரதேசத்தில் விவாகம்.

நடத்தை கெட்ட மனைவி

தூரமாம் இலக்க னேசன்
களத்திரன் மெலிந்து தோன்ற
காரகன் தானசோ கத்தால்
களத்திரம் வைப்ப தாகும்
வாரமாம் இலக்க னாதி
களத்திர னுடனே வந்த
வோரேசன் பார்க்க பர்த்தா
உடன்படச் சோரி யாமே. 230

என்பது.

இலக்கனேசன் பலயீனமாக இருக்கக் களத்திரநாதனும் அப்படியே இருக்க, காரகன் ரோகத் தானத்தில் ஏற, களத்திர ஈனம். இலக்கனேசனுடனே ஏழாமிடம் உடையவன் கூடி, ரோகத்தானத்தில் இருக்க, ஆறாமிடம் உடையவன் பார்க்க, பர்த்தா உடன் இருக்கச் சோரம் பண்ணுவாள் என்பது.

நீர்நிலையின் கரையில் நடத்தை கெடுபவள்

உடன்படும் தார நாதன்
காரகன் இலக்கன் ஒன்றாய்த்
திடம்படு சத்து ரேசன்
சலமெனும் இராசி தோன்றி

அடந்ததைப் பார்க்கு மாகில்
　　அவனுட தாரம் அன்பாய்த்
தடஞ்சலங் கரையில் சோரர்
　　தன்னுடன் கூடு வாளே. 231

என்பது.

ஏழாமிடம் உடையவன், காரகன், இலக்கனாதிபதி பலமாக இருக்க, சட்டாதிபதி சலராசியில் இருந்து கூடிப் பார்க்க சலக்கரையில் சோரியாவாள்.

மாற்றான் பிள்ளை யோகம்

கூடிய ஸ்திரியாய் இராசி
　　நிற்பமீன் சிங்கம் கூட
சேடியாம் கன்னி தேளே
　　சென்மலக் கனமே யாகில்
நாடிய தீக்கோள் ஆகில்
　　புத்திரர் நவில வேண்டாம்
சூடியும் சுபக்கோள் பார்க்கில்
　　புத்திரன் சோரத் தாலே. 232

என்பது.

ஸ்திரிராசி ரிசபம், சிங்கம், கன்னி, விருட்சிகம், மீனம் இவைகள் சென்ம இலக்கனமாகில் அற்ப புத்திரர் யோகம். சுபக்கிரகம் பார்க்கில் சோர பர்த்தாவாலே புத்திரயோகம்.

விதவை, மாதவிலக்குடைய பெண்கள் உறவு

ஆலமாம் ஏழாம் வீட்டான்
　　சட்டாட்ட வியத்தா னாகத்
தூலமாம் இரவி கூட
　　சேயதைத் தொடர்ந்து பார்க்கில்
பாலனும் தூர மான
　　அமங்கலி பரத்தை யோடே
சீலமாய்ச் சேர்ந்து பாவம்
　　செழிப்புறத் தேடு வானே. 233

என்பது.

ஏழாமிடம் உடையவன் சட்ட, அட்ட, வியாதிபதியாக சூரியனுடனே கூடி இருக்க, செவ்வாய் பார்க்க, அமங்கலி, தூரஸ்திரி சங்கம் என்றவாறு.

கர்ப்பிணிப் பெண்ணுடன் உறவு

பாரமாம் புதனும் ஏழாய்ப்
பார்ப்பது ரோக னானால்
கோரமாம் ஈன மான
கோமுட்டி குருவே ஏழாய்த்
தீரனாய் ஆறான் பார்க்க
கர்ப்பமும் சனித்துத் தூர்த்த
மாருபார்ப் பனத்ரீ தன்னை
அணைத்துபின் நரகில் வீழ்வான். 234

என்பது.

புதன் ஏழில் நிற்க, சட்டாதிபதி பார்க்க, கோமுட்டிச் சங்கம். குரு ஏழில் நிற்க, ஆறாமிடம் உடையவன் பார்க்க, பிராமண ஸ்திரி கர்ப்பம் சங்கமம் என்பது.

குள்ளப்பெண், ஆலயத்தில் உறவு

வானெனும் ஏழாம் நீசன்
உடன்வந்து வாழ ஏழில்
தீனமாம் பாம்பு மந்தன்
இருந்திடில் குறளைச் சேர்வான்
பானுவும் சுகத்தா னத்தால்
ஏழிலே பருதி மைந்தன்
ஆனதால் ஆல யத்தில்
சங்கமாய் அழிவன் தானே. 23

என்பது.

ஏழாமிடம் உடையவன் ஈனக் கிரகத்துடனே கூட, ஏழில் சனி, இராகு, இருக்க கட்டச்சி (குள்ளமானப் பெண்) சங்கமம். சூரியன் நான்கில் நிற்க, ஏழில் சனி நிற்க, தேவாலயத்தில் சங்கம் பண்ணுவான் என்பது.

மிருகம் போல் உறவு

சங்கமாம் ஏழாம் தானம்
சலமென தார நாதன்
பங்கமாய்ச் சலத்தில் வாழ
ஒன்றுநான் கேழு பத்தாய்
எங்குமே கேந்த ரிக்க
சலக்கரை இடமாய்த் தேடி
மங்கைய ருடனே சேர்வன்
மிருகம்போல் வாய்ந்து தானே. 236

என்பது.

ஏழாமிடம் சலராசியாக இருக்க, ஏழாமிடம் உடையவன் சலராசியில் இருக்க, அதற்கு 1, 4, 7, 10-ம் ஆக நான்கும் கேந்திரத் தானமாக இருக்கச் சலக்கரையில் மிருகம் போல் ஸ்திரி மைதுனம் என்பது.

மிருகனாம் சனியும் பானு
ஏழிலாய்ச் சேய்நான் காக
அறுதலி மிருகம் போல
ஆகிய சேர்வான் ஏழில்
தெறுதொளில் பாம்புஞ் சேயும்
சேர்ந்திட அன்றி நான்கில்
குறுகினும் மிருகம் போலக்
கூடுவான் மாத ரோடே. 237

என்பது.

சனியும் பானுவுமாய் ஏழில் நிற்க, நான்கில் செவ்வாய் நிற்க, முன்சொன்ன பலன். இராகு ஏழில் நிற்க, செவ்வாய் கூடி நிற்க, அல்லது நான்கில் நிற்க, முன்சொன்ன பலன்.

மாதரே ஏழாம் வீடு
புருடவீ டாக வந்து
சீதனாம் புகரும் அன்றிச்
சேர்வன்றி உச்ச மாக

ஏதமில் தன்வீ டாக
இருந்திடக் காம மிஞ்சி
சூதெனும் தோகை யாரைப்
பகமதில் சும்பு வானே. 238

என்பது.

ஏழாமிடம் உடையவன், சுக்கிரனாக அல்லது சுக்கிரனுடனே கூடப், பிருகு சேத்திரமாக இருக்க பக சும்பனம் பண்ணுவான்.

வானெனும் ஏழாம் வீட்டான்
வெள்ளியாய் அன்றி வெள்ளி
தானெனக் கூடு மாகில்
பகசும்பன் குடும்பன் வெள்ளி
தீனமாம் ஏழா னோடே
சேரிலவ் வண்ண மாகும்
பூனலங் கவர்ந்த மாதே !
புத்தியால் ஆய்ந்து கொள்ளே. 239

என்பது.

ஏழாமிடம் உடையவன் சுக்கிரனாக, அல்லது சுக்கிரன் கூடில் முன் சொன்ன பலன். குடும்பத்தில் சுக்கிரன் ஏழாமிடம் உடையவனுடனே கூடியிருக்க, முன் சொன்ன பலன் என்பது.

கொங்கை இலம்பகம்

ஆய்ந்தகர் மத்தான் தன்னைச்
சனிபார்க்க ஆடும் தேளும்
வாய்ந்திடும் ஏழாம் வீடாய்ப்
புகர்பார்க்கி லவ்வண மாகும்
காய்ந்தசேய் ஏழ தாகில்
ராகதைக் கடிந்து பார்க்கில்
ஏய்ந்தமங் கையர்க்குக் கொங்கை
இலம்பகம் ஆகுந் தானே. 240

என்பது.

கர்மேசனைச் சனி பார்க்க, களத்திரத்தான் மேடம், விருட்சிகமாகச் சுக்கிரனால் பார்க்கப்பட, முன் சொன்ன பலன். செவ்வாய் ஏழில் நிற்க, இராகு பார்க்க களத்திரத்துக்குத் தனலேபனம்.

தளர்ந்த கொங்கை

இலங்கிய தார நாதன்
பாவியாய் இணங்கப் பாவி
புலங்கொடி தனமும் லம்பகம்
புகழுடை ஏழாம் வீடு
சலந்திகழ் இராசி யாகச்
சலநாதனும் பார்க்கு மாகில்
நலந்திகழ் தாரங் குய்யம்
நீர்க்கட்டு நல்ல தாமே. 241

என்பது.

ஏழாமிடம் உடையவன் பாவியாக இருக்க, பாவியுடனே கூட, முன்சொன்ன பலன். ஏழாமிடம் உடையவன் சலராசியாக இருக்க, சலக்கிரகங்கள் பார்க்க, சலக்கட்டுக் கொங்கை என்பது.

வறண்ட மறைவிடம்

நல்லவன் புகரும் உச்சம்
நலந்திகழ் இலக்க னத்தில்
வல்லதாம் இரவி உச்ச
மாகநல் கிரகம் வாய்க்கும்
சொல்லிய தார நாதன்
சுட்கமாய்ச் சுடர்கள் பார்க்கில்
இல்லையேல் கூடு மாகில்
குய்யமும் சுட்க மென்னே. 242

என்பது.

சுக்கிரன் பரம உச்சனாக, சூரியன் இலக்கனத்தில் பலம் உச்சமாக தேவ பூச்சிய சயன சுகம். தாரேசன் சுட்க இராசியில் இருக்க அல்லது சுட்க சங்கனாக இருக்க சுட்க குய்யம் என்பது.

வறண்ட, சல கட்டுள்ள மறைவிடங்கள்

சுட்கமாம் தார நாதன்
　　பாவர்வீட் டினிலே தோன்ற
தக்கமாய்ப் பாவர் கூடில்
　　தாரத்தின் குய்யம் சுட்கம்
மிக்கதாம் ஏழாம் வீடு
　　ஒத்திச்ச சலமும் ஆகில்
இலக்கனன் சலத்தான் நிற்கில்
　　குயத்தினில் சலக்கட் டாமே. 243

என்பது.

தாரேசன் பாவக்கிரகத்தில் இருக்க அல்லது பாவியுடனே கூட, தாரத்தின் குய்யம் சுட்கம். ஏழாமிடம் ஒற்றித்த இராசியாகச் சலராசியாக இருக்கச் சலகிரகம் பார்க்க, குய்யம் சலம் என்பது.

நல்ல உணவு உண்பவன்

கட்டதாம் ஏழான் தன்னைக்
　　குருபார்த்து நல்லங்சம் காண
திட்டமாய்ப் புளிச்ச சாதம்
　　தேற்றியோ தனமே கொள்வான்
இட்டமாம் ஏழாம் தானன்
　　புகரென மதியே பார்க்க
சட்டமாய்ச் சுவைக ளாகச்
　　சாதமே பொசிப்பான் தானே. 244

என்பது.

ஏழாமிடம் உடையவன் குரு திருட்டிப் பெற்றிருக்க சௌமியாங்கிசம் கரையேற, சௌமியர் பார்க்க, ததியோதனம், புளியோதரைப் புசிப்பன். ஏழாமிடம் உடையவன் சுக்கிரனாக அவனைப் பூரணச் சந்திரன் பார்க்க, பாவிகள் கூடாமல் பார்த்திருக்க நல்ல போசனம் என்பது.

நல்ல உணவு கிடைக்காதவன்

பொசிப்பதாம் ஏழில் பானு
சேயமே பொருந்த நல்ல
விசித்திர சுபக்கோள் பார்க்க
அஞ்சைத்தான் விரும்ப முன்போல
அசித்தனாம் பாவி ஏழாய்க்
குரூரசட்டி யங்கிசம் ஏற்ப
பசிக்கொரு புசிப்பும் இன்றிப்
பாவியாம் பதியில் லாதே. 245

என்பது.

ஏழில் செவ்வாய் ஆதித்தனும் இருக்க, சுபர் பார்க்க, அல்லது ஐந்தில் நிற்க, நல்ல போசனம். பாவி ஏழில் நிற்க, ஏழாமிடம் உடையவன் பாவியுடனே கூட, குரூர சட்டி அங்கிசம் ஏற, அவனுக்குப் புசிப்புக் கிடையாது என்பது.

உயர்தர பானம் பருகுதல்

மதிகுரு தாரே சனனாய்
அங்கிசம் சலமே வாழக்
கதியுடன் சலத்தான் பார்க்க
வீரமே பொசிப்பான் காளை
பதியென சத்த மாதி
அங்கிசம் இரண்டான் வீட்டான்
நெதியெனும் சலமே வாழ
சுபாங்கிசம் நேரில் முன்போல். 246

என்பது.

சந்திரன், குரு தாரேசனாக இருக்க, சலராசி அங்கிசமாகச் சலக்கிரகம் பார்க்கப்பட, வீர பானாதி புசிப்பன். சத்தமாதிபதி கரை ஏறின அங்கிசாதிபதி சலஇராசியில் இருக்க, சுப திருட்டியாக இருக்க, சுபாங்கிசம் ஏற நல்ல விரவர்க்கம் என்பது.

மூத்திரக் கிரிச்சனம்

முன்னிய கேந்தி ரத்தில்
பாவியர் ஆறான் எட்டான்
தன்னிலே பார்க்க குரூர
சட்டியங் கிசமே சார
மன்னிலே மூத்தி ரக்கி
ரிச்சனம் வருமாம் என்று
எண்ணலாம் ஏழாம் பாவப்
பலமென இசைக்க லாமே. 247

என்பது.

கேந்திரத்தில் பாவி நிற்க, சட்டாதிபதி, அட்டமாதி பார்க்க, குரூர சட்டி அங்கிசம் ஏற, மூத்திரக் கிரிச்சனம் வரும் என்பது.

ஏழாம் பாவம் முற்றும்

8. எட்டாம் பாவம்

மாள்வுறு ஆயுள் தானம்
மரணம்நிர் யாணம் ஏது
தாழ்வில்லா அன்ன பாகம்
மானமே தோசமுந் துரக
நீளிய சுகங்கள் ரோகம்
நெறியான மிவைகள் எல்லாம்
மாளுடை வெங்க டேசர்
அருளினால் அறைவ தாமே. 248

என்பது.

எட்டாமிடங்கொண்டு, ஆயுள்தானம் மரணம் நிர்யாணம், குய்யம், மானம், அன்னம், சுகம், நேசம், துக்கம், நன்மை, சீவன் இவைகளைச் சொல்லலாம்.

தீர்க்காயுள்

அறைவதாய் ஆயுள் தானன்
சட்டாட்ட வியத்தி லாக
இறைவனாம் கேந்தி ரேசன்
பாவனால் ஆயுள் இல்லை
முறையென ஆயுள் நாதன்
சோட்சேத்திரம் உச்ச மாகத்
திறைசொளும் சனியும் நல்லோர்
கூடில்தீர்க் காயுள் என்னே. 249

என்பது.

கேந்திரேசன் பாவிகளுடனே கூடிச் சட்டாட்ட வியத்தில் இருக்க, எட்டாம் இடம் உடையவனும் அப்படி இருக்க அற்பாயுள். அஷ்டமாதிபதி சொட்சசேத்திர உச்சத்தில் இருக்க, சனியும் சுப கிரகத்துடனே கூடி இருக்க தீர்க்காயுள் என்பது.

என்னவே கேந்தி ரேசன்
இலக்கனத் திருக்க நல்லோர்
சென்மமாம் இலக்க னாதி
சுபனுடன் வியத்தில் சேர
அன்னிய இலக்க னாதி
ஆறிடம் உடையான் சேர
பன்னியும் சுபரே பார்க்க
தீர்க்காயுள் பகர லாமே. 250

என்பது.

கேந்திரேசன் இலக்கனத்தில் இருக்க, இலக்கனாதிபதி வியத்தில் சுபக்கிரகத்துடனே கூடியிருக்க, சட்டாதிபதி இலக்கனாதிபதியுடனே கூடியிருக்க, சுபக்கிரகங்கள் பார்க்கத் தீர்க்காயுள்.

ஆமெனும் கர்ம வீட்டான்
இலக்கன னுடனே யாகிச்
சேமமாம் இலக்க னத்தில்
சுபர்பார்க்க தீர்க்காயு ளென்பான்
தாமமாஞ் சுகத்தா னத்தான்
கேந்திரத் தாறான் கூட
ஏமமாம் தீர்க்கா ஆயுள்
எண்ணலாம் ஒன்றாய்க் காணே. 251

என்பது.

கர்மேசனுடனே இலக்கனாதிபதி இலக்கனத்திலே இருக்க, சுபராலே பார்க்கப்பட, தீர்க்காயுள் . நாலாமிடம் உடையவன் கேந்திரத்தில் இருக்க, சொட்சசேத்திர கோணங்களிலே அட்டமாதிபதி இருக்க தீர்க்காயுள்.

ஒன்றுநான் கேழு பத்தில்
சுபருற உதயந் தானும்
நன்றெச் சுபக்கோள் பார்க்க
தீர்க்காயுள் நவில லாகும்

அன்றியும் இலக்க னாதி
கேந்திரம் சுபரே பார்க்க
அன்றியும் எட்டாம் தானம்
இலக்கனப் பார்வை முன்போல். 252

என்பது.

1, 4, 7, 10 இவைகளில் சுபக்கிரகம் இருக்க, இலக்கனாதிபதி சுபக்கிரகத்தில் இருக்க, குருவாலே பார்க்கப்படத் தீர்க்காயுள். கேந்திரத்தில் இலக்கனாதிபதி இருக்க, குரு, சுக்கிரனால் பார்க்கப்பட அல்லது இலக்கனாதிபதி சுபனாக இருந்து, அட்டமாதிபதியைப் பார்க்க தீர்க்காயுசு.

பாவிகள் லாப ரோகம்
மூன்றிடம் பற்ற நல்லோர்
தாவுகேந் திரகோ ணத்தாய்த்
தீர்க்காயுள் அட்ட மத்தில்
கோவென உச்சம் வாழ
அட்டமாதி குருவைப் பார்க்க
காவலன்தீர்க் காயுள் என்றே
கரையலாம் தமிழ்வல் லாரே. 253

என்பது.

பாவிகள் மூன்றாம், ஆறாம், பதினோராம் இடங்களில் இருக்க, சுபர்களெல்லாம் கேந்திரத் திரிகோணங்களில் இருக்க தீர்க்காயுள். அட்டமத்தில் உச்சனாக ஒரு கிரகம் இருக்க, அட்டமாதிபதியை வியாழன் பார்க்க, தீர்க்காயுள்.

அற்பாயுள்

வல்லதாம் சட்ட அட்ட
வியத்தினில் பாவி வாழ
இல்லெனும் இலக்க னாதி
பலயீனம் அற்ப ஆயுள்

நல்லதாம் அட்ட மாதி
குரூரசட்டி அங்கிசம் நாட
அல்லரவி யோடே பாவி
பார்க்கவும் அற்ப ஆயுள்.

என்பது.

சட்ட, அட்டம, வியங்களில் பாவி இருக்க, இலக்கனாதிபதி பலவீனமாக இருக்க, அற்ப ஆயுள். அட்டமாதிபதி குரூர சட்டியாங்கிசம் ஏற அல்லது சூரியனுடனே கூட பாவிகள் பார்க்க அற்பாயுள்.

மத்திம, தீர்க்க ஆயுள்

அற்பமாம் வெயாதி பாவி
கூடியே சுபர்பா ராரேல்
நிற்கபின் அட்ட மாதி
இரவிசத் துருவாய் நேர
தொற்பலன் இலக்க னாதி
பதிக்குமப் படியே தோன்ற
தற்பரா சமமே யாகில்
சமனெனும் ஆயுள் தானே. 255

என்பது.

வியாதிபதி பாவியுடனே கூடி இருக்க, சுபக்கிரகம் பாராதிருக்க, அற்பாயுள். அட்டமாதிக்கு ஆதித்தன் சத்துருவாய் இருக்க, இலக்கனாதிபதிக்கும் அப்படி இருக்க, சமமாய் இருந்தால் மத்தியம் ஆயுள், மித்திரனானால், தீர்க்காயுள்.

பிறந்தவுடன் மரணம்

ஆயுவாம் சுபக்கோள் மூலத்
திரிகோணத் தாக எட்டான்
காயுமோர் ஆறான் பாவர்
கூடிடில் காலம் இல்லை

சேயுமே பிறந்த போது
சட்டாட்டம் திசையே யாகில்
நியாயமா றெட்டே நிற்கில்
பிறந்துடன் நசிப்பன் தானே. 256

என்பது.

சுபக்கிரகங்கள் மூலத்திரிகோணங்களில் இருக்க, சட்டாதிபதியும் அட்டாதிபதியும் பாவிகளுடனே கூடி இருக்க, மத்திய ஆயுள். இந்தத் திசை பிறந்த உடனே, அட்டமாதி சட்டமாதிபதி திசையாக, அவன் சட்ட, அட்ட, வியமேற பிறந்தவுடனே மரிப்பான் என்பது.

அன்னியதேச மரணம்

நசித்திடும் எட்டா னோடே
ரோகனும் நண்ணக் கேது
விசித்திரன் சனிதான் கூட
சத்திரம் அதனால் மாய்வர்
நசிப்பெறும் இலக்க னேசன்
வாகனம் சேர எட்டான்
மசிப்புறும் கேது கூடத்
தூரமே மரண மாமே. 257

என்பது.

அட்டமாதிபதியுடனே, ஆறாமிடம் உடையவன் கூட, கேதுவுடனேயும் சனியுடனேயும் கூடி இருக்க, அவன் சத்திர விரணத்தினாலே சாவான். இலக்கனாதிபதியும் வாகனாதிபதியும் ஒன்றாய்க் கூடி இருக்க, அட்டமாதிபதியுடனே கேது கூட, அன்னியதேச மரணம் என்பது.

பெண்ணால் மரணம்

மரவெனும் இலக்க னத்தில்
மதியுற வியத்தில் பாவி
திரமனத் திரியோர் பார்க்கத்
திரிஏதால் மரணம் சித்தம்

பரமெனப் பானும் ஏழில்
இலக்கன மதியாய்ப் பாவர்
தரமென வேயன் சுங்கன்
பார்க்கவே திரியால் சாவான். 258

இலக்கனத்தில் சந்திரன் நிற்க, வியத்தில் பாவியிருக்க, திரி(ஸ்திரி) கிரகங்களினாற் பார்க்கப்பட, அவனுக்கு திரி(ஸ்திரி) ஏதுவாய் மரணம் என்பது. ஏழில் சூரியன் நிற்க, சந்திரன் இலக்கனத்தில் நிற்க, பாவர் வியத்தில் நிற்க, சுக்கிரனாலே பார்க்கப்பட, அவன் ஸ்திரியினாலே பச்சை நாகம் (பச்சை நாவி) தின்று சாவான்.

திரியென மூன்றாம் தானன்
சட்டாட்ட வியத்தில் சேரக்
குரியவன் பரத்தை மூலம்
சாகுவன் இலக்க னேசன்
அறிவுறும் பலவா னாகில்
அவனுடைத் திரியி னாலே
மறுவிலான் மாய்வான் என்றும்
மாமுனி உரைசெய் தாரே. 259

என்பது.

மூன்றாமிடத்துக்கு உடையவன். சட்ட அட்ட வியத்தில் இருக்க, பரதிரி(பரஸ்திரி) ஏதுவாகச் சாவான். இலக்கனாதிபதி பூரணபலமாக இருந்தாலும் திரி(ஸ்திரி) ஏதுவினாலே மரணம் என்பது.

தன்பிள்ளையைக் கொல்பவள்

உரையெனும் இலக்க னாதி
பூரண பலமாய் நான்கில்
திரமென பாக்கி யேசன்
வியமா றெட்டாய்ச் சேரத்

திரமென பிருகு பார்க்க
தாயுமே சோரர் கூடித்
தரமிசை மகவைக் கொல்வாள்
என்னவே சாற்ற லாமே. 260

என்பது.

இலக்கனாதிபதி பூரண பலமாக நான்கில் நிற்க, பாக்கியேசன் சட்ட, அட்ட, வியங்களில் நிற்க, அது சுக்கிரனாலே பார்க்கப்பட அந்தமாது சோர பர்த்தாவால் தன் பிள்ளையைக் கொல்வாள் என்பது.

சாற்றிய அட்ட மாதி
கர்மத்தான் ஏழில் சார
ஏற்றிலே நான்கில் சோரத்
தாயேதாய் மரிப்பன் மூன்றான்
தோற்றிய ஏழில் சேர
நாலிடம் அட்ட மத்தோன்
பார்த்திபன் பாக்கி யாதி
பார்க்கிலன் வண்ண மானே. 261

என்பது.

அட்டமாதிபதியும் பத்தாமிடத்துக் குடையவனும் கூடி, ஏழாமிடத்தில் நிற்க, அல்லது நாலாமிடத்தில் இருக்க, முன்சொன்ன பலன். மூன்றாமிடத்துக்கு உடையவன் ஏழாமிடத்தில் நிற்க, நான்காமிடத்துக்குடடையவன் அட்டமத்தில் நிற்க, பாக்கியாதிபதி பார்க்க, முன்சொன்ன பலன்.

மறைவிட நோயினால் மரணம்

வண்ணமாம் பாக்கி யாதி
பலமுற இந்து வோடே
திண்ணமாய் நான்கான் கூட
புகர்பார்க்க தினம்தாய்ப் பேணும்

தண்ணமாம் ஆறில் பாவி
அட்டமன் பாவர் தாவ
எண்ணிலே குய்யந் தானே
நோவினால் மரிப்பன் என்றே.

என்பது.

பாக்கியாதிபதி பலமாக, நான்காமிடமுடையவன் சந்திரனுடனே கூடி இருக்க, சுக்கிரனாலே பார்க்கப்பட, அந்தப்பிள்ளையை மாதா பூச்சியம் பண்ணுவாள். ஆறாமிடத்தில் பாவி இருக்க, அட்டமாதிபதி பாவிகளுடனே கூடியிருக்க குய்யத் தானத்தில் நோயுண்டாகி மரிப்பான்.

மரணம் நேருமிடம்

மரித்திடும் தானங் கூடி
மந்தனும் சரமே யாக
விரித்திடும் தூர தேசம்
திரமெனத் தன்வீ டாகும்
பிரித்திடும் உபய மாகில்
பிறந்திடம் அல்லாமல் வேறே
தனத்திட அகமுண் டாகித்
தானத்தில் மரிப்பான் தானே. 263

என்பது.

சனி திரராசியில் இருந்தால், தன் வீட்டில் மரணம். உபய இராசியில் இருந்தால் பிறந்த வீடல்லாமல் வேறு வீடுகட்டி மரணம். சரராசியில் இருக்க, அன்னிய தேசத்தில் மரணம் என்பது.

எட்டாம் பாவம் முற்றும்

9. ஒன்பதாம் பாவம்

ஒன்பதாம் தானம் தன்னில்
ஓதிய பலனே தென்னில்
தந்தையாம் குருவே செல்வம்
தானமாம் பொன்தான் பேத்திகள்
சிந்தையால் பிதாவிந் தோசம்
சுகமிது வான தெல்லாம்
தந்திரி வெங்க டேசர்
தமிழினால் உரைத்தார் என்றே. 264

என்பது.

ஒன்பதாம் இடம்கொண்டு பிதுர்கர்மம், சிந்தா தர்மம், பொன், பேத்திகள், பாக்கியம், குரு இதுவெல்லாம் சொல்லுவது.

மூத்த பெண்ணுடன் தொடர்பு

கற்றுள மதியும் பாவி
களும்ஒன்ப தாமி டத்தாய்ச்
சுத்தனாம் சுங்கன் கூட
குருதோய்வன் பாக்கிய வீட்டான்
நிற்றலும் சுகனும் கூடில்
படர்மதி பாவர் பத்தில்
உற்றிடக் கூடிற் றானமுறின்
மூத்த ஸ்திரியைத் தோய்வான். 265

என்பது.

சந்திரன் பாவியுடனே கூடி ஒன்பதாமிடத்தில் நிற்க, சுக்கிரன் கூட நிற்க, குரு தாரம் இச்சிப்பான். பாக்கியாதிபதியும் சுபனும் கூடில், முன்சொன்ன பலன், சந்திரனுடனே பாவக்கிரகம் கூடி ஒன்பதாம் வீட்டில் இருக்க, வயதுக்கு மூத்தஸ்திரி சையோகம் என்பது.

தர்மவான்

உண்டெனும் கர்ம வீட்டான்
நீசனாய்ப் புகரும் கூடக்
கண்டது மூத்த தாரம்
குலபதி கர்ம வீட்டான்
திண்டிறற் சுபனாய் மூலத்
திரிகோண மேவங் கிசத்தான்
கண்டிட பாக்கி யாதி
குருபுகர் தர்மம் காணும். 266

என்பது.

கர்மாதிபதி நீசனாய்ப் போக, சுக்கிரன் கூடியிருக்க, முன் சொன்ன பலன். தர்மேசன் சுபனாக இருக்க, மூலத்திரிகோணத்தில் நல்ல அங்கிசம் ஏற, பாக்கியாதிபதி குருவாக இருக்க, அல்லது சுக்கிரனாக இருக்க அவன் சொட்சசேத்திர மித்துரு அங்கிசங்களில் இருக்க, தர்மவான்.

சிறிது தர்மம், சிறிது பாவம் செய்பவன்

குருவுடன் புகர்தான் புந்தி
பாக்கியத் தானம் கொள்ள
இருபுறம் சுபரே யாகில்
தர்மவான் தர்ம வீட்டில்
பிருகுபா லகனாய்ப் பாவர்
குரூரசட்டி அங்கிசம் ஏறத்
திருவுடன் சிறிது தர்மம்
சிறிதுநாள் பாவம் தேடும். 267

என்பது.

குரு, சுக்கிரன் , புதன், தர்மாதிபதியாக இருக்க, சுபக்கிரகம் மத்தியில் இருக்க, தர்மவான், தர்மத்தானத்தில் சுபனாக இருக்க, பாவாங்கிசம், குரூர சட்டி அங்கிசம் ஏற சிறிதுநாள் தர்மமும் சிறிது நாள் பாவமும் பண்ணுவான்.

கோயில் சொத்தை எடுப்பவன்

தேடிய பாக்கி யத்தான்
அங்கிசம் சொல்லும் வீட்டான்
நாடியே சுபனாய் ஆறு
வர்க்கமேல் நலத்தேர் வைப்பன்
வாடிய பாக்கி யத்தில்
மந்தன்தான் இராகு வாகில்
கூடியுங் குளிக னாகத்
தேவதா னத்தைக் கொள்வான். 268

என்பது.

ஒன்பதாமிடமுடையவன் அங்கிசதாதிபதி சுபனாக இருக்க, ஆறுவர்க்கம் ஏறத் தேர் முடிப்பன். பாக்கியத்தில் இராகு, குளிகன், கூடப் பார்க்க, தெய்வத் தானத்தைப் பிடிங்கித் தன் வீட்டிலே போடுவான்.

தந்தையின் தீர்க்காயுளும், நலமும்

வானெனும் பிருகு நாதன்
சுபனென வரினும் பானுத்
தானென சுபருங் கூட
தீர்க்காயுள் பிதாவுக் கென்று
மானவன் பர்வ தாங்கிசம்
காரகன் சுபரோ டேற
பானுவே நல்லோர் அங்கிசம்
பதியிலே நலமாம் தந்தை. 269

என்பது.

பிதுர்த் தானாதிபதி சௌமியனாகக் காரகன் சுபருடனே கூட, பிதா தீர்க்காயுள். பிதுர் தானாதிபதி பர்வதாங்கிசம் கரை ஏற, காரகன் சுபருடனே இருக்க, சூரியன் சுபராங்கிசத்தில் இருக்க, பிதுர் சௌக்கியம் என்பது.

தந்தையால் நன்மை

தந்தையாம் தானம் தன்னில்
சௌமியன் தங்கச் சுங்கன்
சுந்தர வியாழ மாலும்
கூடக்கோபு ராங்கிசம் தோய
அந்தரத்தில் ரவியும் தானும்
அவ்வண்ண மாக நல்லோர்
சிந்தையால் பார்க்கு மாகில்
பிதுர்சௌக்கியம் தீர்க்கா யுண்டே. 270

என்பது.

ஒன்பதாமிடத்தில் சௌமியர் இருக்க, குரு, சுக்கிரர் ஒருவர் கூடியிருக்க, கோபுராங்கிசம் ஏற, சுபக்கிரகம் பார்க்க, அவனுக்குப் பிதுர் சௌக்கியம் உண்டு என்பது.

தந்தை மரணம்

உண்டெனும் இரவி குரூர
சட்டியாங் கிசமு வப்ப
கொண்டல்தன் பிதாவும் துக்கி
அங்கிசம் கொண்ட வீட்டான்
மண்டல பானு வோடே
நீசனாய் ஆறாம் வீட்டான்
கண்டிட பார்க்கத் தந்தை
கடுகியே மரண மாமே. 271

என்பது.

பிதுர்க்காரகன் குரூர சட்டியாங்கிசம் ஏற, பிதுர் துக்கம். பிதுர்த்தானாதிபதி ஏறின அங்கிசாதிபதி பிதுர்க்காரகனுடனே நீசனாய் இருக்க, சட்டாதிபதியுடனே கூட, பிதுர் மரணம் என்பது.

தந்தைக்குக் கர்மம் செய்பவன்

கடிகையாம் இலக்க னேசன்
பாக்கியன் உடனே காணத்
துடியிடை பானு வாலும்
பார்த்திடக் கர்மி யாகும்
படிமிசை பிதிர்தா னத்தோன்
நாலிலாய்ப் பாவர் தோன்ற
முடியலக் கனமும் மூன்றிற்
பிராதுபோல் முயற்சிப் பானே. 272

என்பது.

இலக்கனேசன், பிதுர்த்தானாதிபதியுடனே கூட, காரகனாவது அப்படிக் கூட, வியாழன் பார்க்க, பிதுர்க்கர்மம் பண்ணுவன். பிதுர்த்தானாதிபதி நான்கில் நிற்கப் பிதாவினுடைய சென்ம இராசி மூன்றாமிடம் இவன் செனன இராசியாக சகோதரச் சனங்களை போல இருந்து கர்மம் பண்ணுவான் என்றவாறு.

தனக்குக் கர்மம் செய்யும் தந்தையை உடையவன்

முயற்சியாய்த் தாதை தோன்றும்
இலக்கனம் இவனே மாது
கயத்துடன் இலக்க னேசன்
சட்டாட்டம் வியமே யாகி
நயத்துடன் சனியும் செவ்வாய்ப்
பார்த்திடப் பிதாவி னாலே
வியப்புடன் இருக்கக் கர்மம்
ஏற்றவே விதியுண் டாமே. 273

என்பது.

பிதுரேசனின், சென்ம இலக்கனத்துக்கு, இவன் இலக்கனம், சட்டாட்ட, வியமாக இருக்க, சனியும் செவ்வாயும் பார்க்க, பிதாவினாலே கர்மம் பண்ணிக்கொள்ளுவான் என்பது.

விதியெனும் தானத் தானும்
அட்டம இராசி நாளில்
மதியுடைக் குழவி தோன்ற
அன்றிநாள் மூன்றாய் வாய்க்க
கதியுடைக் குழவிக் கர்த்தன்
கர்மமே முகிப்பன் என்று
திதியுடன் முனிவன் தேர்ந்து
நினைப்பது தந்தை யாயே. 274

என்பது.

பிதாவுடைய அட்டமத் தானம் சேத்திரம் பிறக்க, அல்லது மூன்றாம் சேத்திரம் பிறக்க, பிதுர் தானே கர்மம் பண்ணுவான் என்பது.

தந்தைக்கு உதவாமல், தூரதேசம் செல்பவன்

தந்தையாம் தான நாதன்
கேந்திர மதுவே தாவ
உந்தியாய்ப் பானவ் வண்ணம்
உதவிடாத் தூர மாவன்
சிந்தையாம் பித்ரு நாதன்
இலக்கனம் சேர ரோகம்
விந்தையாம் எட்டாம் வேயன்
நாளுறில் உதவான் பின்னே. 275

என்பது.

பிதுர்த்தானாதிபதி கேந்திரங்களில் சரராசியாக இருக்கக்காரகனும் அப்படியே இருக்க, பிதாவுக்கு உதவாமல் தூரதேசம் போவான் என்பது. பாக்கியன் இலக்கனத்தில் இருக்க, சட்ட, அட்ட, வியாதிபதி கர்மத்தில் இருக்க, சகல கிரகமும் சொட்சசேத்திரம் மித்துருவாக இருக்க அன்னிய தேசம்.

அநேக பாக்கியம் உடையவன்

மின்னிய கேந்தி ரத்தில்
　　　கோணத்தை விரும்பித் தாதை
தன்னிலே சௌமியர் கூட
　　　பர்வதாங் கிசமே சார
அன்னியர் தான வீடாகி
　　　அனேகபாக் கியமுண் டாகும்
எண்ணவே கலைவல் லோர்கள்
　　　இயம்பினார் இலக்காய்த் தானே. 276

என்பது.

திரிகோண கேந்திரத்தில் பாக்கியாதிபதி இருக்க, சௌமியர் கூட, சொட்சசேத்திர பர்வதம்சம் ஏற, அநேக பாக்கியம் உண்டாம்.

புத்திரர், தாயாதிகளால் செல்வம்

பரானுமாம் புத்தி ரேசன்
　　　பாக்கியம் அதுவே பற்ற
விரானெனில் கூடப் பார்க்கப்
　　　புத்திர ராலே பாக்யம்
தராதேழின் ஞாதித் தானம்
　　　பாக்கியம் சார மைந்தன்
தராதர னாகக் கூட
　　　ஞாதியால் தருமே செல்வம். 277

என்பது.

புத்திரேசன் பாக்கியத்தில் இருக்க அல்லது பாக்கியனுடனே கூடப் பார்க்க, புத்திரராலே பாக்கியம். ஞாதித்தானாதிபதி பாக்கியத்தில் இருக்க, ஞாதிக்காரகனைச் சனி பார்க்கக் கூட ஞாதியாலே பாக்கியம்.

சகோதரத்தால் செல்வம் பெறுபவன்

இலக்கனம் இலாபம் சேர
　　பாக்கியன் தன்வீ டென்னப்
பலத்துடன் கர்ம நாதன்
　　பாக்கிய னுடனே பார்க்க
பலத்துடன் பாக்கி யாதி
　　சகோதர னுடனேல் பெண்ணே !
நலத்துடன் சவுமியர் பார்க்க
　　அங்கிசம் தருமே இலாபம். 278

என்பது.

இலக்கனாதிபதி இலாபத்தில் நிற்கப் பாக்கியாதிபதி பாக்கியத்தில் நிற்க, கர்மாதிபதி பாக்கியனுடனே கூட, மகாபாக்கியம். மூன்றாமிடமுடையவன் பாக்கியாதிபதி யுடனே கூடிச் சௌமியர் பார்க்க நல்ல அங்கிசம் ஏற, சகோதரத்தினால் சேத்திரபாக்கியம் உண்டு.

பாக்கியமற்றவன்

தருமெனும் தார நாதன்
　　தேவலோ காங்கிசம் சார
வருகையில் பாக்கிய காரகன்
　　குரூரஅங் கிசமே வாழ
நிருபனும் பாக்கிய ஈனம்
　　நிச்சயம் பாக்கி யாதி
வெருவிய பாவர் கூட
　　இலக்கனன் சயமால் வீணே. 279

என்பது.

களத்திரக்காரகன் தேவலோக அங்கிசம் கரை ஏற, பாக்கியாதிபதியும் காரகனும் குரூர அங்கிசம் கரை ஏற, பாக்கிய ஈனம். வெகு பாவிகள் பாக்கியத்துடன் கூடியிருக்க, இலக்கனாதிபதி பலவீனனாகிப் பாக்கிய ஈனம்.

பாக்கியமற்றவனும் பாக்கியவானும்

வீணெனும் பாக்கி யாதி
சட்டாட்ட வியத்தி லாகக்
காணெனும் கார கன்தான்
அப்படிப் பார்க்க பாவர்
ஒணியாய்ப் பார்க்கப் பாக்கிய
ஈனனாம் இலக்க னாதி
சேணிலம் பலவான் ஆகில்
பாக்கியம் செழிக்கும் மாதோ. 280

என்பது.

பாக்கியாதிபதி சட்ட, அட்ட, வியத்தில் இருக்க, காரகனும் அப்படியே இருக்க, சுபர் பார்த்திருக்க, பாக்கிய ஈனம். இலக்கனாதிபதி பலத்திருக்க, பாக்கியம் உண்டு.

பாக்கியமற்றவன்

பாக்கியன் குரூர சட்டி
அங்கிசம் பற்ற அந்த
ஆக்கமாம் வீட்டார் தன்னைச்
சுக்கிரன் பார்க்க வாகி
நீக்கமாம் உதயம் பாக்கியம்
மந்தனும் மகனும் நிற்க
ஈய்க்குளா யன்றி பாக்கிய
ஈனனாம் என்ன லாமே. 281

என்பது.

பாக்கியாதிபதி குரூர அங்கிசம் ஏற, அந்த நாதனைச் சுக்கிரன் பார்க்க, பாக்கியத்தில் இலக்கனத்தில் சனி, குளிகன் கூட, பாக்கியம் ஈனம்.

மிகுந்த பாக்கியம்

இலாபனும் பாக்கி யத்தாய்
பாக்கியன் இலக்க னத்தாய்த்
தீபமாம் இலாபன் பாக்கியன்
கூடினும் செழித்து வாழ்வான்

சாபமாம் கர்மம் பாக்கியம்
சாரவும் சௌமி யாளே
தூபமாய்ப் பர்வ தாங்கிசம்
தோயபாக் கியமென் றேமால். 282

என்பது.

இலாபன் பாக்கியத்தில் இருக்க, பாக்கியன் இலக்கனத்தில் இருக்க, இலாபாதிபதியும் பாக்கியாதிபதியும் கூடி இருக்க, நல்ல பாக்கியம். கர்மேசன் பாக்கியத்தில் இருக்க, பர்வதாங்கிசம் கரை ஏறின சௌமியர் பார்க்க, வெகு பாக்கியம் உண்டு என்பது.

தானம் செய்பவன்

மாலெனுந் தார னாதன்
உச்சனாய்ச் சுபரே வாழ
சீலமாய்ச் சுபரே பார்க்க
தானங்கள் மிகவும் செய்வன்
ஏலவே பாக்கி யாதி
பர்வதாங் கிசமே ஏற
சாலஇலக் கனன்ப லக்க
பொன்பார்க்க மாதான மாமே. 283

என்பது.

களத்திர தானாதிபதி உச்சனாகச் சுபர் பார்க்க இருக்க, மகாதானம் பண்ணுவான். பாக்கியன் பர்வதாங்கிசம் ஆறு வர்க்கங்கள் ஏற, அவனை வியாழன் பார்க்க மகாதானம் பண்ணுவான் என்பது.

தானமாம் தானம் தன்னை
இலக்கனன் தயவாய்ப் பார்க்க
ஈனமில் லாமே இலக்க
நேசனைத் தானன் பார்க்க

மானன்மா தானம் பாக்கி
யன்சிங்கா சனமே வாழ
ஆனதோர் இலக்க னாதி
பார்க்கவும் தான னாமே. 284

என்பது.

இலக்கினாதிபதியைத் தானாதிபதி பார்க்க, ஒன்றுகொன்று பார்க்க மகாதானம் பண்ணுவன். ஒன்பதாமிடமுடையவன் சிங்காசன அங்கிசம் ஏற, இலக்கனாதிபதி தனாதிபதியைப் பார்க்க அல்லது கர்மாதிபதி பார்க்க, மகாதானம் பண்ணுவான் என்றவாறு.

ஆமெனும் இலக்க னத்தைப்
பாக்கியன் பார்க்கக் கூடப்
பூமெனும் ராச யோகம்
ஆம்எனப் புகல லாகும்
ஏமமாம் தானம் தன்னில்
ஒருவனே இருக்க பாக்கியன்
வாமனால் பார்க்கில் தானச்
சகாயனாய் வர்த்திப் பானே. 285

என்பது.

இலக்கனத்தைப் பாக்கியன் பார்க்க, அல்லது கூடியிருக்க இராச யோகம். தனத் தானத்தில் ஒரு கிரகமாவது இருக்க, பாக்கியன் பலத்திருக்கத் தான சகாயன் என்பது.

காயமாம் நான்காம் தானன்
சுபனெனக் கருதப் பாக்கியன்
ஞாயமாய்க் கேந்தி ரத்தில்
நல்லவ னாகச் சுங்கன்
வேயமாய் இருக்க மாகத்
தானமே மிகவும் செய்வான்
தூயவ னென்ன வாழ்வான்
சுரர்தனக் கதிய மாமே. 286

என்பது.

நான்காமிடம் உடையவன் சுபனாக இருக்க, பாக்கியன் கேந்திரத்தில் இருக்க, சுக்கிரன் வியத்தில் இருக்க, மகாதானம் பண்ணுவான். தேவர்களைக் காட்டிலும் தூயவனாக வாழ்வான் என்பது.

தானம் பெறுபவன்

அதியமாம் இலக்க னேசன்
இலாபமாய்க் கர்ம நாதன்
பதியினில் பலக்கப் பாக்கியன்
குரூரசட்டி யாங்கிசம் ஏற
விதியினில் தானங் கையால்
வாங்குவன் வித்தை இல்லான்
நதியினில் மூழ்கித் தீரும்
என்பவன் நலமில் லானே. 287

என்பது.

இலக்கனேசன் இலாபராசியில் இருக்க, கர்மேசன் பலத்திருக்க, பாக்கியன் குரூரனாக இருக்க தானம் வாங்குவான்.

இல்லெனும் புத்தி ரேசன்
பாக்கியத் திருக்கக் கர்மன்
வல்லவன் பாக்கி யாதி
கூடஇலக் கனமாந் தானம்
சொல்லிய குரூர னாகத்
தானமே தொடர்ந்து வாங்கிப்
பலப்பல காலம் போக்கும்
பாக்கியம் இல்லா தாயே. 288

என்பது.

ஐந்தாமிடமுடையவன் ஒன்பதில் நிற்க, கர்மாதிபதியும் பாக்கியாதிபதியும் கூட இலக்கனேசன் குரூரனாய் இருக்க தானம் வாங்குவான்.

ஒன்பதாம் பாவம் முற்றும்

10. பத்தாம் பாவம்

பாக்கியன் ஒன்பதாம் தானம்
பாடினேன் பத்தாம் பாவம்
ஆக்கினை பிர வர்த்தி கீர்த்தி
மானமுங் கர்ம மாகத்
தேக்குசீவ னங்கள் ஞானம்
புத்தி லடிகள் சேர்தல்
வாங்கினால் வெங்க டேசன்
வணங்கினார் மனத்தாற் கல்லே. 289

என்பது.

பத்தாம் இடம் கொண்டு பிரவர்த்தி, ஆக்கினை, கீர்த்தி, மானம், கர்மம், சீவனம், ஞானம், தாசன், புத்தி இவையெல்லாம் சொல்லலாம்.

வேள்வி செய்பவன்

கல்லெனும் கர்ம னாதன்
தனத்தினான் கணக்கன் கூடி
வல்லதாம் கர்மம் தன்னில்
எக்கியம் வருவ தாகும்
நல்லவன் வியாழன் சுங்கன்
ஆகினும் கர்ம நாடி
இல்லென உச்சம் தானம்
இருந்திடில் எக்கிய னாவன். 190

என்பது.

கர்மேசன், தனேசன், புதன் இவர்கள் கர்மத்தில் இருக்க, எக்கியம் பண்ணுவான். வியாழன் சுக்கிரன் பத்தாமிடத்தில் இருக்க உச்ச சொட்சசேத்திரத்தில் இருக்க, அவன் எக்கியம் பண்ணுவான்.

கங்கையில் குளிப்பவனும் வேள்வி செய்பவனும்

வனமிகு இராகு வாலும்
　　இரவிதன் கர்ம மாகில்
நினவில்லாக் கங்கா ஸ்நானம்
　　நிச்சயம் கர்மத் தானம்
வினவிய மீன மாகக்
　　குருபுகர் புதன்தான் மிக்காய்
தினம்செவ்வாய் கூட கங்கா
　　ஸ்நானமும் அவர்க்குண் டாமே.

என்பது.

இராகு கர்மத்தில் இருக்க, அல்லது சூரியன் இருக்க, கங்கா தானம் லபிக்கும். கர்மதானம் மீனமாக இருக்க, அதில் வியாழனாவது, சுக்கிரனாவது, புதனாவது செவ்வாயுடனே கூடியிருக்கக் கங்காதானம் லெபிக்கும் என்பது.

புண்ணியவான்

உண்டெனுங் கர்ம தானம்
　　சலமென உறவாய்ப் பொன்னன்
மண்டல மதிதான் நிற்க
　　கங்கையோ மதிதான் வெள்ளி
திண்டிறல் கர்ம னோடே
　　சேத்திர மதுவாம் புந்தி
தண்டமிழ் வியமால் பாக்கியன்
　　கேந்திரக்க தர்ம வானே. 292

என்பது.

கர்மத்தான் சல இராசியாக இருக்க, அதில் வியாழனாவது சந்திரனாவது நிற்க, கங்கா ஸ்நானம். பத்தாமிடம் உடையவனுடனே சந்திரனாவது, சுக்கிரனாவது கூடி, சொட்சசேத்திர மித்திரங்களில் இருக்க, வியத்தில் புதன் இருக்க, பாக்கியாதிபதி கேந்திரத்தில் இருக்க, மகா புண்ணியவான் என்பது.

திருப்பணி செய்பவன்

வானுறை மதியும் கர்ம
நாதனும் மூன்றில் வாழ
ஆனவன் புண்ணிய வானாம்
அன்றியும் புதன்தான் பொன்தான்
தீனமாம் சேயும் கூட
அல்லது சேய்தான் பார்க்கில்
ஞானனாய்த் திருப்ப ணிகள்தான்
முகிப்பதாய் நாட்ட லாமே. 293

என்பது.

சந்திரன் மூன்றில் நிற்க, கர்மாதிபதியுடனே கூடப் புண்ணியவான். புதனாவது சீவனனாவது செவ்வாயுடனே கூடியிருக்க, அல்லது செவ்வாயைப் பார்க்க திருப்பணி முடிப்பான் என்பது.

குளம், தடாகம், திருப்பணிகள் செய்பவன்

நாட்டிய கர்ம நாதன்
நான்கிட முடையான் கூட
தேட்டமாய்ச்சீ ரணமாய் இருக்கும்
திருப்பணி செய்வான் அல்லால்
கூட்டமாம் கலைவா னிந்து
கர்மவிதி கூடில் குட்ட
மீட்டிய தடாகம் வெட்டி
வியத்துவன் புந்தி யாலே.

என்பது.

கர்மாதிபதியுடனே நான்காமிடம் உடையவன் கூட, சீரணமாக இருக்கிற திருப்பணிகள் முடிப்பான். கர்மேசுரனுடனே சந்திரன் கூடினால் குளம், தடாகம் வெட்டி வைப்பான் என்பது.

வேள்வி புரிபவன்

புந்தியும் கர்மத் தானும்
பத்திலே பொருந்தப் பாக்கியன்
பந்தமாம் பாவர் பாரா
தாகில்எக் கியமே பண்ணும்
சந்திர னுடனே கர்மம்
சாரகேந் திரத்தில் பாக்கியன்
நிந்தியாம் பாம்பு பாரார்
எனில்எக் கியமே நித்தம். 295

என்பது.

புதன் பத்தாமிடத்தானுடனே பத்தில் நிற்கப் பாக்கியாதிபதியைப் பாவர் பாராதிருக்க எக்கியம் லபிக்கும். கர்மாதிபதியுடனே சந்திரன் கூடியிருக்க பாக்கியன். கேந்திரத் திரிகோணத்தில் இருக்க, இராகு கேது பாராதே கூடாதே இருக்க, எக்கிய கர்மத்தான்.

ஆக்கினைப் படுபவன்

நித்தியம் கர்ம னாதன்
சட்டாட்ட நீசம் போகச்
சித்தமாய் இராகு கூடத்
திருட்டியால் எக்கியம் சேரா
பத்திலே செவ்வாய் நான்கில்
புண்ணிய சுபத்தான் வந்து
அத்தியே சோப னாங்கிசம்
எண்ணிலா ஆக்கினை யாவன். 296

என்பது.

கர்மாதிபதி சட்டாட்ட நீசத்திலே போக, பாவர் பார்க்க, இராகு கூட எக்கிய கர்மம் பண்ணி நசித்ததால் விக்கினம் வரும். தர்மத்தானத்தில் செவ்வாய் இருக்க, சுபக்கிரகம் நாலில் நிற்க சோபனாங்கிசம் ஏற ஆக்கினைப் படுவான்.

தூரதேசத்தில் ஆக்கினைப் படுபவன்

ஆக்கினைத் தானம் வெய்யோன்
சேயுட னாக வன்றி
வாய்க்குங்கேந் திரத்தால் குரூர
சட்டியங் கிசமே வரினும்
தூக்கிய பத்தில் மந்தன்
அட்டம னுடனே தோயத்
தேக்கிய குரூர சட்டி
யுரில்தூர தேச ஆக்கினை. 297

என்பது.

பத்தாம் இடத்தில் சூரியன் நிற்க, செவ்வாயுடனே கூட, அல்லது அவர்கள் சேத்திரங்களில் இருந்து அன்னிய புண்ணியமாகக் குரூர ஆக்கினை. பத்தாமிடத்தில் சனி நிற்க, அட்டமாதிபதி கூட குரூராங்கிசம் ஏற, தூரதேசத்தில் ஆக்கினை என்பது.

தூரமாம் இராகு மாந்தி
கர்மத்தைத் துறக்க வன்றிப்
பாரமாம் அட்ட மாதி
பதியுடன் இராகு கூட
ஆரவே பாக்கியம் நீசம்
குரூரசட்டி மருவு மாகில்
தீரனைத் தூர தேசத்
தாக்கினை செய்வ தாமே. 298

என்பது.

இராகுவும் குளிகனும் கர்மத்தில் இருக்க, அட்டமாதிபதியுடனே இராகு கூட, ஒன்பதாமிடம் உடையவன் நீசமாகக் குரூர அங்கிசம் ஏற, முன் சொன்ன பலன் என்பது.

புகழ் உடையவன்

செய்வதாம் கர்ம நாதன்
கேந்திரச் சுபனாய்ச் சேர
அய்யெனுங் குரூர சட்டி
அங்கிச மாகில் ஆக்கினை
உய்வெனும் கர்மன் இந்து
இவர்ராசி நண்டில் ஓங்க
துய்யவன் கர்மன் கூடக்
குருபார்க்கச் சுகியன் கீர்த்தி. 299

என்பது.

கர்மாதிபதி, சுபனாகக் கேந்திரத்தில் நிற்க, குரூர சட்டியங்கிசம் கரை ஏற, ஆக்கினை, கர்மாதிபதி சந்திரனாக இருக்க, இராசி கடகமாக இருக்க அல்லது கர்மாதிபதியுடனே கூட குரு, சுக்கிரனால் பார்க்கப்பட, பர்வதாங்கிசம் கரை ஏற, கீர்த்தி உடையவன் என்பது.

கீர்த்தியான் தான புத்தி
ஆகித்தன் வீடு மித்திரன்
சாத்திய சௌமி சட்டி
அங்கிசம் சாரில் கீர்த்தி
ஏற்கவே தெய்வ லோகாங்
கிசமேற வன்றி யேதான்
தீர்க்கமாம் சிங்கம் ஏறில்
மதியெனில் கீர்த்தி உண்டே. 300

என்பது.

கீர்த்தித் தானாதிபதி புதனாக சொட்ச மித்திர வீடுகளில் இருக்க, சௌமியன் சட்டியங்கிசம் கரை ஏற, சர்கீர்த்தி உண்டு. கர்மாதிபதி தேவலோகாம்சம் ஏற, அல்லது சிங்காசனாங்கிசம் கரை ஏறச் சந்திரனுடனே கூடச் சர்கீர்த்தி உண்டென்பது.

அபகீர்த்தி அடைபவன்

மதிப்பில்லாக் கர்மந் தன்னில்
பாவிகள் வாழா ராகில்
உதிப்புறக் கர்ம நாதன்
பலன்சுப சட்டி ஓங்கத்
துதிப்புறு கீர்த்தி மானாம்
கர்மாதி நீசம் தோயக்
குதிப்புடன் சனிசேய் மாந்தி
கூடஅவ கீர்த்தி மானே. 301

என்பது.

பத்தில் பாவிகள் இல்லாது இருக்க, கர்மாதிபதி பலத்திருக்கச் சுப சட்டியங்கிசம் ஏற, சர்கீர்த்தி. தர்மாதிபதி நீச சனியாக, மாந்தி கூட, செவ்வாய்ப் பார்க்க, அபகீர்த்தி உண்டு என்பது.

குரூர ஆக்கினை அடைபவன்

அவமெனும் பத்தாம் தானன்
சொட்சேத்திர னாக அன்றிச்
சுபனுடன் கூட இங்கி
தம்இயல் ராச னாவன்
பவமெனும் பத்தில் பாவி
அல்லது பாவி பார்க்கில்
நவமெனச் செவ்வாய் கூடில்
குரூரஆக் கினைந டக்கும். 302

என்பது.

பத்தாமிடம் உடையவன், சொட்சசேத்திரனாக அன்றி சுபனுடன் கூட, இங்கிதமான இராசனாவான். பத்தாமிடத்தில் பாவிகள் இருக்க, அல்லது பாவிகள் பார்க்க, அல்லது செவ்வாய் கூடி இருக்க, குரூர ஆக்கினை உண்டாம் என்பது.

சன்னியாசி யோகம்

நடப்பதாம் பத்தாம் தானன்
நீசனாய் நாசர் பார்க்க
படப்பராசி அங்கிசம் பாவர்
மானமே ஈனம் பாவத்
தொடத்தகாக் கர்மன் வந்து
உடன்கூட சுபர்கள் கேந்திரம்
சுடத்தகாக் கோண மாகில்
சன்யாசம் தருவிப் பானே. 303

என்பது.

பத்தாமிடம் உடையவன் நீசனாகப் பாவிகள் பார்க்க, பாவிராசி ஏற, மானபங்கம் நேரிடும். கர்மாதிபன் சந்திரனுடனே கூடச் சௌமியர், சுபர் கேந்திரத் திரிகோணத்தில் இருக்க சன்னியாசம் பண்ணிவிப்பான்.

முனீந்திர யோகம்

தாவிக்கும் கர்ம னோடே
குருக்கூட அலதேற் பார்க்க
பாவித்த கேந்தி ரத்தில்
பற்றிட இலக்க னத்துக்
தாவித்த நான்குக் குள்ளாய்
முனீந்திர னாவா னென்னும்
தேவர்க்குத் தேவ னென்ன
மிக்கதாய்ச் செப்பி னாரே. 304

என்பது.

கர்மாதிபதியுடனே வியாழனும் கூட, பார்க்க, அல்லது கேந்திர திரிகோணத்தில் இருக்க, அல்லது இலக்கனத்துக்கு நாலாமிடத்துக்கு உள்ளே இருக்க, முனீந்திரனாவான் என்பது.

தேவேந்திர யோகம்

மிக்கதாய் இலக்க னாதி
சேயென விரும்பி ஒன்பான்
தக்கதாய்க் கர்மத் தானைப்
பார்க்கிலும் முனியாம் சாலத்
திக்கதாம் கர்ம மந்தன்
திரேகாண மாக இந்து
ஒக்கவே கூடி மந்தன்
கர்மமங் கிசமேல் தேவன். 305

என்பது.

இலக்கனாதிபதி செவ்வாயைப் பார்க்க, பாக்கியாதிபதி கர்மாதிபதியைப் பார்க்க அல்லது கூட, முனீந்திரனாவான். கர்மாதிபதிக்குச் சனி திரேகாணமாகச் சந்திரனுடனே கூடி நிற்க, சனியுடனே கூட, கர்மாதிபதி வீட்டு அங்கிசமெடுக்க, சந்திரனுடனே கூட தேவேந்திரனாவான்.

முனீந்திர யோகம்

தேகமாய் நாலான் வீட்டான்
சந்திர னுடனே சேர
பாகாம் வியாழன் பார்க்க
முனீந்திரன் பத்தாம் பாவ
யோகமாய் முகிந்து மப்பால்
லாபமே இயம்ப வண்ண
வாகனன் அருளால் வெங்க
டேசரே வகுக்க லுற்றார். 306

என்பது.

நான்காமிடமுடையவன் சந்திரனுடனே கூட, வியாழன் பார்க்க, முனீந்திர யோகம்.

பத்தாம் பாவம் முற்றும்

11. பதினோராம் பாவம்

தன இலாபம்

வகுத்திடும் இலாப நாதன்
(சுபர்)மத்தி பாக்கிய மென்ன
தொகுத்ததைப் பார்க்கப் பர்வ
தாங்கிசம் தூண்ட இலாபம்
பகுத்துடன் இலாப மென்றும்
அங்கிச கர்மத் தானை
மிகுந்தவன் பார்க்கில் இலாபம்
என்னவே விளம்ப லாமே. 307

என்பது.

சுபர் மத்தியிலே இலாபாதிபதி இருக்க, பாக்கியாதிபதியாலே பார்க்கப்பட பர்வதாங்கிசம் ஏற, இலாபித்துக் கொண்டே இருப்பன். இலாபாதிபதி அங்கிசாதிபதி சுபனாக இருக்க, கர்மாதிபதியாலே பார்க்கப்பட தனலாபம் என்பது.

விளம்பிய இலக்கனன் உச்சக்
கிரகத்தை மேவு மாகில்
வளம்பெற இலாப முண்டாம்
இலாபனும் மனையான் கூட
உளந்திகழ் கர்ம மிரண்டாம்
இடம்புகர் வீடாய் ஓங்க
வளந்திகழ் பாக்கி யாதி
பார்க்கவும் மிகுமே லாபம். 308

என்பது.

இலக்கனாதிபதி உச்சகிரகத்துடனே கூட, தனலாபம். இலாபேசன் நான்காமிடம் உடையவனுடனே கூட, கர்மன்,

இரண்டாமிடம் சுக்கிரன் வீடாக இருக்க, பாக்கியாதிபன் பார்க்க, தனலாபம் உண்டென்பது.

இலாபனும் கோண மன்றி
　　கேந்திர சுபனே கூட
இலாபரெனும் பாக்கி யாதி
　　பார்த்திட இலாபம் சேர
பலாபல மாக இலாபம்
　　சேர்ந்திடும் பதினொன் றேறில்
நலார்நடு வாகி இலாபம்
　　உண்டென் நவிலு வீரே. 309

என்பது.

பதினோராம் இடத்திற்கு உடையவன் கேந்திர கோணத்தில் நிற்க, சுபன் கூட பாக்கியாதிபதி பார்க்க, பதினொன்றில் தானிற்க சில தனலாபம். பதினொன்றில் சுபர் நடுவாக அதின்படி நிற்க, தனலாபம்.

வீரனாம் லாப னாதன்
　　அங்கிச மெடுத்தான் தானும்
தீரனாம் சுபனாய்க் கர்மன்
　　பார்த்திடில் சேரும் இலாபம்
மாறவே இலாப னாதன்
　　உச்சனாகக் கூடில் நல்லோர்
வாரமாய்ப் பார்க்கில் என்ன
　　தனம்வரும் மங்கை யீரே. 310

என்பது.

இலாபாதிபன் இருந்த அங்கிசநாதன் சுபனால் பார்க்கப்பட தனலாபம். இலாபநாதன் உச்சனாக அல்லது உச்சக்கிரகத்துடனே கூட சுபர் பார்க்கத் தனலாபம்.

பொருள் இழப்பு

மங்கையே ! வியத்தில் பாவர்
நின்றிடில் பாவர் சேதம்
சங்கையாய் மந்தன் மாந்தி
பாம்புடன் சார அந்தப்
பங்கமா மதியின் தானும்
பாவியாய்க் குரூரம் ஏறில்
அங்கிவன் பாவத் தாலே
தனங்களை இழப்பன் நல்லாய் ! 311

என்பது.

பன்னிரண்டாமிடத்தில் பாவக்கிரகம் நிற்க, பாவம் செய்வதற்காகத் தனம் செலவழிப்பான். சனியும் குளிகனும் இராகுவும் கூட இலாபாதிபன் பாவக்கிரகமாகச் சுபர் திருட்டி இல்லாது இருக்க, இவன் பாவ மூலத்தினாலே தனங்களை இழப்பான்.

பொருள் செலவு

நல்லதாம் வியத்து நாதன்
அங்கிச மெடுத்த வீட்டான்
பலத்திரஞ் சுபனாய் அன்றி
மத்தியில் நிற்கு மாகில்
நல்லதாய்த் தர்மத் தாலே
தனமொன்று நல்கி லானே.
....
....

என்பது.

வியநாதன் எடுத்த அங்கிசாதிபதி சுபனாக இருக்க, அன்றி சுபக்கிரக மத்தியிலிருக்கத் தர்மம் நிமித்தம் தனஞ்செலவு.

புண்ணியவான்

இல்லெனும் பிருகு பாலன்
　　பொன்வியம் ஏற புந்தி
நல்லவன் மதியும் பார்க்க
　　ஆறுவர்க்கம் நாடில் அந்த
வல்லவன் தர்ம மூலம்
　　தனங்களைச் செலவு பண்ணிப்
பலப்பல கால மெல்லாம்
　　பாரினில் செழிப்பன் தானே. 313

சுக்கிரன், குருநாதன் வீடாக பன்னிரண்டில் நிற்க, புதன், சந்திரன் பார்க்க, கூட ஆறு வர்க்கங்கள் ஏறில் தர்மம் நிமித்தமாகத் தனங்களைச் செலவழித்துப் புண்ணியவான் ஆவான் என்பது.

தன இலாபம், தன நஷ்டம்

செழித்திடும் இலாபம் சேரும்
　　திசையினும் மதிக்கு நாலும்
களித்திடும் அங்கி சத்தில்
　　பிலமது கண்டுநீ மிக்க
வளப்படுந் தனங்கள் இலாபம்
　　வருவது அறிந்து பின்னை
இழப்பதும் பாவர் தங்கள்
　　பலங்களால் இயம்பு வீரே. 314

என்பது.

இலாப ராசி திக்கிலும், இலாபநாதனிருந்த திக்கிலும், அவர்கள் திசையபகார சித்திரங்களிலே சுபர்கள் சம்மந்தமாகில் தனலாபமென்றும் பாவ சம்பந்தமாகில் நாசமென்றும் சொல்லலாம்.

இலாபம் இல்லாதவன்

இலாபத்தே பாவி யாக
அல்லது இலாபம் பார்க்கக்
கோபத்தால் குரூர சட்டி
அங்கிசம் இலாபம் கொள்ள
வாபத்து மாகு மப்பா
இலாபமே முற்று மப்பா
தீபத்தை ஒத்த வீயம்
பலமது செப்ப லாமே. 315

என்பது.

இலாபத்தில் பாவிகளிருக்க அல்லது பார்க்க, இலாபாதிபதி குரூர சட்டி அங்கிசம் ஏற லாபம் இல்லை என்பது.

பதினோராம் பாவம் முற்றும்

12. பன்னிரண்டாம் பாவம்

பலமுறும் பன்னி ரண்டாம்
பாவகம் வியமே யாகில்
வலமுறு பதனம் அங்கம்
வயூலியம் வாமம் ஆட்சி
நலமில்லா நரகம் நேத்திரம்
சயனமும் நாடித் தேர்ந்து
குலபதி வெங்க டேசக்
கோவிதை அருள்செய் தாரே. 316

என்பது.

பன்னிரண்டாம் இடம்கொண்டு வியம், அகிலம், பதனம், அங்கம், வயூலியம், வாமம், ஆட்சி, நரகம், சொர்க்கம், நேத்திரம், சயனம் இவையெல்லாம் சொல்லலாம்.

தனச்செலவு

அருளிய வியேசன் பாவ
ருடனன்றி வியத்தில் பாவி
வருகவும் பாவர் பார்க்க
பலமுலம் வருமாம் சொர்ணம்
வெருவிய இராகு மந்தன்
குளிகன் வியத்தில் வேயன்
தருவென குரூர சட்டி
சாரிலும் தனமே நாசம். 317

என்பது.

வியேசன் பாவருடனே கூட. அல்லது வியத்தில் பாவி நிற்க, பாவக்கிரகம் பார்க்க, பாவ மூலமாய்த் தனம் வரும். சனி, குளிகன் , இராகு வியத்தில் இருக்க, வியேசன் குரூர அங்கிசம் ஏற, பாவிகள் பார்க்க, பாவ மூலத்தினால் தனம் வியம்.

நாசமாய் வியத்தான் நல்ல
சுபனெனக் கோண கேந்திரம்
நேசமாய் இருக்க நல்லோர்
பார்த்திடக் கனபூ சணங்கள்
பாசமாய் பாவ ராகில்
கனபூ சணங்கள் இல்லை
ஈசனாம் வெங்க டேசன்
இயம்பிய வண்ணந் தானே. 318

என்பது.

வியத்தானாதிபதி சுபக்கிரகமாகக் கேந்திரத் திரிகோணத்திலிருக்க, சுபக்கிரகம் பார்க்க கனபூசணமுண்டு. பாவிகள் இருக்க இல்லை.

தீர்காயுளும் செல்வமும்

வண்ணமாம் இலக்க னேசன்
வியாதியும் மூன்றில் வாழ
திண்ணமாய்ச் சுபரே பார்க்கக்
கனபூ சணங்கள் உண்டு
பண்ணி வியனும் இலாபன்
கூடிடச் சுபரே பார்க்க
வண்ணனும் தனவா னாகித்
தீர்க்காயுள் கண்டு கொள்ளே. 319

என்பது.

இலாபாதிபதியும் வியாதிபதியும் மூன்றில் நிற்க, சுபக்கிரகம் பூரணமாய்ப் பார்க்க, கனபூசணங்கள் உண்டு. வியாதிபதியும் இலாபாதிபதியும் கூடியிருக்கச் சுபக்கிரகங்கள் பார்க்கத் தீர்க்காயுளும் தனமும் உண்டாம்.

தன இலாபம்

தானெனும் வியனைப் பாவி
பார்த்திடச் சகதி னாகத்
தீனமாம் தானமும் இலாப
நாதனும் சுபனே சேர
ஆனதும் தனமே இலாபம்
வியேனும் பாவர் வீடாய்
ஈனமாம் ரோகன் கூடில்
பாவத்தால் அமைப்பன் சொர்ணம். 320

என்பது.

வியாதிபதியைப் பாவிகள் பார்க்க, பாவியுடனே கூட, தன நாசம். இலாபாதிபதியுடனே கூட சுபக்கிரகம் கூடியிருக்கத் தனலாபம் உண்டு.

பொருள் அழிவு

சொன்னமாம் வியேனும் செவ்வாய்
உடன்தோயப் பிராதால் நாசம்
தன்னிலே புத்தி ரேச
உடன்வியன் சார அன்றி
உன்னியுங் குரூர மான
அங்கிச மதுவே ஏறத்
மண்ணிலே புத்தி ரரால்
தனவிரய மாகும் தானே. 321

என்பது.

வியேசன் செவ்வாயுடனே கூடச் சகோதரத்தால் தனவிரயம். புத்திராதிபதியுடனே வியாதிபதி கூட, பலயீனராக இருக்கக் குரூர அங்கிசம் கரையேற புத்திரர் மூலம் தனசேதம் வரும்.

தானவன் பிதுருத் தானன்
வியனுடன் சார சத்துரு
வானதாம் தானன் பார்க்கப்
பித்ருவால் அழியும் சொர்ணம்
மானவன் வியனும் நாலாம்
இடமது வாழப் பாவி
தீனமாய்ப் பார்க்க மாதா
வழியினால் சேத மாமே 322

என்பது.

பிதுர்த்தானாதிபதி வியாதியுடனே கூடத் சத்துருத் தானாதிபதி பார்க்க, பிதுர் மூலம் தனம் சேதம். மாத்ருதானாதிபதி வியாதிபதியுடனே கூட, பாவர் பார்க்க மாதாவினாலே தனம் சேதம்.

உடல் குறைபாடு

வழியெனும் ஆயுள் நாதன்
வியனுடன் கூடி வாழ
அழியெனுங் குரூர நீச
அங்கிசம் அங்க ஈனம்
வெளிபடும் வியத்தான் பாவ
சகிதனாய் மாந்தி கூட
இழிவெனும் அங்கந் தன்னில்
என்னவும் இயம்பு வீரே. 323

என்பது.

ஆயுள் தானாதிபதி வியாதிபதி கூட, குரூர ராசி அங்கிசம் ஏற, அங்க ஈனம். பன்னிரண்டாமிடத்தில் வெகு பாவிகள் இருக்க வியாதிபதி பாவியாகச் சனி குளிகனுடனே கூட அங்க ஈனம்.

நரகில் வீழ்பவன்

இயம்பிய வியேசன் பாவ
அங்கிச மேற வன்றிப்
பயம்படு குரூர சட்டி
அங்கிசம் பற்றப் பாவர்
நயன்றதைப் பார்க்கு மாகில்
நரகமே வீழ்வ னப்பா
வியம்படு புத்தி யாலே
பாரத்தை விரிக்க நன்றே. 324

என்பது.

வியேசன் பாவ இராசி அங்கிசம் ஏற குரூர சட்டி அங்கிசம் ஏறப் பாவக் கிரகங்கள் பார்க்க, நரகம் வீழ்வான் என்பது.

நரகில் வீழ்பவனும் சுவர்க்கம் சேர்பவனும்

நன்றென வியன்கு ரூர
சட்டியங்கிசம் நாட பாவர்
ஒன்றெனக் கூடப் பார்க்க
நாகமாம் இந்து பானு
இன்றெனும் வியனும் நல்லன்
கேந்திரத் திரும்ப தானால்
மன்றிலே தெய்வ மான
மரணமே இலபிக்கும் தானே. 325

என்பது.

வியாதிபதி சட்டி அங்கிசம் ஏற, குரூரருடனே கூட, பார்க்க, நரகம் அடைவன். சந்திரன், சூரியன் பலவானாக இருக்க, தெய்வீக மரணம். சொர்க்கம் அடைவன்.

சொர்க்கம் அடைபவன்

மன்னிய கர்ம னாதன்
பலனென வியமனாம் அன்னன்
தன்னிலே சுபனே யாகப்
பார்க்கவும் வியத்தில் உச்சன்
பண்ணியே இருக்கு மாகில்
சுபரதைப் பாக்கும் போதும்
கண்ணியே சொர்க்க லோகம்
கடாட்சத்தால் கடவுள் காட்டும். 326

என்பது.

கர்மாதிபதி பலத்திருக்க, வியாதிபதி சுபக்கிரகமாய் இருந்து பார்க்க, வியத்தில் ஒரு கிரகம் உச்சமாக இருக்க, சொர்க்கம் கிடைக்கும் என்பது.

கடவுளாம் சுபரே சொட்ச
உச்சமாய் வியமே காண
அடவதாம் வியனும் சௌமியன்
ஆகிக்கேந் திரத்தை ஆளத்
திடமுடன் தேவ லோக
அங்கிசம் அதுவே சேரில்
அடவதாய்ச் சொர்க்க லோகம்
அடைவது திண்ண மாமே. 327

என்பது.

சுபக்கிரகம் சொட்சசேத்திர உச்சமாக வியத்திலிருக்க, வியாதிபதி சௌமியனாகக் கேந்திரத்தில் இருக்க, தேவ லோகாங்கிசம் எடுக்கச் சொர்க்கம் என்பது.

திண்ணமாம் கர்ம னாதன்
வியத்துடன் கூடப் பார்க்க
வண்ணமாம் சுபரே பார்க்கில்
சொர்க்கலோகம் வாய்க்கும் கர்மன்

கண்ணதாம் வியனைக் கூட
அன்றியும் பார்வை கண்டால்
எண்ணிலாச் சொர்க்க லோகம்
இயற்கையாய் வாய்க்குந் தானே. 328

என்பது.

கர்மாதிபதி வியாதிபதியுடனே கூட, அல்லது பார்க்க, சுபக்கிரகத் திருட்டி உண்டாகச் சொர்க்கம்.

நல்ல கண்களும், பொருள் அழிவு

வாய்த்துடன் நேத்தி ராதி
சுபனுடன் கூடி வாழ
ஏய்த்திடும் சுபனே யான
அங்கிச மேற வேயன்
மாய்ச்சில சுபரே வாழ
நேத்திரம் நன்றாய் வாய்க்கும்
தோத்திடும் ஆறான் வேயம்
வியமானால் சொர்ணம் மில்லை. 329

என்பது.

நேத்திராதிபதிசுபனுடனேகாண, சுபாம்சம் ஏற, வியத்திலும் சுபன் இருக்க, நல்ல நேத்திரமுண்டு. ஆறாம் இடமுடையவன் வியத்தில் இருக்க வியாதிபதியும் அப்படி இருக்க தனம் ஈனம்.

அமர பூபதி யோகம்

இல்லெனும் இலக்க னாதி
கேந்திரத் திருக்க இந்து
வல்லவர் ஆறு பேர்கள்
உடன்கூட வியத்தில் உச்சம்

நல்லவன் ஒன்றே யாகில்
சொட்சஉச்ச மாகி னார்க்குப்
பல்பல தேச மன்னாய்ப்
பூபதி வியத்தில் பாரே. 330

என்பது.

இலக்கனாதிபதி கேந்திரத்தில் இருக்க, சந்திரன் ஆறு கிரகங்களுடனே கூட, வியத்தில் ஒரு கிரகம் உச்சனாக இருக்க, சொட்சேத்திரமாய் அமர பூபதியாக இருப்பான்.

அரசயோகம்

வியத்தினான் மூல கோண
கேந்திரம் விரும்பி நல்லோர்
பயப்புடன் சுபரே பார்க்கப்
பன்னிரண் டொருவ னுச்சம்
உய்த்திடிற் இராச யோகம்
வியனுடன் கர்மம் நோக்கில்
வயப்படப் பார்க்க நல்லோர்
பார்த்திட யோகம் சொல்லே. 331

என்பது.

வியாதிபதி மூலத்திரிகோணத்திலிருந்து, அவனை மித்திரர் பார்க்க, நல்லோர் பார்த்திட பன்னிரண்டில் ஒரு கிரகம் உச்சனாக இருக்க, சொட்சசேத்திரனாகப் பூபதியாக இருப்பான். கர்மாதிபதி உடனே வியாதிபதி கூட, அல்லது பார்க்க மித்துருவாய் இருக்க, சத்துரு கிரகமில்லாது இருக்க இராசராவான் என்றவாறு.

சொல்லிய சுகனும் கர்மன்
கூடிட வியத்தில் சுங்கன்
வல்லவன் வியனும் கேந்திர
கோணமாய் மகிழ்ந்து பார்க்கில்
நல்லவன் இராச கோவாய்
நரகர்களுக் கதிக மாகி
பலப்பல காலம் வாழும்
பக்தியால் மிக்க னாயே. 332

என்பது.

சுகாதிபதியும் கர்மாதிபதியும் கூடி இருக்க, வியாதிபதி சுபக்கிரகமாகக் கேந்திரத் திரிகோணத்தில் இருந்து பார்க்க இராசாவானாவான்.

கேமசரி யோகம்

அக்கமா மதிகேந் திரநா
லாமிடம் தனைபொன் பார்க்கத்
தக்கதாய்க் கீர்த்தி மானாய்ச்
சுகியனாய்த் தழைத்து வாழ்வான்
ஒக்கிலே பன்னி ரண்டாம்
பலமுற்றும் உரைத்தார் நூலோர்
மெய்க்கவே தமிழைத் தானே
வெங்கடேசனார் விளம்பி னாரே. 333

என்பது.

அமர பட்சத்துச் சந்திரன் கேந்திரத்தில் இருக்க, நான்காம் இடம் வியாழன் பார்த்திருக்க கேமசரி யோகம் என்பது.

பன்னிரண்டாம் பாவம் முற்றும்

குரு சிதம்பரம் முன்னிற்க இராமசெயம் புரட்டாசி மாதம் 20 வியாழக்கிழமை அன்று மிருகசீரிட நட்சத்திரத்தில் முற்றிற்று. முடித்தானேந்தலில் பிள்ளையவர்கள் பள்ளிக் கூடத்தில் பள்ளி ஓதவித்தபோது இந்தச் சுவடி எழுதினேன். சிதம்பரவாத்தியார் புத்திரன் தம்பாபிள்ளை பெருமாபிள்ளை மகன் பிச்சப்பிள்ளைக்கு பெரிய நாயமார் திருத்திப்படிக்கவே என்பது.

பாடல் முதல் குறிப்பு அகராதி

	பாடல் எண்
அக்கமா மதியுங்	333
அகண்டவா கனத்தான்	128
அத்திய புதனும்	191
அதியமாம் இலக்க	287
அமரர்தன் குருவும்	87
அருளிய வியேசன்	317
அவர்களில் தனத்தான்	66
அவமெனும் பத்தாம்	302
அற்பமாம் வெயாதி	255
அறைந்தெழு ஐந்த	86
அறைவதாய் ஆயுள்	249
ஆக்கினைத் தானம்	297
ஆகமாம் இலக்க	27
ஆகிய ஐந்தாம்	185
ஆசன இலாபத்	127
ஆட்சியாம் புகரும்	71
ஆமெனும் இலக்க	285
ஆமெனும் காம	251
ஆமெனும் தனத்தை	49
ஆமெனும் புத்தி	134
ஆய்ந்தகர் மத்தான்	240
ஆய்ந்திடும் புத்தி	180
ஆய்ந்துபார் தனத்தி	81
ஆயதோர் இலக்க	9
ஆயுவாஞ் சுபக்கோள்	256
ஆயுவாம் இலக்க	21
ஆயுவாம் இலக்க	143
ஆலமாம் இராகு	194
ஆலமாம் ஏழாம்	233
ஆனதோர் புத்தி	175
இச்சையாம் களத்தி	159
இந்துவும் ரோகத்தானும்	205
இரவியும் ரோக	192
இருந்த இலக்க	15

	பாடல் எண்
இருந்திடு தனத்தான்	84
இருப்பவன் ஏழாம்	229
இருப்பது இலக்க	68
இருப்பதோர் இலக்க	3
இயம்பிய வியேசன்	324
இயற்கையாம் இலக்க	151
இல்லிடம் சரமே	158
இல்லெனும் இலக்க	330
இல்லெனும் பிருகு	313
இல்லெனும் புத்தி	288
இல்லெனும் வியாழன்	137
இலக்கனன் அங்கி	10
இலக்கனன் இலாபம்	278
இலக்கனன் உடைய	144
இலங்கிய தார	241
இலங்கிய குடும்ப	31
இலாபத்தே பாவி	315
இலாபனுங் கோண	309
இலாபனும் பாக்கி	282
இழப்பதாம் எட்டில்	200
இளந்தையான் தனத்தான்	67
இளமையாம் இலக்க	227
இன்பமாம் இலக்க	24
ஈனமாம் பதியும்	168
உடம்படு தார	231
உடன்பொரு புகழும்	106
உடையவன் இலக்க	22
உண்டிடும் பிராது	57
உண்டெனும் இரவி	271
உண்டெனும் ஐந்தாம்	133
உண்டெனும் கர்ம	266
உண்டெனும் கர்ம	292
உண்டெனும் சகோதர	99
உம்பர்கோண் வியாழன்	38

	பாடல் எண்
உரைத்தசத் துருவான்	60
உரையெனும் இலக்க	260
உள்ளதோர் இரவி	2
ஊண்தரு தனத்தான்	88
ஊத்தமாம் புகரே	209
என்னவே நேத்தி	250
ஏழிலே சனியன் நீசம்	167
ஒண்ணலார் தான	208
ஒன்பதாம் தானம்	264
ஒன்றுநான் கேழு	252
கட்டதாம் ஏழாம்	244
கடவுளாந் சுடரே	327
கடிமையாம் இலக்கி	272
கடுகிய பிராது	107
கர்மனும் வியத்தை	114
கருத்தெனும் தனத்தா	89
கழிந்திடும் ஏழான்	119
கல்லெனும் கர்ம	290
களமெனும் மூன்றாம்	105
கற்பதாம் வாக்கு	42
கற்றுள மதியும்	265
கனகனாம் தனத்தான்	73
காயமாம் நான்காம்	286
காலமாம் தனேசன்	79
கிட்டிய கிரகம்	155
கிரகனாம் நான்காம்	153
கீர்த்தியான் தான	300
குடும்பனும் பரம	37
குடும்பத்தில் பாவி	33
குருவுடன் புகர்தான்	267
கூடிய தனத்தின்	93
கூடிய ஸ்திரியாம்	232
கூடிய கிரகம்	55
கூறிய புத்தி	177
கூறிய மூன்றாம்	96

	பாடல் எண்
கேள்வியாம் வெங்க	110
சங்கமாம் ஏழாம்	236
சங்கையாம் இலாப	216
சங்கையாம் சத்து	160
சத்துருத்தானம்	207
சயித்திடும் ஆறான்	202
சாத்திய நாமம்	25
சாதியாம் இலக்க	113
சார்ந்திடும் பிருகு	223
சாற்றிய அட்ட	261
சாற்றிய தனத்தான்	197
சாற்றிய புகரே	111
சிலவிடும் கலைகள்	117
சிறப்புடன் முனிவோர்	213
சீரெனும் இலக்க	1
சுகம்பெறு ஏழாம்	174
சுகமெனும் இலக்க	13
சுகமெனும் களத்தி	222
சுகமெனும் பிருகு	165
சுட்கமாம் தார	243
செப்பிய இராகு	196
செப்பிய இலக்க	112
செய்வதாம் கர்ம	299
செய்தியாம் மூன்றாம்	94
செயல்பொரு தனத்தான்	77
செழித்திடும் இலாபம்	314
செழித்திடும் கிரக	130
சேதமாம் கர்மன்	64
சேத்திர தானம்	131
சேந்திர முகத்தான்	40
சேர்ந்திடும் களத்தி	139
சேர்ந்தெழும் இலக்க	62
சேர்கிலா இலக்க	178
சேரவாம் தனேசன்	36
சேருவன் பாவி	169

	பாடல் எண்		பாடல் எண்
சொல்லிய இலக்க	8	திண்ணமாங் கர்ம	328
சொல்லிய இலக்க	18	திரிவமா தார	218
சொல்லிய களத்தி	121	திரியென மூன்றாந்	259
சொல்லிய சுகனும்	332	தீர்க்கமாம் இலக்க	23
சொல்லிய மதியா	198	தீர்க்கமாம் இலக்க	14
சொல்லிய கேந்தி	46	தீர்க்கமாம் இலக்க	146
சொன்னமாம் களத்தி	214	தீரனாம் பிராது	103
சொன்னமாம் வியேனும்	321	துகமெனும் குருவும்	59
ஞாதியாம் ஆறான்	210	தும்பிசே ராசன்	125
தகிலியாய் புத்தி	115	தூரமாம் இராகு	298
தந்தையாந் தான்	275	தூரமாம் இலக்க	230
தந்தையாந் தானந்	270	தூலமாம் இலக்க	11
தரித்திடும் களத்தி	116	தெண்டிய தனேசன்	63
தருமமெனும் தார	279	தெத்திய புதனும்	135
தவனெனும் ஆறாம்	188	தெரிதரும் நேத்தி	29
தழைத்தெழும் ஐந்தாம்	132	தேடிய பாக்கி	268
தனத்தாதி இருந்த	35	தேகமாய் நாலான்	306
தனத்தினான் சலத்தி	39	தேனெனும் ஐந்தான்	186
தனத்தனும் இலக்க	52	தைரிய தனத்தான்	101
தனத்தோனும் குரூர	65	தோன்றிடும் ஆறான்	170
தனபதி யுடனே	138	நங்கையே இலக்க	142
தாமெனும் இரவி	30	நசித்திடும் எட்டி	257
தாயெனும் இலக்க	76	நட்பதாம் பத்தாம்	303
தாவிக்கும் கர்ம	304	நம்பியாம் வியாழ	147
தாரநா யகனும்	173	நல்கிய பாக்கி	126
தாரமாம் காரகன்	140	நல்லதாம் இலக்க	12
தாரெனும் இலக்க	226	நல்லதாம் சொட்ச	220
தாரெனும் சுபரே	219	நல்லதாம் வியத்து	312
தானமாந் தானந்	284	நல்லதாம் பந்து	157
தானமான வாக்கு	43	நல்லதோர் தனத்தான்	70
தானெனும் வியனைப்	320	நல்லவன் புகரும்	242
தானவன் இலக்க	6	நவிலரு மதியும்	122
தானவன்பிது ருத்தா	322	நன்றெனும் இலக்க	7
தானெனும் கர்ம	120	நன்றெனும் இலக்க	16
தானெனும் பிருகு	212	நன்றெனும் தனத்தான்	32

	பாடல் எண்		பாடல் எண்
நன்றெனும் தனத்தான்	54	பொசிப்பதாம் ஏழில்	251
நன்றெனும் வாக்கு	45	பொசிப்பெனும் தனத்தான்	85
நன்றென வியன்	325	போதமாம் பாக்கி	211
நன்றெனும் ரோக	193	மகவெனும் தானம்	171
நாசமாம் சகோதர	98	மங்கையே வியத்தில்	311
நாசமாம் புத்திர	184	மட்டில்லா பாக்கி	217
நாசமாம் வியத்தா	318	மத்தமாம் வாக்கா	75
நாட்டிய கர்ம	294	மதிகுரு தாரே	246
நாடிய வாக	164	மதித்திடும் பாவர்	148
நாளுமே சுபக்கோள்	56	மதிப்பில்லாக் கர்ம	301
நித்தியகர்ம	296	மரித்திடுந் தானங்	263
நேசமாம் ஆறில்	206	மரைவெனும் இலக்க	258
பத்திய புத்தி	179	மன்னிய கர்ம	326
பண்ணிய செவ்வாய்	91	மன்னிய தனத்தான்	90
பராகிரம தானம்	102	மனையெனும் களத்தி	215
பரானுமாய் புத்தி	277	மாதரே இலக்க	51
பலமுறும் பன்னி	316	மாதரே ஏழாம்	238
பலிப்பது ஏழாம்	189	மாதரே களத்தி	221
பன்னிய தனத்தான்	48	மாய்ந்திடு மதியும்	190
பாக்கியன் ஒன்பதாம்	289	மாயவன் இரண்டாம்	195
பாக்கியன் குரூர	281	மாலெனுங் தார	283
பாக்கியன் கேந்தி	166	மாள்வுறும் ஆயுள்	248
பார்க்கிலும் சேத்தி	129	மிக்கதாய் இலக்க	305
பாரமாம் புதனும்	234	மிக்கதாய் மதிக்க	149
பாரியாம் ஏழாம்	141	மிகவெனும் இரவி	61
பாரிலே சுகத்தில்	123	மிகவெனும் பிராது	100
பாவிகள் லாப	253	மிஞ்சிய ஐந்தாம்	187
பிள்ளையாம் இலக்க	182	மிடியெனும் ஆறாம்	204
பிள்ளையாம் மதியும்	118	மிருகனாம் சனியும்	237
புந்தியும் கர்மத்	295	மின்னிய கேந்தி	276
புத்திரகா ரகனும்	183	மின்னிய இரவி	28
புத்திரத் தானத்தான்	176	முயற்சியாய் தாதை	273
பெறுவதாம் களத்தி	224	முன்பதாம் புகரும்	83
பொசித்திடும் தனத்தான்	34	முன்னிய கேந்தி	247
பொசிப்பதாம் ஏழில்	245	முன்னிய செவ்வாய்	201

	பாடல் எண்		பாடல் எண்
முன்னிய மந்தன்	199	வாய்த்துடன் நேத்தி	329
மூட்டிய மூன்றாம்	104	வாய்த்தெழும் இலாப	72
மூன்றிடம் உடைய	150	வாய்த்தெழும் குடும்ப	41
மேவிய சனியும்	74	வாலிபன் தனத்தா	82
யோகமாம் இலக்க	17	வாழ்பவள் ஏழாம்	225
யோகமாம் தான	108	வாழுமோர் இலக்க	19
ரோகமாம் தான	203	வானதாம் இலக்க	20
வகுத்திடும் இலாப	307	வானுறை மதியும்	293
வகுத்திடும் வாக்கு	47	வானெனும் இலக்க	4
வண்ணமாம் இலக்க	319	வானெனும் ஏழாம்	235
வண்ணமாம் கார	228	வானெனும் ஏழாம்	239
வண்ணமாம் பாக்கி	78	வானெனும் ஒன்ப	145
வண்ணமாம் பாக்கி	262	வானெனும் கேந்தி	44
வண்ணமாம் பாம்பும்	161	வானெனும் பிருகு	269
வண்ணமாம் சுகத்தானத்தி	163	விந்துவாம் இலக்க	162
வல்லதாம் சட்ட	254	விதியெனும் தானந்	274
வல்லவர் பாவர்	95	வியத்தி னான்முக்	331
வல்லவன் பிராது	58	வியத்தினில் புகரே	69
வழியெனும் ஆயுள்	323	விரித்திடு மூன்றாம்	152
வளமுறும் இலக்க	181	விரித்தோனாம் இலக்க	26
வனமிகு இராகு	291	விலக்கெனும் பார்த்து	97
வனைகழல் மதியும்	109	விளம்பிய இலக்கி	308
வாக்கிலோர் காய	92	விளம்பிய தனத்தான்	53
வாக்கினான் சட்ட	80	வீணெனும் பாக்கி	280
வாகன இலாபம்	124	வீரனாம் லாப	310
வாய்ந்த மதியும்	172	வெந்துதா னத்தான்	156
வாய்த்திடும் வாக	164	வேதனாம் குருவும்	50

பின்னிணைப்பு : 1

பாவங்களினால் அறியக் கூடிய பலன்கள்

முதலாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. சரீரம், 2. சரீரகாந்தி, 3. வடிவம், 4. பெருந்தனம், 5. வயிறு, 6. சிரசு, 7. ஆபரணம், 8. நினைப்பு, 9. மனக்கவலை, 10. அழகு, 11. புகழ், 12. அடையாளம், 13. மகிழ்ச்சி, 14. ஆயுசு, 15. ஜாதி, 16. ஆசாரம், 17. இரட்சித்தல், 18. ஜீவனம், 19. சரீரபுஷ்டி, 20. நித்திரை, 21. கனவு, 22. தலைமயிர், 23. அங்க அடையாளம், 24. புலன்.

இரண்டாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. அதிஷ்டம், 2. தனவிருத்தி, 3. குடும்பம், 4. வலக்கண், 5. கல்வி, 6. பெரும்செல்வம், 7. வாக்கு, 8. சாஸ்திரக்கேள்வி, 9. வேகமான நடை, 10. மனம், 11. மறுத்துரைத்தல், 12. பொன், 13. நவரத்தினம், 14. தானியம், 15. கிரய விக்கிரயம், 16. தன சம்பாத்திய முயற்சிகள், 17. சிநேகிதரால் வருமானம், 18. அன்னியரால் ஜீவனம், 19. வஸ்திரம், 20. குதிரை, 21. முகம், நாக்கு, 22. நகம், 23. போஜனம், 24. சத்யாசத்யம், 25. கோபம், 26. தாய்விசனம்.

மூன்றாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. வெற்றி, 2. எண்வகை யோகம், 3. ஆளடிமை, 4. சங்கீதம், 5. தேகபலம், 6. கனிஷ்ட சகோதரம், 7. காது நோய், 8. கர்ணபூஷணம், 9. போசன பாத்திரம், 10. பராக்கிரமம், 11. தொழில் விருத்தி, 12. தைரியம், 13. எஜமான், 14. பூமிவிருத்தி, 15. பூமியில் இலாபம், 16. நல்ல காரியம், 17. சௌகரியம், 18. வெற்றி, 19. பாதம், 20. கழுத்து, 21. கண்டசுருதி, 22. தாய்பாசம், 23. கஷ்டபோசனம், 24. சாமர்த்தியம், 25. யுத்தம், 26. தாய் விசனம்.

நான்காவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. வித்தை, 2. வாகனம், 3. சுபகாரியம், 4. வியாபாரம், 5. வீடு, 6. வெற்றி, கீர்த்தி, 7. சுகம், 8. மாத்ரு, 9. சுற்றத்தார், 10. புதையல், 11. தாய், 12. சுகந்தம், பால், பசு, கன்று, 14. ஆலய சேவை, 15. சிநேகிதர், 16. ஔஷதம், 17. கமனானுகமனம், 18. ஸ்தான சலனத்தினால் இலாபம், 19. வாகன சுகம், 20. இராஜ கிருகப்பிரவேசம், 21 தேசாதிகாரம், 22. வித்தியாபராக்கிரமம், 23. ஜெயம், 24. விநோதம், 25. ஆலோசனை, 26. கனவு, 27. பிதிர்கவலை, 28. விரதோபவாசம், 29. சமீப யாத்திரை.

ஐந்தாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. புத்திர ஒற்றுமை, 2. தந்தையின் தந்தை, 3. சந்ததி, 4. பூர்வ நல்வினை, 5. பிரபந்தவுணர்ச்சி, 6. கர்போற்பத்தி, 7. மந்திர உபதேசம், 8. அதர்வன வேதப்பயிற்சி, 9. புத்தி, 10. மனக்கூர்மை, 11. நீதிசாஸ்திரம், 12. புராணம், 13. மந்திராலோசனை, 14. புத்திரம், 15. சுபவார்த்தை, 16. தூர தேசத்தால் உண்டாகும் விசனம், 17. வித்யாபிரசங்கம்.

ஆறாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. அம்மான், 2. நோய், 3. பகைவர், 4. ஆயுதவிரணம், 5. தாயாதிகள், 6. கலகம், 7. சரீர வருத்தம், 8. பணநஷ்டம், 9. திருடர்பயம், 10. ஜலகண்டம், 11. ஸ்திரீவியாதி, 12. சர்ப்பகண்டம், 13. சிறைவாசம், 14. நாற்கால் ஜீவன், 15. தாஸஜநங்கள், 16. காரியவிக்னம், 17. சந்தேகம், 18. மந்தகுணம், 19. தூஷணம், 20. குரூரகாரியம், 21. வைசூரி.

ஏழாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. விவாக மனம், 2. சிற்றின்பம், 3. வழக்கு, 4. சுற்றம் சூழ்தல், 5. சன்மானம், 6. வியாபாரம், 7. விவாக காலம், 8. மனைவி ஆயுள், 9. வஸ்திர வியாபாரம், 10. போகசக்தி, 11. களத்திர சுகதுக்கம்.

எட்டாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. வாளாயுத காயம், 2. யுத்தம், 3. மலைமீதிருந்து வீழ்தல், 4. மீளாவியாதி, 5. காரியவிக்னம், 6. நீங்காத விசனம், 7. நீங்காத பல துன்பம், 8. மானக் குறைவு, 9. செவினால் நஷ்டம், 10. ஆயுள். 11. நீங்காத பகை, 12. யுத்த பூமி, 13. வீண் அலைச்சல், 14. பாவம், 15. அஞ்ஞானம், 16. களத்திர விரோதம், 17. பயம்.

ஒன்பதாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. தகப்பன், 2. குலவிருத்தி, 3. தருமம், 4. பிதுரார்ச்சிதம், 5. மடாதிக்கம், 6. மேலான தருமம், 7. குளம் வெட்டல், 8. ஆலய திருப்பணி, 9. குருவுபதேசம், 10. தண்ணீர்பந்தல், 11. தருமகிணறுவெட்டல், 12. இஷ்ட செல்வம் பெற, 13. வேதாத்யயனம், 14. ஞானவித்தை, 15. குருகார்ய நிர்வாகம், 16. சேவை, 17. விசுவாசம், 18. தீட்சை, 19. தீர்த்த யாத்திரை, 20. தெய்வ சிந்தை, 21. மகநீய தரிசனம், 22. ஜலபிரதேசம், 23. சகோதர சுகதுக்கம், 24. பட்டாபிஷேகம், 25. விதரணம்.

பத்தாவது பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. பலபுண்ணியம், 2. இராஜாதிக்கம், 3. நகரஸ்தாபிதம், 4. காரியகர்மம், 5. கிருபை, 6. பூஜைவீடு, 7. சிரார்தம், 8. தெய்வ வழிபாடு, 9. சதுரங்கபலம், 10. பிரபலகீர்த்தி, 11. மானம், 12. காயகற்பம், 13. வஸ்திரம், 14. மலை, 15. தூரதேச சமாசாரம், 16. ஜீவனம், 17. முத்திராதிகாரம்.

பதினோராம் பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. மூத்த சகோதரம், 2. சேவை செய்வோர்கள், 3. இளைய மனைவி, 4. பொன் வித்தைகளால் ஆதாயம் கிடைத்தல், 5. விவசாயம், 6. குதிரை, யானை, 7. தெளிந்த அறிவு, 8. பல்லக்கு, மனதுக்க நிவர்த்தி, 10. சால்வை, 11. சாஸ்திராதிகாரம், 12. கார்யசித்தி, 13. இலாப காரியம், 14. தொழிலின் இலாப நஷ்டங்கள், 15. நஷ்ட தன பிராப்தி, 16. சத்யம், 17. பிரீதி, 18. மாருதுநேயம்.

பன்னிரண்டாம் பாவத்தினால் அறியக் கூடியவைகள்

1. பாபச்செலவு, 2. பிரதேசத்தொழில், 3. பணச் செலவினால் பெரும் சுகம், 4. பயண சுகம், 5. வியாச்சியத் தொழில் 6. மகப்பேறு, 7. தனம், புண்ணியம், 9. தியாகம், 10. யாகம், 11. பிதுர்விசனம், 12. குலம், 13. போகம், 14. அம்மானால் உண்டாகும் சுகதுக்கங்கள், 15. பந்தனம், 16. மோட்சம், 17. துக்கம்.

பின்னிணைப்பு : 2

பத்துவித வர்க்கங்கள்

1. இராசிச்சக்கரம்

சாதகன் பிறந்தபொழுது கோள்கள் மற்றும் இலக்கனம் எந்தெந்த இராசிகளில் இருந்தன என்பதைக் கூறுவது இராசிச் சக்கரமாகும்.

2. ஓரை

ஆண் ராசிக்கு முதல் பதினைந்து பாகைக்கு சூரியன் ஓராதிபதியாகும். பின் பதினைந்து பாகைக்கு சந்திரன் ஓராதிபதியாகும். பெண் ராசிக்கு முதல் பதினைந்து பாகைக்கு சந்திரன் ஓராதிபதியாகும். பின் பதினைந்து பாகைக்கு சூரியன் ஓராதிபதியாகும். ஓரையின் மூலம் செல்வம், சுகங்களைப் பற்றி அறிய முடிகிறது.

3. திரேகாணம்

ஒவ்வொரு இராசியையும் மூன்றாகப் பிரிப்பது திரேகாணம் ஆகும். ஒவ்வொரு இராசியிலும் முப்பது பாகைகள் உள்ளன. இதை மூன்றாகப் பிரிக்க, ஒவ்வொரு திரேகாணத்திற்கும் பத்துப் பாகைகள் வரும். முதல் பத்துப் பாகைகள் முதல் திரேகாணமாகும். பத்துப் பாகை முதல் இருபது பாகைகள் வரை இரண்டாவது திரேகாணமாகும். இருபது பாகைகள் முதல் முப்பது பாகைகள் வரை மூன்றாவது திரேகாணமாகும். இந்தத் திரேகாணத்தால் சகோதரர்களைப் பற்றி அறியலாம்.

4. நவாம்சம்

ஒரு இராசியை ஒன்பது பிரிவுகளாகப் பிரிப்பதே நவாம்சமாகும். ஒரு இராசியில் மூன்று நட்சத்திரங்களின் ஒன்பது பாதங்களில், எந்தப் பாதத்தில் கோள்கள் இருக்கின்றன என்பதை அறிய உதவுவதே நவாம்சமாகும். ஒரு கோள் எந்த வீட்டில் இருக்கிறதென்பதைக் கொண்டு பலன்

சொல்லுவதைப் போல், எந்த நட்சத்திரக் காலில் இருக்கிறது என்பதைக் கொண்டும் பலன் சொல்ல உதவுவது நவாம்சமாகும். இந்த நவாம்சத்தைக் கொண்டு மனைவியைப் பற்றி அறியலாம்.

5. துவாதசாம்சம்

ஒரு இராசியைப் பன்னிரண்டாகப் பிரித்து, எந்தப் பிரிவில் அந்தக்கோள் உள்ளதோ அதைக்கொண்டு பலன் சொல்வது துவாதசாம்சமாகும். ஒரு இராசிக்குடைய முப்பது பாகைகளை பன்னிரண்டாகப் பிரிக்க, ஒவ்வொரு பிரிவுக்கும் 2 பாகை, 30 கலைகள் ஆகும். துவாதசாம்சத்தின் மூலம் தந்தையின் பெருமை, செல்வம் முதலியவற்றைக் காணலாம்.

6. திரிசாம்சம்

சூரியன், சந்திரன் ஆகிய இரு கோள்களைத் தவிர ஏனைய கோள்களான செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஐந்து கோள்களுக்கும் ஒரு இராசியைப் பிரித்தளிப்பதே திரிசாம்சமாகும். இதில் செவ்வாய், சனி மற்றும் சுக்கிரன் ஆகிய மூவருக்கும் ஐந்தைந்து பாகைகள் வீதம் பதினைந்து பாகைகளும், குருவுக்கு எட்டு பாகைகளும், புதனுக்கு ஏழு பாகைகளும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

7. சப்தமாம்சம்

ஒரு இராசியை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பதே சப்தமாம்சமாகும். ஒரு இராசிக்குடைய பாகை முப்பதை ஏழால் வகுக்க, ஒரு பங்குக்கு 4 பாகைகளும் 17 கலைகளும் கிடைக்கும். மேஷ ராசியின் முதல் பங்கு மேஷம். இரண்டாம் பங்கு ரிஷபம். மூன்றாம் பங்கு மிதுனம். நான்காம் பங்கு கடகம். ஐந்தாம் பங்கு சிம்மம். ஆறாம் பங்கு கன்னி, ஏழாம் பங்கு துலாம் ஆகும். இதற்கு மேல் ரிஷப இராசியின் முதல் பங்காக விரிச்சிகம் தொடங்கி, கடைசி ஏழாவது பங்காக ரிஷபத்தில் முடியும். இவ்விதம் ஆண் இராசிகளுக்கு அந்தந்த இராசியிலேயே துவங்கி ஏழு பங்காக வரும் பெண்

இராசிகளுக்குத் தன் இராசியில் இருந்து ஏழாவது இராசியில் தொடங்கி, தனது இராசியிலேயே முடியும். சப்தமாம்சத்தின் மூலம் புத்திரத்தைப் பற்றி அறியலாம்.

8. தசாம்சம்

ஒரு இராசியைப் பத்துக் கூறுகளாகப் பிரிப்பதே தசாம்சமாகும். ஒரு இராசியினுடைய முப்பது பாகைகளைப் பத்தால் வகுக்க, ஒரு பங்கிற்கு மூன்று பாகை வரும். மேஷ இராசிக்கு முதல் மூன்று பாகையில் மேஷம் எனத் தொடங்கி, வரிசையாக, ரிஷபம், மிதுனம், கடகம் எனப் பிரித்து பத்தாவது மகரம் என முடிவுறும். ரிஷப இராசிக்கு, மகரத்தில் முதல் பங்கு தொடங்கி துலாத்தில் முடிவுறும். ஆண் இராசிகளுக்குத் தன் இராசியிலேயே தொடங்கி, தன் இராசிக்குப் பத்தாவது இராசியில் முடிவுறும். பெண் இராசிகளுக்குத் தன் இராசியில் இருந்து ஒன்பதாவது இராசியில் தொடங்கி, தன் இராசி வழியாகத் தனது இராசிக்கு ஆறாவது இராசியில் முடிவு பெறும். தசாம்சம் மூலமாக தொழிலைப் பற்றி அறியலாம்.

9. சோடசாம்சம்

ஒரு இராசியை பதினாறு பாகங்களாகப் பிரிப்பதற்கு சோடசாம்சம் என்று பெயர். இதை கலாம்சம் என்றும் கூறுவர். பிரம்மா, விஷ்ணு, சிவன், சூரியன் ஆகிய நால்வருக்கும் ஒவ்வொரு இராசியையும் பிரித்துக் கொடுப்பதே சோடசாம்சமாகும். ஒரு இராசிக்குரிய முப்பது பாகைகளைப் பதினாறால் வகுக்க, ஒரு பகுதிக்குப் பாகை 1 கலை 52½ ஆகும். ஆண் இராசிகளான மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய இராசிகளுக்கு முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன், சூரியன் என்ற வரிசையிலும், பெண் இராசிகளான ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறு இராசிகளுக்குச் சூரியன், சிவன், விஷ்ணு, பிரம்மா என இறங்கு வரிசையில் அமையும். சோடசாம்சத்தைக் கொண்டு வாகனம், கால்நடை போன்றவற்றை அறியலாம்.

10. சஷ்ட்யாம்சம்

ஒரு இராசியை அறுபது பிரிவாகப் பிரிப்பது சஷ்ட்யாம்சமாகும். ஒரு இராசிக்குடைய முப்பது பாகைகளை அறுபதால் வகுக்க, ஒரு அம்சம் ½ பாகை அல்லது 30 கலைகளாக அமையும். ஆண் இராசிகளுக்கு அறுபது அம்சங்களில் முதல் அம்சமான கோராம்சம் தொடங்கி, அறுபதாவது அம்சமான உறிந்துரேகாம்சத்தில் முடிவடையும். பெண்களுக்கு உறிந்துரேகாம்சம் தொடங்கி கோராம்சம் வரையிலான இறங்கு வரிசையில் காணப்படும். கிரகங்களின் மென், கடின குணங்களை சஷ்ட்யாம்சம் கொண்டு அறியலாம்.

இந்தப் பத்து அம்சங்களும் தசவர்க்கங்கள் எனப்படும். இந்த வர்க்கங்களில், இராசிச் சக்கரத்தில் ஒரு இராசியில் உள்ள கிரகம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சக்கரங்களில் அதே இராசிகளில் இருப்பின் பலமுள்ள கிரகமாகும். அவ்வர்க்கங்களில்,

இரண்டு வர்க்கங்கள் ஒன்றுகூடின்			பாரிஜாதாம்சம்
மூன்று	,,	,,	உத்தமாம்சம்
நான்கு	,,	,,	கோபுராம்சம்
ஐந்து	,,	,,	சிங்காசனாம்சம்
ஆறு	,,	,,	பர்வதாம்சம்
ஏழு	,,	,,	தேவலோகாம்சம்
எட்டு	,,	,,	வைகேசியாம்சம்
ஒன்பது	,,	,,	ஐராவதாம்சம்
பத்து	,,	,,	தேவேந்திராம்சம்

என்று சாதக சிந்தாமணி எடுத்துரைக்கிறது.

துணை நூல் பட்டியல்

1. **சர்வார்த்த சிந்தாமணி** (முதல் பாகம்) 'சிந்தாமணி' (தமிழா.) கிரி டிரேடிங் ஏஜென்ஸி, மயிலாப்பூர், சென்னை - 4, நான்காம் பதிப்பு, மே-1999.

2. **சர்வார்த்த சிந்தாமணி** (இரண்டாம் பாகம்) 'சிந்தாமணி' (தமிழா.), கிரி டிரேடிங் ஏஜென்ஸி, மயிலாப்பூர், சென்னை-4, நான்காம் பதிப்பு, ஏப்ரல்-1998.

3. **சர்வார்த்த சிந்தாமணி** (மூன்றாம் பாகம்) 'சிந்தாமணி' (தமிழா.), கிரி டிரேடிங் ஏஜென்ஸி, மயிலாப்பூர், சென்னை-4, நான்காம் பதிப்பு, நவம்பர்-2002.

4. **சாதக சூடாமணி மூலமும் உரையும்,** எஸ். பி. இராமச்சந்திரன்(பதிப்பு), லோட்டஸ் பப்ளிஷிங் ஹவுஸ், வடபழனி, சென்னை-26, முதல் பதிப்பு, அக்டோபர்-1999.

5. **நவக்கிரக சிந்தாமணி என்ற சாதக சூடாமணி,** மார்க்கலிங்க சோதிடர்(பதிப்பு), சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு சன்ஸ, சக்கரவர்த்தி பிரஸ், சென்னை, 1934.